DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
# உதயன்
கீர்த்திக்கும் தமிழ் உலகில் உலகில் ஒளி வீசும் ...
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca

உதயம் 1330
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 1, 2021

## "தேசிய உண்மை மற்றும் நல்லிணக்க தினம் பூர்வீக கனேடியர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நாள், அது அனைத்து கனேடியர்களுக்குமானது அல்ல"

### ஒட்டாவாவில் அங்குரார்ப்பண உரையாற்றிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு



"30ம் திகதி தொடக்கம் கனடாவில் அமுலுக்கு வரவுள்ள தேசிய உண்மை மற்றும் நல்லிணக்க தினம் பூர்வீக கனேடியர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நாளாகும், அது அனைத்து கனேடியர்களுக்கும் உரியது அல்ல"

இவ்வாறு கடந்த புதன்கிழமையன்று ஒட்டாவா மாநகரில் பாராளுமன்றத்திற்கு முன்பாக அமைக்கப்பெற்ற விசேட இடத்தில் உரையாற்றிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார்.

நேற்று செப்டம்பர் மாதம் 30ம் திகதியன்று அமுலுக்கு வந்துள்ள 'தேசிய உண்மை மற்றும் நல்லிணக்க தினம்' தொடர்பான முதல் நாள் நிகழ்வில் அவர் கலந்து கொண்டு ஒரு உருக்கமான உரையை ஆற்றினார்.

*(தொடர்ச்சி உள்ளே 23ம் பக்கத்தில்)*



## அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சரினால் பயமுறுத்தப்பட்ட எட்டு தமிழ் அரசியல் கைதிகள் அனைத்து குற்றங்களிலிருந்தும் தம்மை விடுவிக்குமாறு நீதிமன்றத்தை நாடியுள்ளனர்

அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சரினால் பயமுறுத்தப்பட்ட பூபாலசிங்கம் சூரியபாலன்- மதியரசன் கலக்சன்- கணேசன் தர்சன்- கந்தப்பு கஜேந்திரன்- இராசதுரை திருவருள்- கணேசமூர்த்தி சிதுர்சன்- மெய்யமுத்து சுதாகரன்- ரீ, கந்தரூபன் ஆகிய எட்டு தமிழ் அரசியல் கைதிகள் அனைத்து குற்றங்களிலிருந்தும் தம்மை விடுவிக்குமாறு நீதிமன்றத்தை நாடியுள்ளனர்
இது தொடர்பாக எமக்கு கிடைத்துள்ள விபரங்கள்பின்வருமாறு:



இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய சம்பவம் ஊடாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக கூறி, குறித்த சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 தமிழ் அரசியல் கைதிகள் அடிப்படை உரிமை மீறல் மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

*(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
107 Dundas St. East Mississauga, ON. L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 272 1222
905 794 4404

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8




# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

## உணவகத்தில் வேலை வாய்ப்புக்கள்

**Etobicoke, Mississauga** ஆகிய நகரங்களில் உள்ள கனடிய உணவகங்களில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உடடியாக உண்டு. **Cooks** (சம்பளம் $ 20.00), **Kitchen Helpers** (சம்பளம் $ 20.00), **Waiters** ஆகிய வேலைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: (416) 825-7785 அல்லது (416) 827-4426

## காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை. சிறிது அனுபவம் விரும்பத்தக்கது. தகுந்த சம்ளம் வழங்கப்படும். அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.

**Call: (416) 701-0003**

## CUSTODIAN WANTED

Uxbridge நகரத்தில் அமைந்துள்ள Uxbridge Montessori School பாடசாலைக்கு custodian பதவிக்கு ஒருவர் தேவை. இது ஒரு full-time, permanent வேலை வாய்ப்பு ஆகும். பாடசாலையின் உட்புற வெளிப்புற பகுதிகளை சுத்தமாக பராமரிக்க வேண்டும். அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். Pickering, Oshawa, Stouffville, Ajax ஆகிய நகரங்களில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆர்முள்ளவர்கள் **Natkunam** (416) 564-5884 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

**Email resume to: ums2@sympatico.ca**

## Help Wanted

சரவண பவான் உணவகத்திற்கு தோசை சுடுபவர் மற்றும் **kitchen helper and dishwasher** தேவை.

**contact:**

info@saravanabhavan.ca

## House for Sale in Srilanka

**Sale of house on 9 perches land close to Sri Jayawardenapura Hospital at Vijithapura, Kotte.**

**Serious buyers only. Please Contact:**
**hummingbirdnov2018@gmail.com**

## வேலை வாய்ப்பு

**Scarborough** நகரில் **Markham / Ellesmere** சந்திப்புக்கு அருகில் **Manufacturing Workers** மற்றும் **Forklift Driver** வேலைகளுக்கு ஆட்கள் தேவை. **Full-time, Morning Shifts.**

**Looking for Workers and Forklift Driver to add to our team. We are looking for hard-working and dedicated people for a long-term position.**

தொடர்புகளுக்கு: **ESSAN**

**(647) 993-2872**

## BASEMENT FOR RENT

ஸ்காபுறோவில் **Brimley / Lawrence** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 3 அறைகள் கொண்ட **basement** உடனடியாக வாடகைக்கு உண்டு. தமிழர்கள் கடைகள், பாடசாலைகள், வைத்தியசாலை ஆகியன மிக அருகில் அமைந்துள்ளன.

தொடர்புகளுக்கு:
**(647) 292-4741**

## Renovation Work

**Call us for all your renovation needs:**

- Basement
- Painting
- Bathroom Reno
- Kitchen Reno
- Permits, and Construction

**416-706-8160**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

# உதயன் கதிரோட்டம்

## கனடாவில் நேற்று முதல் அறிவிக்கப்பெற்ற 'தேசிய உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான நாள்' வரவேற்கப்பட வேண்டியது

நேற்று வியாழக்கிழமை செப்டம்பர் 30 கனடாவில் 'உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான முதலாவது தேசிய தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடாவின் பழங்குடியின குழந்தைகள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு உணர்வு சார்ந்த உடல் சார்ந்த மற்றும் பாலியல் சார்ந்த துஸ்பிரயோகத்திற்கு உள்ளான அந்த நாட்களை மேற்படி கனடாவின் பழங்குடி மக்கள் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக உள்ளார்.

அரசு நிதியுதவி பெறும் வதிவிட பாடசாலைகளில் சேர்ந்து கொள்ளும் வண்ணம் கட்டாயப்படுத்தப்பட்ட பழங்குடியினத்தைச் சேர்ந்த குழந்தைகளை கொடுமைப்படுத்திய பின்னர் அதற்கு கட்டுப்படாத குழந்தைகளை கொன்று புதைத்த கொடியவர்களை தண்டிக்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது

இவ்வாறான கொடுமைகளை இழைத்தவர்களை தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு சம்மதம் தெரிவித்த கனடிய அரசு பாதிக்கப்பட்ட குழந்தைகளை நினைவு கூரவும் கௌரவிக்கும் வகையிலும் கனடாவின் மத்திய அரசு ஜூன் மாதம் தேசிய தினத்தை உருவாக்கியது. பள்ளிகளில் பலர் இறந்தனர், மேலும் இந்த ஆண்டு பல நிறுவனங்களின் முந்தைய மைதானங்களுக்கு அருகில் அடையாளம் காணப்படாத கல்லறைகளின் கண்டுபிடிப்புகள் கனடாவின் இனப்படுகொலை வரலாற்றில் ஒரு புதிய கணக்கீட்டைத் தூண்டியது.

செப்டம்பர் 30 ஆனது தோடம்பழ நிறத்திலான சட்டையை அணியும் தினமாக அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது,

மக்கள் அந்த அறிக்கைகளைப் படிப்பதன் மூலம் "பழங்குடியின மக்களின் வரலாறு, அனுபவங்கள், நம்பிக்கைகள், கனவுகள், அபிலாசைகள்" பற்றிய புரிதலை மேலும் அதிகரிக்க முடியும்,

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறாக பாடசாலையில் கல்வி கற்பதற்காக பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட பிள்ளைகள் இந்த உலகத்தை விட்டு பிரிக்கப்பட்டு விட்டார்கள் என்று அறிந்து கொள்ள முடியாமல் இருந்த அவர்களது பெற்றோர்களின் அவலத்தை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறான ஒரு அறிவிப்பு வெளியானது இந்த நாட்டில் வாழும் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் பாதுகாப்பான ஒன்றாக இருக்கும் என்று நாமும் எதிர்பார்ப்போமாக!

## கனடா 'உதயன்' பத்திரிகையின் 'வெள்ளிவிழாச் சிறப்பிதழ் தொடர்ச்சியாக வழங்கப்பெறுகின்றது



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவரும் **COLOMBO WESLY COLLEGE** முன்னாள் ஆசிரியருமான கதிர்காமநாதன் அவர்கட்கு கனடா உதயன் பத்திரிகையின் "வெள்ளிவிழாச் சிறப்பிதழ் பிரதி, சனிக்கிழமை மிசிசாகா மாநகரில் வழங்கப்பெற்றது.

அங்கு நடைபெற்ற ஒரு சிறிய வைபவத்தில் உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியரோடு சந்திப்பு இடம்பெற்றது.

## 'CAMSONICS SECURITY SYSTEM INC' நிறுவன ரஜீவ் செபராசாவிற்கு சிறந்த வர்த்தக வெற்றியாளர் சான்றிதழ்



கனடாவில் சிறந்த வர்த்தக நிறுவனங்களை தரப்படுத்தும் நிறுவனமான CANADIAN BUSINESS REVIEW BOARD என்னும் அமைப்பு **'CAMSONICS SECURITY SYSTEM INC'** நிறுவன அதிபரும் முன்னாள் ஆசிரியருமான ரஜீவ் செபராசா அவர்களுக்கு சிறந்த வர்த்தக வெற்றியாளர் சான்றிதழ் வழங்கியுள்ளது.

உதயன் சர்வதேச விருது விழாவில் சிறந்த வர்த்தக வெற்றியாளருக்கான விருதினை பெற்ற ரஜீவ் செபராசா அவர்களை கனடா உதயன் நிறுவனம் வாழ்த்துகின்றது.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## கர்நாடக இசைக் கலைஞர் வர்ண இராமேஸ்வரன் கனடாவில் காலமானார்



யாழ்ப்பாணம் அளவெட்டி சிறுவிளான் கிராயட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான "ஈழத்து இசைவாருதி" கர்நாடக இசை மற்றும் மிருதங்கக் கலைஞர் வர்ண இராமேஸ்வரன் அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தியை எமது வாசக அன்பர்களோடும் அவரை நேசித்த இசை ரசிகர்களோடும் பகிர்ந்து கொள்கின்றோம்.

கனடாவில் " வர்ணம் இசைக் கல்லூரி" "வர்ணம் கிரியேசன்ஸ்" அசை சார்ந்த நிறுவனங்களை நடத்தி வந்த வர்ண ராமேஸ்வரன் அவர்கள் வாய்ப்பாட்டு மற்றும் மிருதங்கம் ஆகிய துறைகளில் ஒரு வித்தகராகத் திகழ்ந்தார்.

தாய் மண்ணின் விடுதலை சார்ந்த இசைப் படைப்புகளை தயாரித்து வெளியிடுவதில் முன்னின்று உழைத்த இவர் கவிஞர் புதுவை இரத்தினதுரையோடு " தமிழ்க் கலை பண்பாட்டு இயக்கத்தின்" பல தயாரிப்புக்களில் தனது பங்களிப்பை வழங்கியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பூதவுடல் அக்டோபர் மாதம் 10ம் திகதி மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பெற்று அடுத்த நாள் திங்கட்கிழமை தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு இலங்கை வாழ் அமரரின் நண்பர் நிரோஜன் அவர்களை 94770879130 என்னும் இலக்கத்திலும் கனடா வாழ் உறவினர் ரமணீகரன் அவர்களை 647 865 7972 என்னும் இலக்கத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

## யாழப்பாண பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்தப்பட்ட கற்கை நெறிகள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழப்பாண பல்கலைக் கழகத்தில் இடைநிறுத்தப்பட்ட சில கற்கை நெறிகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

அவற்றுள் ஒன்றான கலாச்சார சுற்றுலா சிறப்புக் கற்கை நெறியினை தொடர்வதற்கு ஆவண செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பாதிக்கப்பட்ட மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக சாதமான தீர்வு எட்டப்பட்டதுடன் வடக்கு கிழக்கு கல்விச் சமூகம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள், ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கிடையில் கல்வி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின்போதே குறித்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடந்த ஆண்டுகளில் கற்பிக்கப்பட்டு வந்த கலாசார சுற்றுலா சிறப்புக் கற்கைநெறியை இடைநிறுத்துவதற்கு நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் காரணமாக தங்களுடைய எதிர்பார்ப்புக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவித்த மாணவர்கள், குறித்த கற்கை நெறியினை இடை நிறுத்துவதற்கு சொல்லப்படுகின்ற காரணங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல எனவும் தெரிவித்தனர்.

மேலும், யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டப் பீடம் உருவாக்கப்பட்டபோது எதிர்கொண்ட இடையூறுகள் மற்றும் இந்து பீடம் உருவாக்கம் மற்றும் விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை கிழக்கு பல்கலைக் கழகத்துடன் இணைத்தமை, அறிவியல் நகரில் வளாகம் உருவாக்கம், 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் மூலம் பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொடுத்தமை போன்ற பல்கலைக் கழகங்கள் தொடர்பான பல்வேறு திட்டங்களில் பின்பலமாகவும் நேரடியாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய பங்களிப்பினை சுட்டிக்காட்டிய மாணவர்கள், தங்களுடைய எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனஅழுத்தம், தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Headaches Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் பிரபல பாடசாலை மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீட்டிலிருந்து சிறுமியொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் செவ்வாய்கிழமை இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

பெற்றோர் வெளியில் சென்றதையடுத்து உயிரிழந்த சிறுமியும், அவரது



சகோதரியும் வீட்டில் இருந்துள்ள சந்தர்ப்பத்தில், சகோதரி குளியலறையிலிருந்து வந்து பார்த்த போது சூம் ஊடாக கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தங்கை தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக பொலிஸாரிடம் சகோதரி தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுமியின் மரண விசாரணையை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெட்னம் மேற்கொண்டிருந்தார். அதனை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.



இதேவேளை உயிரிழந்த சிறுமி மட்டக்களப்பின் பிரபல பெண்கள் பாடசாலையில் தரம் 8இல் கல்வி கற்று வந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே பிரதமருடன் சந்திப்பு

ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே அவர்கள் செவ்வாய்க்கிழமை (28) அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை சந்தித்தார்.

சேவையை பொறுப்பேற்பதற்கு ரஷ்யாவிற்கு புறப்பட்டு செல்வதற்கு முன்னதாக சேவை குறித்து திட்டமிடும் வகையில் கௌரவ பிரதமருடனான இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன்போது இலங்கை மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான வரலாற்று நட்பை நினைவுகூர்ந்த கௌரவ பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேலும் மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதற்கு திருமதி. ஜனிதா ஏ லியனகே அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

சிரேஷ்ட பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே அவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக கம்பஹா விக்ரமாராச்சி சுதேச பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக பணியாற்றினார்.

காலி சவுத்லண்ட்ஸ் கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவியான ஜனிதா ஏ லியனகே அவர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்



உப தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

குறித்த சந்திப்பில் பிரதமரின் செயலாளர் திரு. காமினி செனரத், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி திரு. யோஷித ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**



# இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர், வடமாகாண ஆளுநர் சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ஸ் அவர்களை செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 28, 2021) காலை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் போது இந்திய திட்டங்கள் மற்றும் வட மாகாணத்தில் இந்திய வளர்ச்சி ஒத்துழைப்பு வாய்ப்புகள் குறித்தும், குறிப்பாக போக்குவரத்து, கமநலம், சுகாதாரம் மற்றும் வீட்டுத் துறை தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

# தமிழர் பகுதியில் ஆயுததாரிகளால் குடும்பஸ்தர் கடத்தல் – அதிர்ச்சியில் குடும்பம்



தமிழர் பகுதியான திருகோணமலை - வரோதய நகரில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நபர் செவ்வாய் காலை கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

39 வயதுடைய மனோகரதாஸ் சுபாஸ் என்பவரே தனது இல்லத்திலிருந்து கடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயுதங்களுடன் வாகனத்தில்அவரது வீட்டிற்குச் சென்ற சிலர், மனோகரதாஸ் சுபாஸை உப்புவெளி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாக வீட்டிலிருந்தவர்களிடம் கூறிவிட்டு அழைத்துச் சென்றுள்ளனர்.

இது குறித்து உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்கள் விசாரிக்க சென்றபோது குறித்த நடவடிக்கையை தாம் முன்னெடுக்கவில்லை என பொலிஸ் நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ள நிலையில் கடத்தப்பட்டதாக கூறப்படும் நபரின் குடும்பம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தில் அவரது மனைவி மற்றும் தாயார் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

# "சிகரெட்டுக்கான வரியை அதிகரியுங்கள்" என்று முட்டாள்த் தனமாகக் கூறும் செல்வம் அடைக்கலநாதன் எம்பி



சிகரெட்டுக்கான வரியை அதிகரிப்பு செய்யுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் மற்றும் நிதி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு தொடர்பாக செவ்வாய்க்கிழமை அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், அத்தியாவசிய பொருட்களுக்கான வரியை அரசாங்கம் அதிகரிக்கும் போது, சிகரெட்டின் மீதான வரியை அதிகரிக்க ஏன் பின்வாங்குகின்றது. இவ்வாறான சூழலில் தான் அரசாங்கம் ஏழைமக்களின் அத்தியாவசியப் பொருட்களின் மீதான வரியை அதிகரித்து வருகின்றது.

ஒரு சிகரெட்டின் விலையினை ரூபாய் 20.00 வினால் உயர்த்தியிருந்தால் சுமார் 100 பில்லியன் ரூபாயினை இழக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

இன்று பெருமபாலான சிறுவர்கள் முதல் பெரியோர் வரை இதனை பயன்படுத்துவதும் இதற்கு அடிமையாகி காணப்படுவதினாலும் இது ஓர் பாரிய சமூக சீர்குலைவிற்கு வழிவகுத்துக்கொண்டிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே இதனை தடுக்க வேண்டுமென்றால் அரசாங்கம் சிகிரெட் மீதான முறையான வரி முறைமையை கடைப்பிடிக்க வேண்டும்.

அவ்வாறான வரி முறைமையினால் அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரிக்கச்செய்வதோடு பாவனையிலும் சடுதியான வீழ்ச்சியினை ஏற்படுத்த முடியும்.

இன்றைய காலப்பகுதியில் சிகரெட் பாவனையை குறைப்பதானது கொவிட்-19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பாரிய உதவியாக அமையும் என்பதும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் பிரதிநிதி என்ற வகையில், எதிர்வரும் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ள 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் நாட்டிற்கும் நாட்டுமக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் சிகரெட் மீது முறையாக வரி அறவிடப்படும் கொள்ளையொன்றினை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என தீர்க்கமாக நான் நம்புகின்றேன்" என தெரிவித்துள்ளார்.

**- மன்னார் நிருபர்**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா — ஸ்காபுறோ தமிழ் சமூக மைய செயற்றிட்டம், கட்டிடத்தின் முதல் வடிவமைப்பை வெளியிட்டுள்ளது

தமிழ் சமூக மைய செயற்றிட்டத்தின் இயக்குனர் சபையானது கட்டிடத்தினதும் அதைச் சூழவுள்ள பகுதிகளினதும் பூர்வாங்க வடிவமைப்பொன்றை வெளியிட்டது. மேலதிகமாக அறிந்துகொள்ள இணைப்பைப் படியுங்கள் அல்லது இங்கே பார்வையிடுங்கள்.

இந்தப் பூர்வாங்க வடிவமைப்புகள் 311 ஸ்ரெயின்ஸ் வீதியின் வாய்ப்புகளும் கட்டுப்பாடுகளும் எங்ஙனம் தமிழ் சமூக மையத்திற்காக சாதகமாகப் பயன்படுத்தப்படலாம் என எடுத்துக்காட்டுகின்றன.

வடிவமைப்புக்கான அடிப்படை வழிகாட்டிகளாக ஐந்து விடயங்களை இயக்குனர் சபை மனதிலிருத்தியது:
(1) கலந்தாய்வுகளின் அடிப்படையிலான சேவைத்திட்ட வெளிகள்
(2) சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான உறுதிப்பாடு
(3) பூர்வகுடிக் குமுகங்களை மதித்தல்
(4) குடியிருப்பாளர்களின் கரிசனங்களுக்கான தீர்வுகள்
(5) தமிழ்ப் பண்பாடும் வரலாறும்.

தமிழரின் பாரம்பரியக் கட்டிடக்கலை (மைய முற்றம்), தமிழ்மொழியும் சங்க இலக்கியக் கோட்பாடுகளும் (ஐந்திணைகள்), புலப்பெயர்வையும் ஏதிலிவாழ்வையும் புகலடைவையும் உள்ளடக்கிய தமிழரின் அண்மைக்கால வரலாறு (கப்பல்) ஆகியவற்றால் வடிவமைப்பு அகத்தூண்டல் பெற்றுள்ளது.

வடிவமைப்புக்கான வழிகாட்டிகள் பற்றியும் அகத்தூண்டல்கள் பற்றியும் விபரங்களைப்பெற, இணைப்பைப் படியுங்கள் அல்லது www.tamilcentre.ca என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.

இந்த வடிவமைப்புகள் பற்றிய உங்கள் கருத்துகளை அறிய இயக்குனர் சபை ஆவலாய் உள்ளது. உங்கள் பின்னூட்டங்களை ஒக்டோபர் 13க்கு முன் எமது இணையத்தளத்தின் மூலம் வழங்குங்கள். அத்தோடு, வடிவமைப்புக்கு முந்திய ஆய்வு பற்றி மேலும் அறிந்துகொள்ள, ஒக்டோபர் 13 அன்று மாலை ஏழு மணிக்கு நடைபெறவிருக்கும் நிகர்நிலை குமுகப் பொதுக்கூட்டத்திலே கலந்துகொள்ளுங்கள். அதற்கு இங்கே பதிவு செய்யுங்கள்.

ஊடகத் தொடர்புகளுக்கு
நீதன் ஷான்
416-824-3399
neethanshan@gmail.com

## Scarborough Tamil Community Centre Project in Canada, Releases First Design of Building

The Board of Directors for the Tamil Community Centre (TCC) project released a pre-design of the building and the surrounding area. See attached or read more here.

These preliminary designs show how 311 Staines Road can be used for a Tamil Community Centre, both the opportunities and the constraints.

The Board kept five guidelines in mind for the design:
(1) Programming space based on consultations.
(2) Commitments to the environment.
(3) Respect to Indigenous communities.
(4) Solutions to resident concerns.
(5) Tamil culture and history.

The design is inspired by traditional Tamil architecture (a central courtyard), the Tamil language and concepts from ancient Sangam poetry (landscape), and the Tamil people's history of migration, refuge and asylum (a ship).



For more details on the guidelines and inspiration for the design, see attached or please visit www.tamilcentre.ca The Board looks forward to hearing your thoughts on these designs. Submit your feedback by October 13 on our website. And join us for a community townhall on October 13 at 7PM to learn more about the pre-design study. Register here.

Keerthana Rang
647-998-2615
k.keerthana2@gmail.com

# கனடியப் பூர்வகுடி மக்களுக்கான உண்மை மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய தேசிய நாளை அனுஸ்டிக்கும் இன்றைய நாளில் கோர்ட் டவுனி & சேனி வென்ஜாக் நிதியத்துக்கு 20,000 கனடிய டொலர்களை, கனடியத் தமிழர் பேரவை வழங்குகிறது

கனடியத் தமிழர் பேரவை கனடிய மக்களோடு இணைந்து பூர்வகுடி மக்களுக்கான உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய நாளையும், ஒறேஞ் நாளையும் அனுசரிக்கிறது. வதிவிடப் பள்ளிகளில் பலியான சிறுவர்களுக்கும் மற்றும் அதிலிருந்து உயிர் தப்பி இன்றும் வாழ்ந்து கொண்டிருப்போருக்கும், அவர்கள் அனைவரது குடும்பங்களுக்கும், அவர்கள் சார்ந்த சமூகங்களுக்கும் கனடியத் தமிழர் பேரவை இன்றைய நாளில் கௌரவத்தைச் செலுத்துகிறது.

பழங்குடியின மக்கள் அனுபவித்த திட்டமிடப்பட்ட முறைமையிலான ஒடுக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பாகுபாடுகள், தொடர்ச்சியாக அவர்கள் இன்றும் அனுபவிக்கும் வலி மற்றும் அவர்கள் மீது இன்றும் தொடரும் அநீதிகள் ஆகியவற்றில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகளைப் பிரகடனப்படுத்தும் நாள் இன்றைய செப்ரெம்பர் 30!

இந்த ஆண்டு ஸ்காபுரோவில் உள்ள தொம்சன் பூங்காவில் கனடியத் தமிழர்களின் பதின்மூன்றாவது வருடாந்த நிதிசேர் நடை கனடியத் தமிழர் பேரவையால் பூர்வகுடி மக்களுக்கான ஆதரவை வழங்குமுகமாக வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதன்போது 20,000 கனடிய டொலர்கள் திரட்டப்பட்டது. இந்த ஆண்டு நடைப்பயணத்திலிருந்து கிடைத்த இந்த நிதி "டவுனி மற்றும் சேனி வென்ஜாக் நிதியத்துக்கு" (DWF) வழங்கப்படுகிறது. கனடாவின் பூர்வீக குடிகளுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தை இந்த நிதியம் ஊக்குவிக்கிறது. மேலும் இந்த நிதியம், கனடாவில் உள்ள பழங்குடி மக்களின் உண்மையான வரலாறு மற்றும் வதிவிடப் பள்ளிகளின் சரித்திரம், அவர்களது மரபு பற்றிய கல்வியைக் கற்க உதவுகிறது.



உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இன்றைய தேசிய நாளை முன்னிட்டு, கனடியத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் Six Nations of the Grand River பிரதேசத்தில் அமைந்த இருப்பிடமொன்றில் DWF நிதியத்துக்கான 20,000 கனடிய டொலர்கள் காசோலையை வழங்குவார்கள்.

DWF நிதியத்துக்குக் கனடியத் தமிழர் பேரவை பங்களிப்பதன் ஊடாக கனடா, பழங்குடியின மக்களுக்கு இழைத்த மிக மோசமான வரலாற்றை உணர்ந்து தமிழ்க் கனடிய குடியிருப்பாளர்களுக்கு இது குறித்த கல்வியைக் கற்பிப்பதில் கனடியத் தமிழர் பேரவை உறுதியாக உள்ளது. இது பூர்வீக்குடி மக்களின் தொடரும் போராட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றியும் கனடியத் தமிழர்கள் அறிய உதவும் எனக் கனடியத் தமிழர் பேரவைத் தலைவர் சிவன் இளங்கோ கூறியுள்ளார்.




Six Nations of the Grand River, சமாதானச் சமூகச் சூழ்நிலையின் கீழ் அனைத்து "ஹவுடெனோசௌனி" மக்களையும் ஒருங்கிணைக்கிறது. இந்த ஆற்றுப்படுக்கையானது "ஹவுடெனோசௌனி" தேசிய மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரேயொரு பழங்குடித் தேசியச் சமூகமாகும். கிராண்ட் ஆற்றின் கரையில் அமைந்துள்ள, Six Nations of the Grand River கனடாவில் பழங்குடி மக்கள் அதிக தொகையில் வாழும் பிரதேசம் ஆகும்.

கனடாவின் பழங்குடியின மக்களின் வரலாறு மற்றும் அவர்களைப் பற்றிய நமது விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான கூட்டுப் பொறுப்பை அடையாளம் காணவும், நல்லிணக்கத்தை நோக்கிப் பழங்குடி சமூகங்களுடன் இணைந்து உறுதியான வேலைத்திட்டத்தில் ஈடுபடுவதைக் கனடியத் தமிழர் பேரவை தொடர்ந்து வலியுறுத்துகிறது.

கனடியத் தமிழர் நிதிசேர் நடை வலைத்தளம்: http://www.tamilcanadianwalk.ca
முகநூல்: https://www.facebook.com/CanadianTamilCongress
Instagram: https://www.instagram.com/canadiantamilcongress/
l;Utpw;wu;: https://twitter.com/ctconline

ஊடகத் தொடர்புகளுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:
விதுசாயினி பரமநாதன்,
இணைத் தலைவர்,
2021 கனடியத் தமிழர் நிதிசேர் நடை



உலக செய்திகள்
World News

# புகைக்கும் பழக்கம் உள்ளவர்கள் கோவிட் டின் தாக்கத்தால் இறக்கும் சந்தர்ப்பம் அதிகமென இங்கிலாந்து பல்கலைக் கழகங்கள் கண்டு பிடிப்பு

புகைக்கும் பழக்கம் உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில், புகை பிடிப்பவர்களுக்கு கொவிட் பாதிப்பு ஏற்படும் போது, மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய தேவை 80 சதவீதம் அதிகரிப்பதாகவும், இவர்கள் உயிரிழக்கவும் வாய்ப்பு உள்ளதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

சீனாவில் கொவிட் வைரஸ் பெருந்தொற்று கடந்த 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கண்டறியப்பட்டது. தற்போது வரை 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி உலகையே உலுக்கி வருகிறது. இந்த பெருந்தொற்றை ஏற்படுத்திய கொவிட் வைரஸ் குறித்து உலகெங்கும் தொடர்ந்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், பிரிஸ்டல் பல்கலைக்கழகம், நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தி அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவித்து உள்ளதாவது: கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையில் ஆய்வு நடத்தப்பட்டது. 4 இலட்சத்து, 21 ஆயிரத்து, 469 பேரை ஆராய்ந்ததில் புகை பிடிப்பதற்கும், கொவிட் பாதிப்பு தீவிரம் அடைவதற்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. புகை பிடிக்காதவர்களுடன் ஒப்பிடுகையில், புகை பிடிப்பவர்களுக்கு கொவிட் பாதிப்பு ஏற்படும் போது மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய தேவை 80 சதவீதம் அதிகரிக்கிறது. இவர்கள் உயிரிழக்கவும் வாய்ப்பு உள்ளது. புகை பிடித்தால் இதய நோய், புற்றுநோய் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுவது போல, கொவிட் வைரஸ் பாதிப்பும் தீவிரமாக தாக்க வாய்ப்பு உள்ளது உயிரிழப்பையும் ஏற்படுத்துகிறது. இதனால் புகை பிடிப்பதை கைவிட இது ஏற்ற தருணமாக இருக்கும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாஹாளைய பட்ச தர்ப்பணம் நன்மையழிக்கின்றதா

மாஹாளைய பட்ச தர்ப்பணம் கூட்டமாக வாழ்கின்ற நமது முன்னோர்கள் பட்ச 15 நாட்கள் எங்களுடன் வந்து நின்று வோவார்கள் என்பதை சாத்திர முறைகள், 7, 8 தலைமுறையினர் சொல்லிக்கொடுத்த, காட்டிக்கொகடுத்த இந்த உண்மைகளை நாமும் பின்பற்றினால் நன்மைகள் பல நடக்கும் என்பது உண்மை.

இது புரட்டாசி மாதம் பருவத்துடன் தொடங்கி 15 நாட்கள் அமாசையுடன் முடிவடைகின்றது. அந்த காலங்களில் நமது தாய், தந்தையர், சகோதரர்கள் உற்றார், உறவினர் அனைவரையும் பிதிர்லோகத்தை விட்டு பூலோகத்திற்கு அனுப்புகின்றார் யமதர்மராஜா. அவர்கள் வந்து பிள்ளைகள் மற்றும் அன்புள்ளவர்களின் வீட்டுக்கு முன்பாக நிற்பார்களாம். அவர்களுக்கு அன்னமிட்டு, தீர்த்தம் கொடுத்து அனுப்பினால் வாழ்த்திவிட்டுப் போவார்களாம். இல்லையென்றால் சாபமிட்டு, துன்பத்தை கொடுத்து அவர்கள் பிதிர்தோசத்தால் பித்துபிடித்தவர்களாக்கி விடுவார்களாம்.

அதன் காரணமாகத்தான் அன்னத்தையும், தீர்த்தத்தையும் யாரும் பணத்திற்காக விற்பதில்லை. தானத்தில் சிறந்தது அன்னதானம், வஸ்திரதானம். பசியையும், பிணியையும் போக்கக்கூடியது.

15 நாட்களும் வீடுகளை சுத்தமாக வைத்து ஒவ்வொருநாளும் ஒருவருக்கு என்றாலும் உணவு கொடுத்து, காகத்திற்கும் அன்னமிட்டால் கஷ்ரத்தை போக்கி சுகத்தையும், பல நன்மைகளையும் அனுகிரகத்தை கொடுத்து வாழ்த்திவிட்டுச் செல்வார்கள்.

# அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சரினால் பயமுறுத்தப்பட்ட எட்டு தமிழ்க் கைதிகள் அனைத்து குற்றங்களிலிருந்தும் தம்மை விடுவிக்குமாறு நீதிமன்றத்தை நாடியுள்ளனர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



இலங்கையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சரினால் பயமுறுத்தப்பட்ட பூபாலசிங்கம் சூரியபாலன், மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன், கந்தப்பு கஜேந்திரன், இராசதுரை திருவருள், கணேசமூர்த்தி சிதுர்சன், மெய்யமுத்து சுதாகரன், ரீ. கந்தரூபன் ஆகிய எட்டு தமிழ் அரசியல் கைதிகள் அனைத்து குற்றங்களிலிருந்தும் தம்மை விடுவிக்குமாறு நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இது தொடர்பாக எமக்கு கிடைத்துள்ள விபரங்கள்பின்வருமாறு:

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய சம்பவம் ஊடாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக கூறி, குறித்த சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 தமிழ் அரசியல் கைதிகள் அடிப்படை உரிமை மீறல் மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

பூபாலசிங்கம் சூரியபாலன், மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன், கந்தப்பு கஜேந்ரன், இராசதுரை திருவருள், கனேசமூர்த்தி சிதுர்சன், மெய்யமுத்து சுதாகரன், ரீ. கந்தரூபன் ஆகிய அரசியல் கைதிகளே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

அரசியலமைப்பின் 17 ஆவது உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 126 ஆவது உறுப்புரை பிரகாரம் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு, சின்னதுரை சுந்தரலிங்கம் மற்றும் பாலேந்ரா சட்ட நிறுவனத்தின் சட்டத்தரணி ராஜ் மோஹன் பாலேந்ரா ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் எஸ்.சி.எப்.ஆர். 297.ׅ.2021 எனும் இம்மனு சார்பில் மனுதாரர்களுக்காக சட்டத்தரணி கேசவன் சயந்தனுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகவுள்ளார்.


இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சர் எம்.எச்.ஆர். அஜித், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, நீதி அமைச்சர் அலி சப்றி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்ற விசாரணைகள் நிலுவையில் உள்ள நிலையிலும் வவுனியா நீதிவான் நீதிமன்றினாலும் வழங்கப்பட்டுள்ள உத்தரவுக்கு அமைய தாம் அநுராதபுரம் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதக மனுதாரர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த செப்டம்பர் 12 ஆம் திகதி மாலை 6.05 மணியளவில், தனது பாதுகாப்பு அதிகாரிகளுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு வந்த முதல் பிரதிவாதி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, தம்மை முழந்தாழிடச் செய்து மிக மோசமாக நடாத்தியதாக மனுதாரர்கள் மனுவில் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் செயற்படும் பூரண அதிகாரத்தை ஜனாதிபதி தனக்கு வழங்கியுள்ளதாக முதல் பிரதிவாதி லொஹான் ரத்வத்தை இதன்போது தெரிவித்ததாகவும், பின்னர் பூபாலசிங்கம் சூரியபாலன் எனும் கைதியின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியதாகவும் மனுதரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். அதனால் தாங்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளதாகவும் மனுதரர்கள் கூறுகின்றனர்.

இதனால் அரசியலமைப்பு ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ள சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான உரிமை மற்றும் சமத்துவத்துக்கன உரிமை ஆகியன மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டுகின்ற்னர்.




இந்நிலையில் அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரையின் கூறப்பட்டுள்ள எந்த ஒருவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது என்ற விடயம் மீறப்பட்டுள்ளதாக தீர்மானிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன் அதற்கு மேலதிகமாக அரசியலமைப்பின் 12 ( 1) ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள சட்டத்தின் முன் ஆட்கள் அனைவரும் சமமானவர்கள் அத்துடன் அவர்கள் சட்டத்தால் சமமாக பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் என்ற விடயமும் 12 (2) ஆம் உறுப்புரையான இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களில் எந்தவொன்று காரணமாகவும் எந்த பிரஜையையும் ஓரங்கட்டுதல் ஆகாது என்ற உரிமையும் மீறப்பட்டுள்ளதாக தீர்மானிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்நிலையில் தாம் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அநுராதபுரம் சிறையில் இருந்து யழ்ப்பாண சிறைச்சாலைக்கு உடனடியாக தங்களை மாற்ற இடைக்கால உத்தரவொன்றினை பிறப்பிக்க வேண்டும் எனவும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

## வீணாவின் கவிக்கணை

நீ அடுத்தடுத்து சங்கடங்கள்
ஏற்படுத்தும்போதும்,
இன்றைய பொழுது துன்பமானாலும்,
நாளைய விடியல் நமக்கானது என்ற
நம்பிக்கை கொண்டிருந்தேன்,
ஆனால் நீயோ,
கொடுத்த சங்கடங்கள் அனைத்தும்
பெரிய துன்பத்திற்கான அஸ்திவாரம்
என்பதை அழகாய் உணரவைத்தாய்
இறைவா! நீ வாழ்க!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் பா.உ. ஹரீஸ் குறுக்குத் தனமாக செயற்படுகின்றார் என குற்றச்சாட்டு

அம்பாறை மாவட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் பா.உ. ஹரீஸ் குறுக்குத் தனமாக செயற்படுகின்றார் எனவே இவரால் தான் தமிழ் பேசும் இனங்களின் உறவுகள் பாதிக்கப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் நாவிதன்வெளியில் உள்ள காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் எமது தமிழ் மக்கள் நாளாந்தம் சொல்லமுடியாத துயரத்தை அனுபவித்து வருகின்றனர். அதேவேளை கடந்த காலத்தில் பெரும்பான்மை இனத்தவர்களால் பாதிக்கப்படிருந்தாலும் தற்காலத்தில் எமது மொழியை பேசுகின்ற அரசியல் வாதிகளின் நிகழ்ச்சி நிரல்கள் அம்பாறை மாவட்டத்தில் அரங்கேறி வருகின்றது.

குறிப்பாக கல்முனை பிராந்தியத்தை எடுத்து பார்க்கும் போது ஏதாவது ஒரு விடையத்தை தமிழர் பிரதேங்களிலே சென்று நிலங்களை கபழிகரம் செய்கின்ற குழுவான செயற்பாடு முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். ஹரீஸ் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துகின்ற விடையத்தில் மிகவும் குறுக்கு தனமாக செயற்பட்டு வருகின்றார் என்பதோடு அவர்களுக்கு சாதகமாக இந்த அரசாங்கம் செயற்படுவதும் அடிக்கடி நிகழ்கின்றது.



தமிழ் பேசும் இனம் என்று தேர்தல் காலத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பேசுவதும் தேர்தலின் பின்னர் அரசுடன் சேர்ந்து தமிழ் பேசும் இனத்திற்கு எதிராக செயற்படுவதுமாக இருக்கின்றனர். நாட்டில் எந்த அரசாங்கம் வந்தாலும் அவர்களுடன் இணைந்து சலுகைகளை பெறும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் போன்றவர்களால் தான் தமிழ் பேசும் இனங்களின் உறவுகள் பாதிக்கப்படுகிறது.

இவர் அரசுடன் இணைந்து வடக்கு பிரதேச செயலகத்திற்கான காணி அதிகாரம் கிடைக்கப்பெற கூடாது என செயற்படுகின்றார் என்பதே நிதர்சனமான உண்மை என தெரிவித்தார்.

# இலங்கை மன்னாரில் மீண்டும் இராணுவத்தினரால் வீதி சோதனை முன்னெடுப்பு



மன்னார் பகுதியில் இராணுவத்தினர் தற்போது திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புதன்கிழமை (29) மாலை முதல் மன்னார் பஜார் பகுதி மற்றும் மன்னார் மேல் நீதிமன்ற பிரதான வீதி ஆகிய பகுதிகளில் நிற்கின்ற இராணுவத்தினர் மக்களை சோதனை செய்து வருகின்றனர். வியாழக்கிழமை (30) காலை முதல் குறித்த பகுதிகளில் இராணுவத்தின் சோதனை இடம்பெற்று வருகின்றது.

குறிப்பாக குறித்த வீதிகள் ஊடாக மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் ஏனைய வாகனங்களில் பயணிப்பவர்கள் நிறுத்தப்பட்டு அவர்களின் உடமைகளை சோதனை செய்யப்படுவதோடு, வாகனங்களும் சோதனை செய்யப்படுகிறது.

திடீர் என குறித்த சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருவதால் அவ் வீதியூடாக செல்லும் மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது.

- மன்னார் நிருபர்

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் பொலிஸாரால் பாடசாலை சிறுவர்களுக்கு அன்பளிப்பு



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொ-லிஸ் அத்தியட்சகர் பண்டுள வீர சிங்க தலைமையில் கொ-ரோனா தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட 100 பாடசாலை சிறுவர்களுக்கான வியாழக்கிழமை (30) கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் பாட-சாலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளமையை கருத்தில் கொண்டு வறுமை கோட்டிற்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு அடிப்படை கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்வதில் சிரமம் உள்ள மற்றும் கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதில் கஷ்டம் உள்ள மாணவர்களுக்கு மேலதிக கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடும் மன்னார் பொலிஸரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் தேவையுடைய மாணவர்கள் பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்வதன் ஊடாக கற்றல் உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது.

- மன்னார் நிருபர்

# இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு வெள்ளி அதிகாலை 4 மணிக்கு நீக்கம்

## இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நாளை (01) அதிகாலை 4 மணிக்கு நீக்கம் - புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியீடு



தற்போது இலங்கையில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நாளை (01) அதிகாலை 4 மணிக்கு நீக்கப்பட்டதன் பின்னர் கடைபிடிக்க வேண்டி புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, அதேபோல், புதிய சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய இரவு 10 மணி முதல் அதிகாலை 04 மணி வரை அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பல்பொருள் அங்காடிகள், மருந்தகங்கள், விற்பனை நிலையங்களை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், நாளை (01) முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பதிவுத் திருமண வைபவங்களில் 10 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியில் இருந்து ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை திருமண வைபங்களில் அதிகபட்சமாக 50 விருந்தினருக்கு மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

மேலும், நாளை (01) முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை கொவிட் அல்லாத மரண சடங்களில் 10 பேருக்கு மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி முதல் 15 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் 24 மணித்தியாலங்களில் இறுதிச் சடங்கு இடம்பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. பேருந்துகளில் ஆசன எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும்.

அத்தியாவசிய நடவடிக்கைகள் தவிர பிற நடவடிக்கைகளுக்கு மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தொடரும். குளிரூட்டப்பட்ட வாகனங்களை பொதுப் போக்குவரத்தில் பயன்படுத்தக் கூடாது மற்றும் ஜன்னல்களைத் திறந்து வைக்க வேண்டும். எப்போதும் முகக்கவசம் அணியுங்கள்.

வேலைக்கு அழைக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும் மற்றும் முடிந்த வரை வீட்டிலிருந்து வேலை செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும். பணியமர்த்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை நிறுவனத்தின் தலைவரால் தீர்மானிக்கப்பட வேண்டும். மறு அறிவித்தல் வரை பொதுக் கூட்டத்திற்கு அனுமதி இல்லை.

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் ஒக்டோபர் 15 வரையான சுகாதார வழிகாட்டுதல்கள்:

- திருவிழாக்கள், பார்ட்டிகள், கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.
- உணவகங்கள் திறக்க அனுமதி இல்லை.
- திரையரங்குகள் மூடப்பட்டிருக்கும்.
- கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளுக்கு அனுமதி இல்லை.
- விவசாயத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- முடிதிருத்தும் மற்றும் அழகு நிலையங்களை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் திறக்க அனுமதி.
- பகல் நேர பராமரிப்பு மையங்களை திறக்க அனுமதி.
- பாலர் பாடசாலைகளை 50% கொள்ளளவில் பராமரித்துச் செல்ல முடியும்.
- பல்கலைக்கழகங்கள் உட்பட உயர்கல்வி நிறுவனங்களை சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய ஆரம்பிக்கலாம்.
- நடைபாதை பாதைகள், கடற்கரைகள் திறந்திருக்கும்.
- திருமணங்கள், திருமணப் பதிவுகளில் 10 பேர் பங்கேற்கலாம்.
- இறுதிச் சடங்கிற்கு 10 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.
- விகாரைகள், தேவாலயங்கள் மற்றும் கோவில்கள் போன்ற வழிபாட்டு இடங்களில் கூட்டு நடவடிக்கைகள் அல்லது கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.
- தொழிற்சாலைகள் சுகாதார வழிகாட்டுதல்களின் படி செயல்படலாம்.
- வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பரீட்சைகளை நடாத்தலாம்.



# கோட்டாபய தமிழ் டயாஸ்போறவை அழைக்கிறார்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

இது டயாஸ்போறக்களின் காலம். அதாவது புலம்பெயர்ந்த சமூகங்களின் காலம். அல்லது நாடு கடந்து ஒரு தேசமாக அல்லது தேசத்துக்கு வெளியே ஓர் உளவியல் தேசமாக வாழும் மக்களின்காலம். புலப்பெயர்ச்சி என்பது பொதுவாக இரண்டு காரணங்களால் ஏற்படுகிறது. முதலாவது போர்.இரண்டாவது பொருளாதார காரணங்கள். ஈழத்தமிழர்களின் புலப் பெயற்சி பிரதானமாக இரண்டு அலைகளை கொண்டது. முதலாவது 1983 முந்தியது. பெருமளவிற்கு கல்வி மற்றும் பொருளாதார காரணங்களுக்கானது. இரண்டாவது 83 ஜூலைக்கு பின்னரானது. அது முழுக்க முழுக்க போரின் விளைவு. எனினும் அதற்குள் போரை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு பொருளாதார காரணங்களுக்காக புலம் பெயர்ந்தவர்களும் உண்டு.

உலகில் இன்று மிகக்கவர்ச்சியான டயாஸ்பொறக்களில் ஒன்றாக தமிழ் டயாஸ்பொற பார்க்கப்படுகிறது. உலகின் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய அதேசமயம் மிகநீண்ட காலப் பின்னணியைக் கொண்ட ஒரு புலம்பெயர் சமூகமாக யூதர்கள் பார்க்கப்படுகிறார்கள். டயாஸ்பொற என்ற வார்த்தை யூதர்களுக்குத்தான் முதலில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான ஒரு புலப் பெயர்ச்சி அது. அதன் விளைவாக யூதர்கள் அதிகமதிகம் ஐரோப்பியமயப்பட்டு விட்டார்கள். யூத டயாஸ்பொற என்பது கிறிஸ்துவுக்கு முன்னரே தொடங்குகிறது. அதிலிருந்து தொடங்கி யூதர்கள் தொடர்ச்சியாக ரோமப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமெங்கும் அதற்கப்பாலும் புலம் பெயர்ந்தார்கள். இவ்வாறு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அதாவது இரண்டு மில்லீனியங்களுக்கும் மேலாக யூதர்கள் புலம்பெயர்ந்தார்கள். ஆசியாவில் தோன்றிய யூதர்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலப்பகுதிக்குள் அதிகம் ஐரோப்பிய மயப்பட்டார்கள். இவ்வாறு யூதர்கள் ஐரோப்பிய மயபட்டதன் விளைவுகள்தான் அணுக்குண்டு மார்க்சிசம் சிக்மன் பிராய்டின் உளவியல் கோட்பாடு முதற்கொண்டு உலகின் கணிசமான அறிவியல் சாதனைகள் ஆகும்.

இந்த அர்த்தத்தில்தான் கடந்த நூற்றாண்டை யூதர்களின் நூற்றாண்டு என்று வரலாற்றாசிரியர்கள் வர்ணிப்பது உண்டு. மனிதகுல வரலாற்றில் அதிகம் தாக்கம் செலுத்திய, அதிகம் பலம் பொருந்தியதாக யூத டயாஸ்பொற பார்க்கப்படுகிறது. புலம்பெயர்ந்த ஒரு மக்கள் கூட்டத்தால் தமது தாயகத்தில் ஒரு தேசத்தை உருவாக்க முடியும் என்பதற்கு அது ஒரு முன்னுதாரணம் ஆகும்.

கடந்த நூற்றாண்டில் யூத டயாஸ்பொறவிலிருந்து தொடங்கி மனிதகுல வரலாற்றில் டயாஸ்பொறக்களின் காலம் என்பது துலக்கமான விதங்களில் மேலெழுந்து விட்டது. ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளை பொறுத்தவரையிலும் பல நாடுகளில் டயாஸ்பொற சமுகங்கள் தத்தமது தாயகங்களில் அரசியல்ரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் செல்வாக்கு செலுத்தும் ஒரு போக்கு வளர்ச்சியுற்று வருவதை காணலாம். உதாரணமாக அமெரிக்காவில் வாழும் யூத மற்றும் ஐரிஷ் சமூகங்கள் கனடாவில் வாழும் சீக்கிய சமூகம் அமெரிக்க, ஐரோப்பியக் கண்டங்களில் வாழும் தமிழ்ச்சமூகம் போன்றவற்றைக் கூறலாம். குறிப்பாக 1990களுக்குப் பின்னிருந்து தமிழ் டயாஸ்பொற அபரிதமான ஒரு வளர்ச்சியை பெற்று விட்டது. இந்த வளர்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு இங்கே ஒரு உதாரணத்தைக் கூறலாம்.

83 ஜூலைக் முன்பு பிரித்தானியா விமான நிலையம் ஒன்றில் நடந்த சம்பவம் அது. அங்கே பிரித்தானியாவிலிருந்து நாடுகடத்தப்படுவதற்காக ஒரு தொகுதி ஈழத்தமிழர்கள் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்கள். தாங்கள் நாடு கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக அவர்கள் திடீரெண்டு விமானநிலையத்தில் தங்களுடைய ஆடைகளை அகற்றி அரை நிர்வாணமாக நின்று தமது எதிர்ப்பை காட்டினார்கள். அதன் விளைவாக அவர்களை நாடு கடத்தும் முயற்சி நிறுத்தப்பட்டது. ஆனால் அப்படி ஒரு காட்சியை இனி எந்த ஒரு அமெரிக்க அல்லது ஐரோப்பிய விமான நிலையத்திலும் கற்பனை செய்யமுடியாது. ஏனென்றால் அன்று பிரித்தானியாவின் விமான நிலையத்தில் நிர்வாணமாக நின்றவர்களுக்கு தங்களை மற்றவர்கள் பார்ப்பார்கள் என்ற கூச்சம் இருக்கவில்லை. அதாவது அங்கே அவர்களுக்கு ஒரு சமூக இருப்போ, கலாச்சார இருப்போ இருக்கவில்லை. ஒரு சமூக அல்லது கலாச்சார இருப்பு அல்லது அந்தஸ்து இருந்தால்தான் வெட்கம் வரும். மற்றவர்கள் தங்களை பார்ப்பார்கள் மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற வெட்கம் ஏற்படும். ஆனால் அன்றைக்கு நிர்வாணமாக நின்ற தமிழர்கள் உதிரிகளாக நின்றார்கள். ஒரு சமூகமாக நிற்கவில்லை.

ஆனால் இன்றைக்கு ஈழத் தமிழர்களின் நிலை அப்படியல்ல. அப்படி எந்த ஒரு விமான நிலையத்திலும் நிர்வாணமாக நிற்கமுடியாது. ஏனென்றால் ஒரு புலம்பெயர் தமிழர் அவ்வாறு நின்றால் அதை அவர்களுடைய அடுத்த தலைமுறை அனுமதிக்காது அல்லது அந்தப் பிள்ளையின் பிள்ளை அனுமதிக்காது. அந்தப் பிள்ளைகளுக்கு அங்கே ஒரு சமூக அடையாளமும் அந்தஸ்தும் உண்டு. அவர்கள் அந்த சமூகத்துக்கு உரியவர்கள் உன்னுடைய பெற்றோர் அல்லது உறவினர் இப்படி நிர்வாணமாக நிற்கிறார்கள் என்று நாளைக்கு அவர்களுடைய பள்ளிக்கூடத்திலோ அல்லது வேலைத்தளங்களிலோ அந்தப் பிள்ளைகளின் நண்பர்கள் சொல்லிக் காட்டுவார்கள். மேலும் பெரும்பாலான விமான நிலையங்களில் ஈழத்தமிழர்கள் ஏதோ ஒரு வேலை பார்க்கிறார்கள். தவிர அந்த விமான நிலையங்களில் வந்து போகும் பயணிகளில் யாரோ ஒரு அல்லது பல முதல் தலைமுறை அல்லது இரண்டாம் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த ஈழத்தவர் இருப்பார். அவர் அவ்வாறு நிர்வாணமாக நிற்பவரை அடையாளம் காணமுடியும்.

அதாவது ஈழத்தமிழர்கள் இப்பொழுது நாட்டுக்கு வெளியே ஒரு தேசமாக பரந்து வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தேர்தலில் நிற்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருகிறார்கள். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக வருகிறார்கள். உள்ளூர் பிரமுகர்கள் ஆக வந்துவிட்டார்கள். உலகப் பிரபலங்கள் ஆகவும் வந்துவிட்டார்கள். இதற்கு ஆகப் பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு காட்டலாம் தமிழ்நாட்டின் திரைத்துறைத் தலைநகரமாகிய கோடம்பாக்கத்தில் அண்மையில் நடந்த ஒரு சம்பவம். நகைச்சுவை நடிகர் வடிவேலு இயக்குனர் ஒருவரோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நடிப்பதில் இருந்து விலகி இருந்தார். அந்தப் பிணக்கை தீர்த்து வைத்தது ஒரு புலம்பெயர் பெரு வணிகர்தான். தமிழ்த் திரையுலகின் மீது தமிழ் டயாஸ்பொறவின் செல்வாக்கை இது காட்டுகிறதா?

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளுக்குப்பின் தமிழ் டயாஸ்பொறவானது ஈழ விடுதலைப் போரின் காசு காய்க்கும் மரமாக மாறியது. குறிப்பாக இந்தியாவுக்கும் ஆயுதப் போராட்டத்துக்கு இடையே சட்ட பூட்டு ஏற்பட்ட பொழுது ஆயுதப்போராட்டம் ஐரோப்பாவை நோக்கி நிச்சயமற்ற கடல்வழிகளின் மூலம் திறக்கப்பட்டது. அதிலிருந்து அதிகரித்த அளவில் ஈழப்போராட்டம் மேற்கு பயப்பட்டது. ஈழப்போராட்டத்தின் காசு காய்க்கும் மரமாக தமிழ் டயாஸ்பொற காணப்பட்டது. இன்றும் தாயகத்திலுள்ள கட்சிகள் செயற்பாட்டாளர்களின் மீது ஏதோ ஒரு விதத்தில் தாக்கம் செலுத்தும் ஒரு மக்கள் கூட்டமாக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் காணப்படுகிறார்கள். குறிப்பாக 2009 க்குப்பின் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் பயப்பிராந்திக்குள் வாழ்ந்த ஒரு காலகட்டத்தில் முழுத் தமிழ் சமூகத்துக்குமாக குரல் கொடுத்தது புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள்தான். 2009க்குப்பின் அஞ்சலோட்டக் கோல் புலம்பெயர்ந்த தமிழர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுமளவுக்கு அந்த வளர்ச்சி காணப்பட்டது. குறிப்பாக ஜெனிவா மைய அரசியலில் மிகவும் வினைத்திறனோடு செயற்படுவது தமிழ் டயாஸ்பொறதான் 2009க்கு பின்னரான நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் பிரதான கூர் முனைகளில் ஒன்றாக தமிழ் டயாஸ்பொறவே செயல்பட்டு வருகிறது.

இவ்வாறான ஒரு முக்கியத்துவத்தைக் கருதித்தான் கடந்த வாரம் இலங்கைத் தீவின் ஜனாதிபதி அமெரிக்காவில் ஐநாவில் வைத்து தமிழ் டயாஸ்பொறவை நோக்கி கோரிக்கைகளை முன்வைக்கும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. அன்மையில் ஐநா கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்காக சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அங்கே ஐநா பொதுச் செயலரை சந்தித்தபின் வெளியிட்ட கருத்துக்கள் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன. ஜனாதிபதி அமெரிக்காவில் நின்ற நாட்களுக்கு சற்று முன்பின்னாக நோர்வேயில் ஒரு தமிழ்ப் பெண் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருப்பதையம் கனடாவில் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஹரி ஆனந்தசங்கரி மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

தமிழ் டயாஸ்பொற ஒரு தவிர்க்கமுடியாத சக்தியாகவும் அழுத்தப் பிரயோக சக்தியாகவும் காசுகாய்க்கும் மரமாகவும் தாயகத்தில் கட்சி அரசியல் மற்றும் செயல்வாத நடவடிக்கைகளில் நிர்ணயகரமான செல்வாக்கைச் செலுத்தும் ஒரு சூழலில் உலகப் பேரரசு ஒன்றின் தலைநகரிலிருந்து ஜனாதிபதி அந்த அழைப்பை விடுத்திருக்கிறார். டயாஸ்பொறவை கையாண்டால் நிலைமையை குறிப்பிடத்தக்க அளவுக்கு சமாளிக்கலாம் என்று ஒரு முடிவுக்கு அரசாங்கம் வந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஆனால் இந்த அரசாங்கம்தான் சில மாதங்களுக்கு முன்பு டயாஸ்பொற தமிழ் அமைப்புக்களையும் நபர்களையும் தடை செய்தது. அவ்வாறு தடை செய்யப்பட்ட நபர்களும் அமைப்புகளும் ஏற்கனவே முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் தடை நீக்கப்பட்டவர்களே. அவர்களைத் தடை நீக்கிய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மேற்கத்தைய நாடுகளின் அரசுகளுடன் இணைந்து தமிழ் டயாஸ்பொறவை வசப்படுத்த முயற்சித்தது. அதன்மூலம் புலம்பெயர்ந்த தமிழ் பரப்பில் பிரிவினைகளையும் ஏற்படுத்தியது. ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களால் பிரித்தாளும் தந்திரம் மிக்க ஒருவராக பார்க்கப்படுகிறார். அவர் தமிழ் டயாஸ்பொறவை குறிப்பிடத்தக்க அளவுக்கு பிரித்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதன்மூலம் ஜெனிவாக் கூட்டத்தொடர்களில்தமிழ் டயாஸ்பொற இரண்டுபட்டு நின்றது. இது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐநாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் தமிழ் மக்களை கையாள்வதற்கான வழிகளை ஒப்பீட்டளவில் இலகுவாக்கி கொடுத்தது.

ஆனால் ராஜபக்சக்கள் மறுபடியும் ஆட்சிக்கு வந்தபின் அந்த அமைப்புகளையும் தனி நபர்களையும் மறுபடியும் தடை செய்தார்கள். எனினும் அவ்வாறு தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் தலைவரான கத்தோலிக்க மதகுரு இப்பொழுதும் யாழ்ப்பாணத்தின் தெருக்களில் லேடிஸ் சைக்கிளில் வழமைபோல நடமாடித் திரிகிறார். கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த புதிதில் தன்னை மூன்றில் இரண்டு தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்ற ஓர் அரசாங்கமகவே கட்டிக்கொண்டது. ஆனால் ராஜபக்சக்களின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திலிருந்தே வைரஸ் அரங்கினுள் பிரவேசித்தது. இதனால் ஏற்கனவே சரிந்து போயிருந்த பொருளாதாரம் மேலும் திணறியது. தவிர மேற்கு நாடுகள் மற்றும் ஐநா வின் அழுத்தமும் அதிகரித்தது. இவற்றின் விளைவாக ராஜபக்சக்கள் மேற்கையும் ஐநாவையும் நோக்கிய தமது அணுகுமுறைகளை தளர்த்த தொடங்கினார்கள்.

பசில் ராஜபக்சவை முன்னிறுத்தி ராஜிய மாற்றங்களை அவர்கள் முன்னெடுத்தார்கள். பசில் ராஜபக்ச, புதிய வெளியுறவு அமைச்சர் ஜி எல் பீரிஸ், இந்தியாவுக்கான தூதர் மிலிந்த மொரகொட போன்றோரை முன்னிறுத்தி அரசாங்கம் மேற்கையும் இந்தியாவையும் ஐநாவையும் சுதாகரிக்கும் வேலைகளை தொடங்கியது.இவ்வாறு சுதாகரிக்கும் வேலைகளில் ஒரு பகுதியாகவே முன்னைய ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அதே உபாயத்தை இப்பொழுது கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கமும் கையில் எடுத்திருக்கிறதா?

**(தொடர்ச்சி 10ம் பக்கம்)**

இந்தியா செய்திகள்
India News

# மோடியின் விளம்பர மோகத்துக்கு "ஆப்பு": உச்சநீதிமன்ற மின்னஞ்சல் முகவரியில் மோடி படத்தை நீக்க உத்தரவு




பொதுவாக அரசியல் தலைவர்கள் விளம்பர பிரியர்கள்தான். இருந்தாலும், சமீப காலத்தில் பாஜக தலைவர்களின் விளம்பர மோகம் ரொம்பவே அதிகம் தான்.

சமீபத்தில் உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி, தனது ஆட்சியில் மாநிலம் வளர்ந்துள்ளது என்று விளம்பரம் மூலம் கொல்கத்தாவில் தெரியப்படுத்தினார். அதில் அவரது மாநில அரசின் சாதனை விளம்பரத்தில் கொல்கத்தாவில் உள்ள மேம்பால படம் இடம்பெற்று இருந்தது.

இதனால், மேற்கு வங்கத்துக்கும் உபிக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு, விமர்சகர்கள் கிண்டலடித்தனர். இப்போது இதேபோன்று ஒரு விளம்பர மோகத்திற்காக பிரதமர் மோடி உச்சநீதிமன்றத்தால் குட்டுப்பட்டுள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் அதாவது இமெயில் முகவரியில் பிரதமர் மோடியின் போட்டோ இடம் பெற்றிருந்தது. 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் விதமான வாசகங்களும் அதில் இடம்பெற்றிருந்தன.

ஆகஸ்டு மாதம் வெளியிடப்பட்ட இந்த விளம்பரத்தை இத்தனை நாளும் யாருமே கவனிக்கவில்லை. நேற்று முன்தினம்தான் சுப்ரீம் கோர்ட்டின் பதிவாளர் இதை கவனித்திருக்கிறார். உடனடியாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கவனத்திற்கு எடுத்துச் சென்றார்.

இதைத்தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரப்பூர்வ இ-மெயில் முகவரியிலிருந்து பிரதமர் மோடியின் போட்டோவையும், வாசகங்களையும் உடனடியாக நீக்க தேசிய தகவல் மையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இ-மெயிலில் பிரதமர் மோடியின் போட்டோ இருந்த இடத்தில், சுப்ரீம்கோர்ட்டின் போட்டோவை வைக்கவும் அறிவுறுத்தியுள்ளது.

# கேரள பல்கலைக்கழகத்தில் ஆர்எஸ்எஸ் தலைவர்கள் நீக்கம்

## பெரியார், ஜின்னா சித்தாங்களைச் சேர்க்க முடிவு



கேரள மாநிலம் கண்ணூர் பல்கலைக்கழகத்தில், அண்மையில் முதுகலை எம்ஏ பட்டப் படிப்பிற்கான மூன்றாவது செமஸ்டர் பாடத் திட்டத்தில் புதிதாக பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது.

அதில், ஆர்எஸ்எஸ் மற்றும் இந்துத்துவ சிந்தனையாளர்களான கோல்வல்கர், சாவர்க்கர் மற்றும் தீனதயாள் உபாத்தியாயா ஆகியோரைப் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் படிப்பு தலசேரியில் உள்ள ஒரு அரசுக் கல்லூரியில் கற்பிக்கப்பட்டது. இதற்கு மாணவர் சங்கங்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன.

கேரள மாணவர் சங்கம், காங்கிரஸ் மாணவர் பிரிவு, முஸ்லிம் மாணவர் கூட்டமைப்பு மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாணவர் பிரிவு ஆகியோர் பாடத்திட்டத் தாள்களை நகலெடுத்து, அவற்றை எரித்து தங்களின் எதிர்ப்பை தெரிவித்தனர். எனினும், புதிய பாடத்திட்டத்தின் மூலம் காவிமயமாக்கப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கோபிநாத் ரவீந்திரன் மறுப்பு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "அரசியல் சிந்தனைகள் மற்றும் வரலாற்றைப் படிக்கும்போது அதன் அனைத்துப் பக்கங்களும் விவாதிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்ததும் சர்ச்சையை ஏற்படுத்தியது.



இதையடுத்து, சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தை ஆய்வு செய்ய கேரள பல்கலைக்கழகத்தின் முன்னாள் சார்பு துணைவேந்தரான பிரபாஷ் தலைமையில் இரு நபர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில், "நவீன அரசியல் சிந்தனையில் இந்தியா" என்னும் பாடத்தில் இருந்து தீனதயாள் உபாத்தியாயா, பல்ராஜ் மதோக் ஆகியோரின் தகவல்கள் நீக்கப்பட உள்ளன. சாவர்க்கர், கோல்வால்கர் ஆகியோர் குறித்த தகவல்கள் பாடத்திட்டத்தில் தொடர்ந்து நீடிக்கும்.



அதேபோல, இஸ்லாமிய, திராவிட, காந்தியக் கொள்கைகளையும் பாடத்திட்டத்தில் சேர்க்க பாடத்திட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன்படி மௌலானா அபுல் கலாம் ஆசாத், முகமது அலி ஜின்னா மற்றும் ஈவேரா பெரியார் ஆகியோரின் சித்தாங்களைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் மத்தியில் தேசவிரோத கருத்துகளை தெரிவித்தல், கூடாதென்று அப்பல்கலைக் கழகம் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.



# தீராது பார்த்தீபனின் பசி

**- தீபச்செல்வன்**

**போ**ர் முடிந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்த குழந்தை அவன். அன்றைக்கு பத்திரிகை வாசிப்பு காலையில் நடந்தபோது "தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்.." என்ற செய்தியை மூத்த மாணவர்கள் படித்தார்கள். அதைக் கேட்டதும் அந்த மாணவன் என்னிடம் வந்து "தியாக தீபம் திலீபன் என்பவர் யார் சேர்" எனக் கேட்டான். இந்தக் கேள்வி மாபெரும் தேடலின் அடையாளம். இந்த மண்ணில் எம் கனவுகளையும் நினைவுகளையும் ஆழக் கிண்டிப் புதைத்தாலும் அது மண்ணை முட்டி வெடித்து முளைக்கும் என்பதையே உணர்த்துகிற தருணமாகத் தென்படுகிறது.

ஈழப் போராளிகளின் ஒவ்வொரு நினைவு நாளும் கனத்தவொரு நாட்களாகவே கடந்து செல்கின்றன. திலீபன் அவர்களின் ஒவ்வொரு நினைவேந்தல் காலத்திலும் பள்ளிப் பிள்ளைகள், அவரைக் குறித்து கேட்டுக் கொண்டே இருப்பார்கள். பன்னிரு நாட்களும் பசியில் இருந்து போராடிய திலீபனை பற்றி வியப்போடு திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கும் என் மாணவப் பிள்ளைகளின் முகங்களிலும் வரலாறும் கனவுகளும் துலக்கமாகத் தெரிவதைக் காண்பேன். தம் காலத்தில் கண்டிராத, எந்தக் கதைகளிலும் பாடப் புத்தகங்களிலும் படித்திராத ஒரு நாயகனைப் போல திலீபன் எம் மாணவப் பிள்ளைகளின் கண்களில் சுடர்ந்து மினுங்குவதைக் காண்கிறேன்.

போருக்குப் பிறகு, வளர்ந்து வரும் ஒரு தலைமுறையிடம் இத்தகைய வியப்பை உருவாக்கிய பெருமை இலங்கை அரசைத்தான் சாரும். தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலை தடை செய்வதன் வாயிலாக, இந்நாட்களை மறந்திருக்கும் தமிழர்களுக்கும் அரசு நினைவுபடுத்துகின்றது. திலீபனை தெரியாத தலைமுறைக்கும் அரசு தெரியப்படுத்துகின்றது. திலீபன் மேற்கொண்ட போராட்டமும் கடந்த வாழ்வும் என்பதும் எதிரிகளால்கூட மறுக்க முடியாத ஒரு தியாகத்தின் உயரம். மகத்துவம் நிறைந்த ஈழ விடுதலைப் போராட்டத்தின் அகிம்சை முகம்மதான் திலீபன்.

ஈழத் தமிழ் மக்களின் போராட்டம் எவ்வளவு நியாயம் மிக்கது என்பதை ஈழ விடுதலைப் போராளிகள் வரலாறும் உணர்த்திக் கொண்டே இருப்பார்கள். அதுதான் அவர்களின் போராட்டம். உண்மையில் போராளிகளின் வகிபாகம் என்பது நிகழ்காலத்துடன் முடிந்துபோகிற ஒன்றல்ல. அரசியல் தலைவர்கள் முன்னாள் தலைவர்கள் ஆகிறார்கள். ஜனாதிபதிகளும் பிரதமர்களும்கூட முன்னாள் தலைவர்களாக மறைந்துவிடுகிறார்கள். ஆனால் போராளிகள் என்றைக்கும் போராளிகளாகவே இருக்கிறார்கள். என்றைக்கும் தங்கள் சனங்களுக்காக போராடிக் கொண்டே இருக்கிறார்கள்.

1987இல் யார் பிரதமராக இருந்தார் என்பது நமக்கு அவ்வளவு நினைவாக இல்லாமல் இருக்கலாம். அன்றைக்கு யார் ஜனாதிபதியாக இருந்தார் என்பதும்கூட நமக்கு மறந்துபோயிருக்கலாம். ஆனால் 1987இல் ஒரு 23 வயது இளைஞன் எங்களுக்காக பசியால் ஒரு தவம் செய்தார் என்பதை இன்றைய எம் மக்கள் மாத்திரமல்ல, என்றைய மக்களும் மறந்துபோய்விடமாட்டார்கள். இந்த வரலாற்றுக்கு முன்னால், இந்த உண்மையின் முன்னால் இலங்கை அரசின் தடைகள் மக்களுக்கு ஒரு பொருட்டாக இருக்காது. அது திலீபனுக்கு இன்னும் பெரிதான நினைவேந்தலையே ஏற்பாடு செய்கிறது.

இராசையா பார்த்திபன் எனப்படும் லெப்டினன் கேணல் திலீபன் அவர்கள், நவம்பர் 27, 1963ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஊரெழுவில் பிறந்தவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராக இருந்த திலீபன் அவர்கள் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். அவர் கருத்தியல் ரீதியாக ஆழமான புரிதல் கொண்ட ஒரு போராளியாக இருந்தார். பால்நிலை மற்றும் சமூக சமத்துவக் கண்ணோட்டம், பிற்போக்குத்தனங்களை உடைக்கும் முற்போக்குத் தன்மை கொண்ட திலீபன் ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஜனநாயக முகமாகும்.

திலீபனின் முகம் மாத்திரம் ஈர்ப்பானதல்ல. அவர் ஆற்றிய உரைகளும் ஈழ மக்களை இன்றும் நம்பிக்கையும் எழுச்சியையும் கொள்ளச் செய்பவை. ஆயுதப்போராட்டத்தில் இணைந்த திலீபன் அகிம்சையைக் கையில் எடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உன்னதமான ஜனநாயகப் போக்கினை இவ் உலகிற்கு வெளிப்படுத்தினார். செப்டம்பர் 15, 1987. இந்திய அரசிற்கு எதிராக தனது உண்ணா நோன்புப் போரை ஆரம்பித்த அவர் வலியுறுத்திய ஐந்து அம்சக் கோரிக்கைகள் இன்றும் ஈழ நிலத்தின் கோரிக்கைகளாக இருக்கின்றன:

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்பனவே அக் கோரிக்கைகளாகும்.

திலீபன் முன்வைத்த, ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளாமல், சிங்கள அரசுக்கு துணை செய்தது, அதன் இன நில அழிப்புச் செயல்களுக்கு ஒத்தாசை புரிந்தது. தியாக தீபம் திலீபன் அவர்கள் உண்ணா நோன்பை தொடங்கியபோது, ஒட்டு மொத்த ஈழமும் பசியிருந்தது. நல்ல முடிவு வரும், திலீபன் மீண்டு வருவார் என்று காத்திருந்தது. தன்னை உருக்கி உருக்கி தமிழர்களின் கோரிக்கையை வலுப்படுத்தினார் திலீபன். மெலிந்த தேகம், ஈர்க்கும் புன்னகை, புரட்சிக் குரல், இந்திய அரசின் துரோகத்தால் ஈழ மண்ணில் சாய்ந்தது. உண்ணா நோன்பின் 12ஆவது நாள், 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு ஈழ மண் பெற்றெடுத்த ஒப்பற்ற விடுதலைப் போராளி திலீபன் அவர்கள், தன்னுடைய 23ஆவது வயதில் வீர மரணம் எய்தினார்.

கடந்த காலங்கள் போலன்றி இன்னும் காலம் இறுக்கப்படுகிறது. அதற்காக கடந்த காலத்தில் பேரமைதி நிலவியது என்பதல்ல பொருள். எங்கள் காலம் இரும்பாய் இறுகிக் கொண்டிருக்கிறது. முகநூல்களில் தியாக தீபத்தின் புகைப்படத்தையோ, அவருக்காக சில வரிகளையோ எழுத எம் நிலத்தில் பிள்ளைகள் அஞ்சுகிறார்கள். போராளிகளை அழித்துவிட்டோம் என்று மார்தட்டும் பேச்சுக்களை பேசி அதனையே தம் அரசியல் இருப்பாக கொள்ளுகின்ற இன அழிப்பு அரசு, போராளிகளுக்கு இன்னமும் கடுமையாக அஞ்சிக் கொண்டே இருக்கிறது.

ஈழப் போராளிகளை தடை செய்தால் அது ஈழத் தமிழ் இனத்தை தடை செய்வதற்கு ஒப்பாகும். தடைசெய்யப்பட்ட ஒரு இனம் தன் தேசியஇறைமையை மீட்பது தவிர்க்க முடியாதது. நீங்கள் ஸ்ரீலங்கன் இல்லை என்பதையும் நீங்கள் ஈழ தேசத்தை சேர்ந்தவர்கள் என்பதையும் மீண்டும் மீண்டும் சொல்கிறது சிங்களம். நினைவேந்தல் என்பது எந்த இனத்திற்கும் சமூகத்திற்கும் பக்கச்சார்பான விடயமல்ல. அது மனிதர்கள் தமது முன்னோர்களை நினைவுகூர்கின்ற மதிப்பு செய்கின்ற பண்பாடு. இனத்தின் எல்லா உரிமைகளையும் மறுக்கின்ற சிங்கள அரசு, இதையும் மறுத்து தம் உரிமை மறுப்பின் கொடூர முகத்தை இவ் உலகிற்கு காண்பிக்கின்றது. போருக்குப் பிந்தைய இலங்கை நிலவரத்தின் ஐ.நா சபை அறிக்கையில் நல்லிணக்க முயற்சிகளுக்கான செயற்பாடுகளில் நிலைமாறு நீதியில், நினைவுகூறும் உரிமை எல்லா சமூகங்களுக்கும் உரித்தான உரிமை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

திலீபன் என்ற மகத்துவமான போராளி பற்றி சிங்களவர்கள்கூட மிக வியப்பை வெளிப்படுத்துகிறார்கள். திலீபன் ஈழ மக்களுக்காக மாத்திரமன்றி சிங்கள மக்களுக்காகவும் தான் போராடியதாக ஒரு சிங்களக் கவிஞர் நினைவுணர்வை பகிர்ந்து கொண்டார். உண்மையில் போராளிகளின் தியாகங்களும் அவர்தம் உன்னத பணிகளும் குறுகிய நிலத்திற்குள் முடங்கிவிடுவதில்லை. அவர்கள் உலகத்திற்கானவர்கள். அவர்களின் தியாகம் அளப்பெரியது. ஈழத் தமிழ் இனத்திற்காக பசி எனும் ஆயுதத்தால் களமாடிய தியாக தீபம் திலீபன் என்கிற பார்த்தீபனின் பசி இப் பார் உள்ளவரை நெருப்பாய் நின்றெரியும்.

(8ம் பக்கம் தொடர்ச்சி)

# கோட்டாபய தமிழ் டயாஸ்பொறவை அழைக்கிறார்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

அது என்னவெனில் தமிழ் டயஸ்போறாவை அரவணைத்துப் பிரிப்பது. அமெரிக்காவில் ஜனாதிபதி ஆற்றிய உரை அதைத்தான் நமக்கு உணர்த்துகிறது. அவர் உள்ளகப் பொறிமுறைக்கு புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திடம் ஆதரவை கேட்கிறார். அதோடு தமிழ் டயாஸ்பொறவை நாட்டில் வந்து முதலீடு செய்யுமாறு கேட்கிறார். இது ஒரு கொள்கை மாற்றம். உத்தி மாற்றம்.அரசாங்கம் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் இன்றியமையாத் தன்மையை விளங்கியிருக்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறது. இது விடயத்தில் தமிழ் டயாஸ்பொறவும் உட்பட முழுத்தமிழ் சமூகமும் மாறி வரும் புதியசூழலை தொகுத்தும் பகுத்தும் கற்றுக்கொள்ளவேண்டும். எந்த அமெரிக்கா சவேந்திர சில்வாவை நாட்டுக்குள் வரக்கூடாது என்று பயணத் தடை விதித்ததோ அதே அமெரிக்காவில் கோட்டாபய ராஜபக்ஷ ஐநா பொதுச்செயலரை சந்திக்கிறார். ஐநாவில் உரை நிகழ்த்துகிறார்.

ஏறக்குறைய இதே காலப்பகுதியில்தான் சற்று முன்னதாக அவருடைய தமையனார் மஹிந்த ராஜபக்ச இத்தாலிக்கு போயிருந்தார். அங்கேயும் அவர் ஓர் அனைத்துலக மாநாட்டில் உரை நிகழ்த்தினார். தமிழர்கள் இங்கே ஒரு முக்கியமான விடயத்தை கவனிக்க வேண்டும். இந்த இரண்டு சகோதரர்களும் அரசியல் தீர்மானம் எடுத்து வழிநடத்திய ஒரு யுத்தத்தில் உத்தரவுக்கு கீழ்படியும் ஒரு கருவியாக செயல்பட்ட ஒரு தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வரக்கூடாது என்று தடை செய்திருக்கிறது. அவரைப் போல மேலும் சில தளபதிகளை மேலும் சில மேற்கு நாடுகளும் குறிப்பாக ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் தடை செய்திருப்பதாக அறியமுடிகிறது. கோட்டாபய ராஜபக்சவின் மூளை என்று கருதப்படும் வியத்மக சிந்தனைக் குழாத்தின் இணையதளத்தில் கலாநிதி பாலித கோகன்ன-இப்பொழுது சீனாவுக்கான தூதுவர் - ஆற்றிய உரை ஒன்று உண்டு. அதில் அவர் அவ்வாறு தமது தளபதிகள் வெளிநாடுகளில் படிக்கும் தமது பிள்ளைகளை சந்திக்க முடியாதிருப்பதைக் குறித்து கருத்துக் கூறியுள்ளார்.

இவ்வாறு தளபதிகளை நாட்டுக்குள் வரவிடாது தடுக்கும் மேற்கத்தைய அரசுகள் அந்த தளபதிகளுக்கு உத்தரவிட்ட அரசியல் தலைவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதை எப்படிப் பார்ப்பது? ஏய்தவர்களை தண்டிக்காமல் அம்புகளை தண்டிக்கும் இந்த அரசியலில் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்காவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை அந்நாட்டின் பிரதானிகள் சந்திக்கவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மேற்குநாடுகள் இலங்கை தொடர்பாக எவ்வாறான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றன என்பதை இது உணர்த்துகிறது. ஓர் அரசுடைய தரப்பாக சிங்கள மக்களுக்குள்ள வசதி வாய்ப்புகளையும் இது காட்டுகிறது. இந்த அரசியலை சரியாக விளங்கிக் கொண்டால்தான் கோத்தாபயவின் அழைப்பை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து ஒரு பொருத்தமான வழிவரைபடத்தை உருவாக்கி கொள்ளலாம். ஜனாதிபதியின் அழைப்புக்கு தமிழ் டயாஸ்பொறவிலுள்ள எட்டு அமைப்புகள் எச்சரிக்கையுணர்வோடு பதில்வினை ஆற்றியுள்ளன. அதில் அவை அமெரிக்கா பிரித்தானியா இந்தியா போன்ற ஏதோ ஒரு நாடு அல்லது இணை நாடுகளின் அனுசரணையோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றும், உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் தெரிவித்திருக்கின்றன. தமிழ் டயாஸ்பொற அமைப்புக்கள் இப்போதுள்ள அரசியல்சூழலில் தங்களுக்குள்ள பேரபலத்தை விளங்கி ஒன்றுபட்டு செயற்படுவார்களாக இருந்தால் அது தமிழ் அரசியலில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தக்கூடும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு தேர்தல் காலங்களில் பல கோடி வழங்கப்பட்டது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்



தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு தேர்தல் காலங்களில் பல கோடி ரூபாக்கள் வழங்கப்பட்டது. மட்டக்களப்பில் 45 இலட்சம் ரூபாய் சுமந்திரனால் 11 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் 3 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டதென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், என்னைப் பற்றி சுமந்திரன் தனியார் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்ததை நான் அவதானித்தேன். வல்வெட்டித்துறை நகரசபை கூட்டமைப்பிடம் இருந்து பறிபோனதற்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் விக்னேஸ்வரன் ஐயாவை துரோகிகள் என்ற அர்த்தத்தில் நான் பேசியதாக சுமந்திரன் கருத்து தெரிவித்திருந்தார். நான் விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரனை துரோகி என கூறவில்லை. எனது காணொளியை பார்த்தால் நன்கு தெரியும்.

நகரசபைத் தவிசாளரை தேர்ந்தெடுப்பதிலே அதிருப்தியுற்று சதீஸ் அவர்கள் அந்தக் கூட்டத்தை பகி'கரித்திருந்தார். சுமந்திரன் அவர்கள் கூறுகின்றார் சதீஸ் அவர்கள் தலைவர் பதவிக்கு போட்டியிடாரென்று. கூட்டத்தை பகிஷ்கரித்திருந்த சதீஸ் எவ்வாறு தவிசாளராக போட்டியிட்டிருப்பார். ஊடகப் பேச்சாளர் என்று கூறிக்கொண்டு தெரியாத விடயங்களைப் பற்றி சுமந்திரன் பேசக்கூடாது. தெரியாத விடயங்களை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளர் பதவியில் இருந்துகொண்டு கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக செயல்பட்டவரின் உறுப்புரிமை பறிக்கப்பட்டு தற்போது அங்கு ஈபிடிபி ஆட்சி அமைக்கப்பட்டிருக்கின்றது. அப்படியானால் ஏன் சதீஷினுடைய உறுப்புரிமை பறிக்க முடியாமல் போனது. ஜனாதிபதி சட்டத்தரணியான முடியாமல் போய்விட்டதா? உங்களுடைய கனி'ட சட்டத்தரணிகள் சரியாக செய்யவில்லை என்றால் அதனை செய்விக்க வேண்டியது யார்?

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் இந்த வழக்கில் ஐந்து தடவைக்கு மேல் சுமந்திரன் ஆஜராகி 42 மாதங்கள் கடந்தும் இந்த வழக்கு தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

சதீஷ் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்ததாக சுமந்திரன் அவர்கள் தெரிவித்திருந்தார். எனக்கென்னவோ சுமந்திரனுக்கு ரணிலுடன் பழைய நினைவுகள் வந்து விட்டது போல தான் தென்படுகிறது. சதீஸ் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிட்ட கணேஸ்வரன் வேலாயுதத்தின் இணைப்புச் செயலாளராகவே சம்பளத்துக்கு பணிபுரிந்தார்.

நான் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு அனுப்பியதாக சுமந்திரன் கூறும் கடிதத்தை அவர் வெளிப்படுத்த வேண்டும். நான் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எழுதிய கடிதம் என்பது வல்வெட்டித்துறை நகரசபை வரவு செலவு திட்டம் தொடர்பாக உள்ள பிரச்சினைகளை பற்றியதாகும். அதில் நான் யாரையும் துரோகி என்று கூறவில்லை.

நான் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும் இல்லை ரெலோவிலும் இல்லை. ஆனால் நான் ஏதோ கள்ள உறவு வைத்திருப்பது போல சித்தரிக்கின்றார். வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக நான் செயல்பட்டேன்.

கூட்டமைப்புக்கு எதிராக செயற்பட்ட ஒருவரையும் கூட்டிக்கொண்டு சுமந்திரன் வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளரை ச சந்தித்திருக்கிறார். நீங்கள் கூட்டமைப்பின் ஒற்றுமையை குழைக்கின்றீர்களா? யாழ் மாநகரசபையிலும் இதே வேலையை செய்தீர்கள. தவிசாளர் இல்லாதவிடத்து அடுத்த தவிசாளர் போட்டிக்கு உபதவிசாளரையே நியமித்திருக்க வேண்டுமென சுமந்திரன் கூறுகிறார். ஆனால் இதே விடயத்தை நல்லூர் பிரதேச சபையிலும் யாழ்ப்பாண மாநகர சபையிலும் அவர் செய்யவில்லையே? ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு சட்டத்தை சுமந்திரன் பயன்படுத்துகின்றரா?

நான் குருநாகலில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டமை தொடர்பில் சுமந்திரன் கருத்து தெரிவித்திருந்தார். நான் ஜனாதிபதி வேட்பாளராக குருநாகலில் போட்டியிட்டபோது சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறி இருந்தேன். அதற்கு ஆதாரமாக வீக்லீஸ் வெளியிட்ட பதிவுகள் இருக்கின்றது. இலங்கைக்கான அமெரிக்க தூதராக இருந்த பற்றீசியா அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய செய்தி குறிப்பில் சர்வதேச விசாரணையை கோரும் ஒரே ஒரு தமிழன் சிவாஜிலிங்கம் தான் என கூறியிருந்தார்.

2010, 2015, 2019 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில்களில் தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு பல கோடி ரூபாக்கள் வழங்கப்பட்டது. மட்டக்களப்பில் 45 இலட்சம் ரூபாய் சுமந்திரனால் 11 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.



இது கட்சியின் நிர்வாக செலவுக்காக வழங்கப்பட்டதா அல்லது பிரச்சாரத்துக்காக வழங்கப்பட்டதா என்பது வழங்கியவருக்கு தான் தெரியும். ஆகவே பகிரங்கமாகவே சொல்கிறேன் பணம் வழங்கியது உண்மை முடிந்தால் வழக்கு போடுங்கள். இன்னும் பல விடயங்கள் அம்பலப்படுத்த வேண்டியுள்ளது அதனை நீதிமன்றத்தில் அம்பலப்படுத்துவேன்.இவ்வாறு சுமந்திரன் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே சென்றார் சிவாஜிலிங்கம்


# DEBT FREE CREDIT SOLUTIONS

DF CREDIT SOLUTION

*We offer* **FREE of Consultation***

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy



*Conditions Apply

**416.834.7227**

Tel 416.434.1522
Fax 1.877.800.7899

Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

Head Office: 10 Milner Business Court, Suite 334, Toronto, ON M1B 3C6
Branch Office: 101 Palstan Road, Mississauga, ON L4Y 4E7

Info@DebtFreeCreditSolution.ca www.DebtFreeCreditSolution.ca

# எம்.ஜி.ஆர் குறித்த அமைச்சர் துரைமுருகன் கருத்து....! அ.தி.மு.க. கண்டனம்

முன்னாள் முதல்அமைச்சர் எம்.ஜி.ஆர் குறித்த அமைச்சர் துரைமுருகனின் கருத்துக்கு அ.தி.மு.க. தலைமை கண்டனம் தெரிவித்து உள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் திமுக கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக கூட்டம் நடைபெற்றது. திமுக கூட்டணி நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர். அப்போது, அமைச்சர் துரைமுருகன் எம்ஜிஆர், வைகோ எல்லாம் திமுகவில் இருந்து வெளியேறிய துரோகிகள் என்ற கருத்தை தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் திமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : கடந்த 28.9.2021 அன்று திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் நடைபெற்ற திமுக நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய திமுக வின் பொதுச் செயலாளரும், மூத்த அமைச்சருமான திரு. துரைமுருகன் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனர், 'பாரத் ரத்னா' இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை நம்பிக்கை துரோகி என்று கூறி இருப்பது, சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது.

வரலாறு என்பது நின்று, நிலைத்து நிற்கும் கல்வெட்டைப் போன்றது. அப்படிப்பட்ட வாலாற்றுக்குச் சொந்தமாக வேண்டும் என நினைப்பவர்கள் ஏராளம். ஆனால், வரலாறே ஒரு சிலரைத் தான் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. அந்த ஒரு சிலரில் ஒருவர் தான் எம்.ஜி.ஆர். அவர்கள்.

"என்னை அறியாமலேயே என் மடியில் சனி ஒன்று வந்து விழுந்தது கண்டேன். அதன் அருமை கருதி அதனை எடுத்து என் இதயத்திலே வைத்துக்கொண்டேன். அதுதான் எம்.ஜி.ஆர்.'" என்றும். "நீ முகம் காட்டினால் முப்பது இலட்சம் வாக்குகள் நிச்சயம்" என்றும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் போற்றப்பட்டு, தன்னுடைய திரைப்படங்களின் பாடல்கள் வாயிலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்கு வித்திட்ட புரட்சித் தலைவரைப் பார்த்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, அடுத்த நிலையில் உள்ள அனுபவம் மிக்கவர் தமிழ் நாட்டின் அடுத்த முதலமைச்சராக வருவார் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த நிலையில், திரு. மு. கருணாநிதி



அவர்களை முதலமைச்சராக்கிய புரட்சித் தலைவரைப் பார்த்து 'நம்பிக்கை துரோகி' என்று திரு.துரைமுருகன் சொல்வது கடும் கண்டனக்கிற்குரியது.

திரு. துரைமுருகன், தி.மு.க. கடந்து வந்த பாதையை, தான் கடந்து வந்த பாதையை மறந்துவிட்டுப் பேசுகிறாரா அல்லது மறைத்துவிட்டுப் பேசுகிறாரா என்று தெரியவில்லை. 'நம்பிக்கைத் துரோகம்' என்று திரு. துரைமுருகன் கூறியவுடன் எங்கள் நினைவிற்கு வருவது உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வது' என்ற பழமொழிதான். "உணவு தந்த வீட்டிற்கு கேடு தரும் செயலை நினையாமல் இருக்க வேண்டும். அவருக்கே கேடு செய்வது தான் நம்பிக்கைத் துரோகமாகும்." இதைச்செய்தவர்கள் யார் என்பதை முதலில் துரைமுருகன் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

தி.மு.க. என்ற அரசியல் கட்சி ஆட்சிப் பீடத்தில் அமருவதற்கும், திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சரானதற்கும் காரணமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையே, கணக்கு கேட்டதற்காக கட்சியை விட்டு நீக்கிய திரு. கருணாநிதி அவர்கள் தான் நம்பிக்கைத் துரோகி.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில், உச்சநீதிமன்றத்தில் இருந்த வழக்கினை சத்தம் போடாமல் திரும்பப் பெற்றது, தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கருணாநிதி செய்த மிகப் பெரிய துரோகம். கச்சத் தீவை தாரை வார்த்தது, தமிழ் நாட்டில் உள்ள மீனவ மக்களுக்கு செய்த துரோகம். இலங்கையில் போர் நின்றுவிட்டது என்று கூறி இலங்கைத் தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட காரணமாக இருந்தது, இலங்கைத் தமிழர்களுக்குச் செய்த துரோகம்.

நீட் தேர்வுக்கு வித்திட்டது ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களுக்கு செய்த துரோகம். ஜல்லிக்கட்டு வீர விளையாட்டிற்கு தடை விதித்த மத்திய அரசிற்கு துணையாக இருந்தது, பாரம்பரிய விளையாட்டு வீரர்களுக்கு செய்தததுரோகம். சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு என்ற கொள்கைக்கு ஆதரவாக வாக்களித்தது, வணிகர்களுக்கு செய்த துரோகம். கழகமே குடும்பம்' என்றிருந்த தி.மு.கவை, "குடும்பமே கழகம்" என்று மாற்றியது தி.மு.கவினருக்கு செய்த மிகப் பெரிய துரோகம்.

இப்படி, எண்ணற்ற துரோகங்களைச் செய்தவர் தான் மறைந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி. அவர் மறைவிற்குப் பின் அந்தப் பணியை திரு. துரைமுருகன் எடுத்துக் கொண்டிருக்கிறார் போலும்! அதனால் தான், தன்னை வளர்த்து ஆளாக்கிய புரட்சித் தலைவரையே நம்பிக்கைத் துரோகி என்று சொல்லி இருக்கிறார். திரு. துரைமுருகனின் இந்தப் பேச்சு நம்பிக்கைத் துரோகத்தின் உச்சக் கட்டம்.

புரட்சித் தலைவர் அவர்கள் எந்தக் காலத்திலும் யாருக்கும் துரோகம் செய்ததில்லை. துரோகம் செய்ய வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. ஏனென்றால், அவர் மக்கள் செல்வாக்கு படைத்தவர்; மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர். புரட்சித் தலைவரை நம்பி வாழ்ந்தவர்கள் உண்டு, ஆனால் அவர் எந்த ஒரு தனி நபரையும் நம்பி வாழவில்லை. அவரிடம் உள்ள மிகப் பெரிய சக்தி மக்கள் சக்தி. அவருக்குத் துரோகம் செய்தவர்கள் காணாமல் போன வரலாறு உண்டு என்பது திரு. துரைமுருகன் அவர்களுக்கே நன்கு தெரியும். இருந்தாலும் அவருக்கு நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை இழிவுபடுத்தும் வகையில் பேசும் திரு. துரைமுருகனின் இந்தப் பேச்சு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. "துரோகம் கத்தியைப் போன்றது. மற்றவர்களைக் குத்தும்போது சுகமாக இருக்கும். நம்மை திரும்பிக் குத்தும்போது கொடூரமாக இருக்கும்" என்பதை திரு. துரைமுருகன் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

எப்படிப்பட்ட பாவத்தைச் செய்தவர்க்கும் அதிலிருந்து தப்பிக்க வழி உண்டு. செய் நன்றி மறந்த பாவத்திலிருந்து விடுபட வேறு மார்க்கம் இல்லை" என்ற திருவள்ளுவரின் வாக்கினை மனதில் நிலை நிறுத்தி, இனி வரும் காலங்களில் நாவடக்கத்துடன் பேச வேண்டும், எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# அக்.1 உலக முதியோர் தினம்: முதியோர் நலம் பேண 'முதியோர் நலவாரியம்' அமைக்க வேண்டும் : பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல மருத்துவர்



முதியோர் நலம் பேண 'முதியோர் நலவாரியம்' அமைக்க வேண்டும் என்று முதியோர் நல மருத்துவர் வி.எஸ்.நடராஜன் தெரிவித்துள்ளார். உலக முதியோர் தினம் அக்.1ம்தேதி கடைபிடிக்கப்படுகிறது. தமிழகத்தில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 75 லட்சம் முதியோர் உள்ளனர். 2030ல் இந்த எண்ணிக்கை 1.5 கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. முதுமை அடைந்து வரும் இந்தியா, விரைவில் முதியோர்களின் உடல் நலம் மற்றும் முதியவர்களின் நிதி, குடும்ப நலம் ஆகிய இரண்டு பெரிய சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

பிரச்சினைகளும் தீர்வுகளும்'மக்களைத் தேடி மருத்துவம்' என்பதுமிகச் சிறந்த மற்றும் பயனுள்ள திட்டமாகும். இதன்மூலம் அதிகம் பயன் பெறுபவர்கள் முதியோர்களே. கரோனா தடுப்பூசியை எப்படி, 80 வயது முதியவர்களுக்கு இல்லம் சென்று இலவசமாக போடப்பட்டதோ, அதேபோல் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள 60 வயதைக் கடந்த முதியவர்களுக்கும் நிமோனியா தடுப்பூசியை இலவசமாகப் போட வேண்டும்.சென்னை கிண்டியில் ரூ.220 கோடியில் முதியோர்களுக்காக தேசிய முதியோர் நல மையம் (மருத்துவமனை) நிறுவப்பட்டுள்ளது. அது தற்போது கரோனா நோயாளிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதை விரைவில் முதியோர்கள் பயன்பெறும் வகையில் திறக்க வேண்டும்.தொடர் சிகிச்சை மையங்கள்முதுமையின் விளைவாக பலர் மறதிநோய், பக்கவாதம், உதறுவாதம் என்கிற பார்க்கின்சன்ஸ் நோய் மற்றும் மூட்டுநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர் சிகிச்சை அவசியமாகிறது.

இதற்கு பல குடும்பங்களில் நிதி வசதி இடம் கொடுக்காது.இந்நோய்களால் பாதிக்கப்பட்ட முதியவர்களைக் கவனித்துக் கொள்ள தாலுகா அளவில் தொடர் சிகிச்சை மையங்களைஅரசு தொடங்க வேண்டும். வயதானகாலத்தில் பெரும்பாலான வர்கள் பல்வேறு நோய்களுடன் வாழ வேண்டியிருக்கிறது. பலருக்கு சரியான உறுதுணை இல்லை. படுத்த படுக்கையாகி விட்டால் பார்ப்பதற்கு யாரும் இல்லை. கைவிடப்பட்ட முதியோரின் நிலை பரிதாபத்துக்குரியது. இப்படிப்பட்ட நிலையில் கருணைக்கொலையை நடைமுறைப்படுத்துவது குறித்து யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து அரசு ஓர் தெளிவான, திடமான முடிவைஎடுக்கலாம். முதியவர்களுக்காக தொலைக்காட்சி ஒன்றை ஆரம்பித்து, அதில் உடல் நலம், மன நலம், பொழுதுபோக்கு, ஆன்மிகம், உணவு முறை மற்றும் குடும்ப நலம் சார்ந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்பினால் முதியவர்களிடையே நல்ல வரவேற்பு கிடைக்கும்.சமூகம், நிதி சார்ந்த பிரச்சினைமுதியோர்களின் நிதி நிலைமையில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் 10 முதல் 15 சதவீத முதியோர்கள் மட்டுமே ஓய்வூதியம் பெறுகிறார்கள். முதியோர்களுக்கு மாதம் ரூ.1,000 அரசு வழங்குகிறது. விலைவாசி அதிகரித்து வருவதால், உதவித் தொகையாக ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும். தற்போது, ரூ.1,500 ஆகஉயர்த்தியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. விதவைகளுக்கு மாதம் வழங்கப்படும் ரூ.1,000 உதவித் தொகையை ரூ.2 ஆயிர மாக உயர்த்த வேண்டும். முதியவர்களின் ஓய்வூதிய தொகையை அவர்களுடைய வீட்டுக்கே சென்று கொடுக்கும் திட்டத்தை ஆந்திராஅரசு அமல்படுத்தியுள்ளது. தற்போது, தமிழகத்தில் 80 வயது கடந்த முதியவர்களுக்கு வீட்டுக்கே சென்று வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல், 60 வயதைக் கடந்த முதியவர்களுக்கும் வீட்டுக்கே சென்று அளிக்க வேண்டும். முதியோர்களில் பலர், வங்கியில் ஓர் தொகையைச் செலுத்தி, அதிலிருந்து வரும் வட்டியை வைத்துதான் வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

மத்திய அரசு வங்கி வட்டியைக் குறைத்துவிட்டது. அதனால் பல முதியவர்களின் நிதி நிலைமையில் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வட்டியை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்த வேண்டும். முதியோர்களைப் பராமரிக்க சட்டம்முதியோர்களை சரியாகப் பராமரிக்காவிட்டால் அதற்கு பொறுப்புள்ள மகன் அல்லது மகளை தண்டிக்க ஒரு சட்டம் உள்ளது. முதியவர்கள் தங்கள் சொந்த வருவாய் மூலமோ, தங்கள் சொத்து மூலம் பெறும் வருவாயிலோ தங்களை பாதுகாத்துக் கொள்ள இயலாத சூழ்நிலையில் இச்சட்டத்தின் உதவியை நாடலாம்.மேலும், முதியோர் இல்லங்களின் தரத்தை நிர்ணயிக்க அரசு ஓர் குழுவை அமைக்க வேண்டும்.

முதியோர் இல்லம் ஆரம்பிப்பதற்கு முன் இக்குழுவிடம் சான்று பெறவேண்டும். முதியோர் இல்லம்அமைந்துள்ள இடம், தரமான உணவு,மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் போதிய அளவுக்கு உள்ளதா என்பதை இக்குழு அடிக்கடி நேரில் சென்று கண்காணிக்க வேண்டும். இக்குழுவில் முதியோர் நல மருத்துவர் ஒருவர்இடம்பெற வேண்டும். முதியோர்களுக்காக நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலும் முதியோர் இல்லங்களை ஆரம்பிக்க வேண்டும்.

முதியோர் நல வாரியம்முதியோர்களின் கொடுமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ம் தேதியை 'முதியோர் கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு ஊட்டும்' நாளாக 2006ம் ஆண்டில் இருந்து அனுசரிக்கப்படுகிறது. பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இந்த நாளில் முதியோரை மதித்தல் பற்றிய சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை வானொலி மூலம் நடத்தலாம்.முதியோர்கள் நலம் பேண, அவர்களுக்கு என்று தனியாக 'முதியோர் நல வாரியம்' ஒன்றை அமைத்தால் மேற்சொன்ன அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற ஏதுவாக இருக்கும்.

# ஜிஎஸ்பி+ வரிச்சலுகையை இழக்கும் அபாயத்தில் இலங்கை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

**Table 1 - Impact of the withdrawal of GSP+ on Sri Lanka's exports to the EU**

| HS chapter | Product description | Current tariff | The lower bound of MFN tariff | Exports in 2019 (USD million) | Exports after a withdrawal of GSP+ (USD million) | Trade loss (USD million) |
|---|---|---|---|---|---|---|
| 61 | Knitted and crocheted apparel | 0.0% | 8.9% | 1,489.5 | 1,172.8 | 316.7 |
| 62 | Woven apparel | 0.0% | 8.9% | 897.6 | 719.9 | 177.7 |
| 24 | Tobacco and manufactured tobacco substitutes | 0.0% | 22.8% | 68.1 | 13.9 | 54.2 |
| 03 | Seafood | 0.0% | 7.5% | 115.0 | 94.9 | 20.1 |
| 40 | Rubber and articles | 0.0% | 4.5% | 284.9 | 271.1 | 13.8 |
| 21,15,09,20, 85,07,87,95, 63,06,69,64, 57,71,16,44 | Other | 0%-3.3% | 2%-33.4% | 595.7 | 550.7 | 45.0 |
| | Total | | | 3,450.8 | 2,823.3 | 627.5 |

Sources: Based on the authors' estimates of partial equilibrium analysis using SMART.

**Table 2 - GSP+ utilisation ratios for major exports by Sri Lanka in 2019**

| GSP Section | HS chapter | Product description | GSP+ Utilisation Ratio 2017 | 2019 |
|---|---|---|---|---|
| S-11b | 61/62/63 | Knitted and crocheted apparel/ woven apparel/other made-up textiles | 42.2% | 52.3% |
| S-07b | 40 | Rubber and rubber articles | 96.6% | 96.4% |
| S-01b | 03 | Seafood | 95.3% | 99.5% |
| S-12a | 64 | Footwear | 63.1% | 90.6% |
| S-16 | 85 | Electronic machinery and equipment | 38.3% | 47.6% |
| All Sections | | | 55.1% | 61.8% |

Source: Authors' illustration using data from Generalised Scheme of Preferences statistics, European Union

இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமான ஜிஎஸ்பி+ வரிச்சலுகையை தொடர்ந்து அளிப்பதா இல்லையா என்பதை ஆராய ஐரோப்பிய குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் உள்ளது உட்பட ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை செயற்பாடுகள், நாட்டில் நிலவும் ஒடுக்குமுறைகள், சட்டவிரோதமான செயற்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து ஐரோப்பிய சந்தைக்கான ஏற்றுமதிக்கு மேலும் வரிச் சலுகையை அளிக்க இயலுமா? என்பதை ஆராய உயர் மட்ட ஐந்து பேர் கொண்ட குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்த விசாரணைகள் ஆரம்பித்துள்ள நிலையில் 5 பில்லியன் டொலர் ஆடைத் தொழிலுக்கான இலங்கையின் மிகப்பெரிய சந்தையான ஐரோப்பிய ஒன்றியம் இருக்கும் சூழலில் தொடர்ந்தும் அந்த வரிச்சலுகை மற்றும் வர்த்தக அணுகல் கிடைக்குமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமல்படுத்துவது உட்பட மனித உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதால் ஸ்ரீலங்காவிற்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையை இரத்து செய்யும் யோசனை உள்ளடங்கிய தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜூன் மாதம் நிறைவேற்றியது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகம் மற்றும் நிலையான அபிவிருத்தி குறித்த மூத்த ஆலோசகர் நிகோலஸ் ஜைமிஸ் தலைமையிலான குழு நாட்டில் பல்தரப்பட்டவர்களை சந்தித்து அவர்களது கருத்துக்களை சேகரிக்கவுள்ளனர். இந்தக் குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அக்டோபர் 5ஆம் திகதி வரை இவர்கள் இலங்கையில் தங்கியிருந்து அரசு, தொழிற்சங்கங்கள், சிவில் சமூகம், முதலாளிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

"இலங்கை இணக்கம் வெளியிட்ட மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஜிஎஸ்பி பிளஸ் சலுகையைப் பெறுவதற்குள்ள 27 சர்வதேச கடப்பாடுகளை இலங்கை எவ்வாறு மதித்து நடக்கிறது என்பதை தீர்மானிப்பதே கண்காணிப்பின் நோக்கமாகும்". என கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தின் துணைத் தூதுவர் தோர்ஸ்டன் பார்க்ப்ரடா செய்தியாளர்களிடம் கூறினார்.

2021ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், ஸ்ரீலங்கா 2.7 பில்லியன் டொலர் மதிப்புள்ள 45% ஆடைகளை ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கு ஏற்றுமதி செய்தது, இது கடந்த ஆண்டு 2.2 பில்லியன் டொலராக இருந்தது.




நாட்டின் இரண்டாவது பெரிய அந்நிய செலாவணி ஈட்டும் தொழிற்துறையான ஆடை ஏற்றுமதியில் சுமார் 60% ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிராந்தியத்திற்கான ஆடை ஏற்றுமதியைக் கொண்டுள்ளது. இந்த ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியின் மூலம் குறைந்தது 10% மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்று வர்த்தகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு உற்பத்தியும் அதனால் விற்பனை குறைந்து வருவதால் ஆடைத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும், 2026 ஆம் ஆண்டிற்குள் 8 பில்லியன் டொலர் வருவாய் இலக்கை எட்டுவதற்கும் அரசு எண்ணியுள்ளது. ஆனால் அந்த இலக்கை எட்டுவதர்கு ஜிஎஸ்பி+ வரிச்சலுகை இன்றியமையாததாகும். அவ்வகையில் அடுத்த 5 ஆண்டுகளில் 60% வளர்ச்சியை திட்டமிட்டுள்ள அரசு சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதிகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்று நடக்காவிட்டால் இந்தச் சலுகையை இழக்க நேரிடும். ஜிஎஸ்பீ சலுகையை பாதுகாக்க ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து செயற்படுவதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக தொழில்துறையினர் கூறுகின்றனர்.

ஆனால் கடந்தகால அனுபவங்களின்படி இலங்கை சர்வதேசத்திற்கு அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றியது இல்லை என்பதே வரலாறு.

இலங்கை ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை இழந்தால், ஆடைத் தொழில் ஒரு வருடத்திற்குள் 500 மில்லியன் டொலருக்கும் அதிகமான ஏற்றுமதி வாய்ப்புகளை இழக்கும் அபாயம் காணப்படுவதாக ஆடை உற்பத்தியாளர்களின் கூட்டு சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் டுலி குரே தெரிவித்துள்ளார். இந்த வரிச்சலுகையை இலங்கை இழந்துவிட்டால் அதை மீண்டும் பெறுவது மிகவும் கடினமானதாகிவிடும். ஐரோப்பிய சந்தைகளுக்கான முன்னுரிமை வரிச்சலுகையான இந்த ஜி எஸ்பி+ இழக்கப்பட்டால் பல ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்படும் எனும் அச்சங்கள் எழுந்துள்ளன.

குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களிடையே, 350,000 நேரடி மற்றும் 700,000 துணை தொழிலாளர்கள் பணியாற்றுவதோடு, அவர்களில் 80 வீதமானவர்கள் கிராமப்புற பெண்கள் என்பது கவனிக்கத்தக்கது. அப்படியானதொரு சூழலில் இது பெரிய சமூகப் பொருளாதரச் சிக்கலுக்கு வழிவகுக்கும்.

"இந்த வர்த்தக ஒப்பந்தம் நாம் சந்தையில் இருப்பதற்கும், போட்டித்தன்மையுடன் இருப்பதற்கும், எங்கள் வர்த்தக கூட்டாண்மையை அதிகரிப்பதற்கும் அவசியம். இது தொடரும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம். ஆனால் அது இல்லாமல், இந்தத் துறையில் முதலீடு செய்வது குறித்து சந்தேகங்கள் இருக்கும்," என ஆடை உற்பத்தியாளர்களின் கூட்டு சம்மேளனத்தின் (JAAF) தலைவர் ஏ.சுகுமாரன் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்தின் முக்கிய துறைகளான ஆடை, மீன், இரப்பர் மற்றும் மட்பாண்டங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஜிஎஸ்பி பிளஸ் வர்த்தக சலுகைகளிலிருந்து நேரடியாகப் பயனடைகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கையிலிருந்து ஏற்றுமதிக்கு சாதகமற்ற சூழல் ஏற்பட்டால், ஜிஎஸ்பி பிளஸ் மாத்திரமன்றி ஐரோப்பிய ஒன்றிய ஏற்றுமதி சந்தைகளையும் இழக்க நேரிடும் என ஜிஎஸ்பி பிளஸை இழக்கும் அபாயம் குறித்து கருத்து தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஸ்ரீலங்கா தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதம் அண்மையில் எச்சரித்திருந்தார்.

ஸ்ரீலங்காவின் வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனம் (FCCISL) மற்றும் கொழும்பு வர்த்தக சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "ஜிஎஸ்பி பிளஸ் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்" குறித்த இணையவழி அமர்வில் அவர் இந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.




ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி பிளஸ் சலுகைகளை மீளப் பெற்றால் அரசே அதற்கு பொறுப்பேற்க வேண்டுமென, சுதந்திர வர்த்தக வலய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் வேலையை உறுதி செய்வதும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவதுமே தொழிற்சங்கங்களின் பணி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கை இந்த சிறப்பு வரிச்சலுகையை பெற்று வருகிறது. போரின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறியே இந்தச் சலுகை பெறப்பட்டது.

இந்த முன்னுரிமை வரி நிவாரணம் (ஜிஎஸ்பி பிளஸ்) பெப்ரவரி 2010 இல் இடைநிறுத்தப்பட்டது. மனித மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டின் மஹிந்த ராஜபக்ச நிர்வாகத்தால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் செயல்படுத்தப்படாததால் பெப்ரவரி 2010 இல் ஜிஎஸ்பி+ இடைநிறுத்தப்பட்டது, நல்லாட்சி அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச உடன்படிக்கைகளை செயற்படுத்துவது குறித்த உத்தரவாத்திற்கு அமைய, நம்பிக்கையின் அடிப்படையில், 2017 மே மாதம் ஜிஎஸ்பி பிளஸ் மீண்டும் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவது குறித்து கவனம் செலுத்தியது.

மேலும், ஊடக அடக்குமுறை, சட்டத்தின் ஆட்சி இல்லாமை, காணாமல் போதல், கைது, குழந்தை தொழிலாளர்களின் உழைப்பு உறிஞ்சப்படுதல், மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் பறிப்பு உள்ளிட்ட இலங்கையில் இடம்பெறும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தது.




இலங்கை இணக்கம் வெளியிட்ட மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றவில்லை என்பது நிரூபிக்கப்பட்டால், தற்போதுள்ள ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஐவர் குழுவின் அறிக்கை எதிர்வரும் நவம்பரில் ஐரோப்பிய ஒன்றியத்தால் பரிசீலிக்கப்படும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நாகை கடலோர பகுதியில் இருந்து இலங்கைக்கு 270 கிலோ கஞ்சா மூட்டைகள் கடத்த இருந்த பின்னணி என்ன?



நாகை கடலோர பகுதியில் ஃபைபர் படகில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா மூட்டைகளுடன் சுங்கத்துறை அதிகாரிகள் நாகையில் இருந்து பைபர் படகு மூலம் இலங்கைக்கு கடத்த இருந்த 270 கிலோ கஞ்சா, நாகை மாவட்ட சுங்கத்துறை அதிகாரிகளால் பைபர் படகுடன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் “நாகை மீனவன்” யூடியூப் பக்கத்தை நடத்தி வரும் குணசீலன் உட்பட நான்கு சந்தேக நபர்களை சுங்கத்துறை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

நாகை துறைமுகம் அடுத்த கீச்சாங்குப்பம் ஆற்றுப்பகுதியில் இருந்து இலங்கைக்கு கடல் வழியாக கஞ்சா கடத்த இருப்பதாக நாகை சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து கடந்த 10 நாட்களாக நாகப்பட்டினம் துறைமுகம் மற்றும் கீச்சாங்குப்பம் பகுதியில் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை அதிகாலையில் கீச்சாங்குப்பம் ஆற்றங்கரையோரத்தில் சந்தேகத்திற்கு இடமான வகையில், நான்கு இரு சக்கர வாகனங்களில் வந்த 4 பேர், மீன்பிடி பைபர் படகில் பெரிய அளவிலான பொட்டலங்களை படகின் ஐஸ்பெட்டியில் ஏற்றிக் கொண்டு இருந்தனர்.

அதை பார்த்த சுங்கத்துறையினர் அந்த நபர்களை படகுடன் சுற்றி வளைக்க முயன்ற போது கடத்தல்காரர்கள் 4 பேர் படகிலிருந்து ஆற்றில் குதித்து தப்பினர். பறிமுதல் செய்யப்பட்ட நாகை மீனவன் படகுடன் அதிகாரிகள்
அந்த படகை அதிகாரிகள் சோதனை செய்த போது படகிற்குள் கஞ்சா பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. பொட்டலங்களில் இருந்த 270 கிலோ கஞ்சாவை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்தனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்திய நான்கு இரு சக்கர வாகனம் மற்றும் ஒரு பைபர் படகையும் கைப்பற்றிய சுங்கத்துறையினர் தப்பி ஓடிய நபர்கள் குறித்து தீவி-ரமாக விசாரித்து வருகின்றனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பைபர் படகு “நாகை மீனவன்” என்கின்ற யூடியூப் சேனல் நடத்தும் மீனவருக்கு சொந்தமானது என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் தப்பி ஓடிய 4 நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்த சுங்கத்துறையினர் அவர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு 2 கோடி ரூபாய் இருக்கலாம் என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து நாகை மாவட்ட சுங்கத்துறை கண்காணிப்பாளர் கழுகாசலமூர்த்தி பிபிசி தமிழிடம் பேசுகையில், ”நாகை மாவட்டம் வேதாரண்யம், கோடியக்கரை, கீச்சாங்குப்பம், வேளாங்கண்ணி உள்ளிட்ட கடற்கரையில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கஞ்சா, சமையல் மஞ்சள் கடத்தப்பட்டு வருவதாக தகவல் கிடைத்து வருகிறது.

தமிழக கடற்கரையில் இருந்து கடத்தி செல்லப்படும் கஞ்சா இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்படுவதுடன், கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய இலங்கையை சேர்ந்த நபர்கள்அந்நாட்டு போலீசாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இலங்கையில் கைது செய்யப்படுபவர்களுடன் தொடர்பில் உள்ள தமிழகத்தை சேர்ந்தவர்கள்குறித்த தகவல்கள் இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்டு அவர்களை கைது செய்து வருகி-றோம்.

கடத்தல் சம்பவங்களை தடுக்க கடற்கரை ஓரங்களில் உள்ள மீனவ கிராமங்களை சேர்ந்த நபர்களிடம் ரகசிய தகவல்கள் பெறப்பட்டு சுங்கத்துறை அதிகா-ரிகள் தொடர்ந்து கடற்கரை பகுதியி-ல் சோதனை மேற்கொண்டு வருகி-றோம். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கீச்சாங்குப்பம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து சுங்கத்துறை அலுவலர்கள் மீனவர்கள் போல் வேடமிட்டு கடற்கரை பகுதியில் மறைந்து இருந்தோம். அப்போது நான்கு இரு சக்கர வாகனங்களில் வந்தவர்கள் அங்கு நின்று கொண்டிருந்த பைபர் படகில் ஒரு பெரிய மூட்டையை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தனர். அதனைக் கண்டதும் மறைந்திருந்த சுங்கத்துறை அலுவலர்கள் படகுக்கு அருகே சென்றபோது அவர்கள் தண்ணீரில் குதித்து தப்பி சென்றனர். கைப்பற்றப்பட்ட பைபர் படகின் உரிமையாளரின் தகவல்கள் அடிப்படையில் தப்பி சென்ற நால்வரை தேடி வருகிறோம்,” என்றார்.

சுங்கத்துறையினரின் விசாரணையில் பறிமுதல் செய்யப்பட்ட படகின் உரிமையாளர், நாகை மீனவன் என்கின்ற யூடியூப் சேனல் நடத்தி வருபவர் என்றும் இவர் சமீப காலமாக கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது. ”தலைமறைவாகிய நான்கு நபர்களின் வீடுகளில் இன்று காலை முதல் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். நால்வரும் இதுவரை கைது செய்யப்படவில்லை, நால்வரும் பிடிபடும் பட்சத்தில் இவர்களுடன் தொடர்பில் உள்ள முக்கிய கடத்தல்காரர்கள் பிடிபடுவார்கள்” என அதிகாரிகள் தெரிவித்தனர். போதை பொருள் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடும் முக்கிய கடத்தல்காரர்கள் சென்னை மற்றும் ஆந்திரா மாநிலத்தின் சில இடங்களில் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர்களை பிடிக்க காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிகிறது. இது குறித்து சுங்க அதிகாரி கழுகாசலமூர்த்தி கூறுகையில், “வடக்கு கடல் பகுதியான பாக்ஜலசந்தி கடல் பகுதியில் நடைபெற்று வரும் கடத்தல் சம்பவங்களை தடுப்பதற்காக நவீன ரோந்து படகுகள் மூலம் கடலில் ரோந்து பணியில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்” என்று கூறி-னார். ”சுங்கத்துறை, இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை, தமிழக கடலோர பாதுகாப்பு குழும போலீசார், மத்திய உளவுத்துறை மற்றும் மாநில உளவுத்துறை என அனைத்து பாதுகாப்புதுறை அதிகாரிகளும் தொடர்ந்து கடத்தல் சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கான தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகி-றோம்.” ”வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை கடற்கரை ஓரம் அடர்ந்த காடுகள் இருப்பதால் அந்த பகுதி கடத்தல்காரர்கள் போதை பொருட்களை மறைத்து வைக்க சாதகமாக உள்ளது. எனவே, அந்த பகுதியில் கூடுதல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட நாங்கள் முடிவு செய்துள்ளோம்.” ”தொடர்ச்சியாக அந்த பகுதி-யில் இருந்து இலங்கைக்கு ஆட்களை சட்டவிரோதமாக அனுப்பி வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. அது குறித்தும் முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்றும் அவர் தெரிவித்தார்.

# 10 ஆண்டுகளுக்கான கலைஞர் கருணாநிதி செம்மொழித்தமிழ் விருதுகள் அறிவிப்பு ஈரோடு தமிழன்பனும் விருது பெறுகிறார்




*2010 முதல் 2019 வரையிலான கலைஞர் கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.*

*2010-ம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் இருக்கும் கலைஞர் மு. கரு-ணாநிதி செம்மொழி தமிழ் விருது இனி ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 3-ம் தேதி ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசுடன் வழங்கப்படும் என்று தமிழக அரசு சமீபத்தில் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தது.*

*அந்தவகையில் 2010 முதல் 2019 வரையிலான கலைஞர் கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதாவது: செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் 8வது ஆட்சிக்குழுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.08.2021 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப் பெற்ற விருதுத் தேர்வுக்குழுவினரால் கீழ்க்காணும் பத்து விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:*

*1. 2010 - முனைவர் வீ.எஸ். இராஜம், பென்சில்வேனியா பல்கலைக்கழக முன்னாள் மூத்த விரிவுரையாளர்.*

*2. 2011 - பேராசிரியர் பொன். கோதண்டராமன் (மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்)*

*3. 2012 - பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்)*

*4. 2013 - பேராசிரியர் ப. மருதநாயகம் (மேனாள்இயக்குநர், புதுவை மொழியி-யல் பண்பாட்டு நிறுவனம், மேனாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்)*

*5. 2014 - பேராசிரியர் கு. மோகனராசு (மேனாள்பேராசிரியர்ருதலைவர், திருக்குறள்ஆய்வுமையம், சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை)*

*6. 2015 - பேராசிரியர். மறைமலை இலக்குவனார் (மேனாள்தமிழ்ப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி)*


*7. 2016 - பேராசிரியர் கா. ராஜன் (மேனாள் பேராசிரியர், வரலாற்றுத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம்),*

*8. 2017 - பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ், ஜெர்மனி பல்கலை பேராசிரியர்.*

*9. 2018 - கவிஞர் ஈரோடு தமிழன்பன் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக் கல்லூரி, சென்னை).*

*10. 2019 - பேராசிரியர் கு.சிவமணி (மேனாள்முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்).*

*2010 முதல் 2019 வரையிலான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான விருதாளர்கள் பட்டியல் மீது 30.08.2021 அன்று நடைபெற்ற செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 8வது ஆட்சிக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் 2020, 2021 மற்றும் 2022-ஆம் ஆண்டுகளுக்குரிய கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான முன்மொழிவுகளைப் பெறுவதற்கு விளம்பரம் வெளியி-டவும் ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*



*2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்குரிய கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்நாட்டு பெருமக்களின் முன்னிலையில் மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவி-ல் கூடிய விரைவில் வழங்கப்படவுள்ளது. மேலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான கலைஞர் மு. கரு-ணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்கான பணிகள் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.*

*இவ்வாறு தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.*

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!



**Joy Square Towns**
Conebridge




**Copperhill South Barrie**
Deer Creek Fine Homes




**Alba Condos**
Edenshaw Developments Limited



**Arte Condos**
EMBLEM



**Vincent Condos**
Rosehaven Homes Limited and Townwood Homes Inc. and Gugliotti B...



**Adagio Condos**
Menkes Developments Ltd.




**Kensington District Towns**
Lynbury Homes



**Minu Towns**
Stateview Homes



**Exchange District Condos 3**
Camrost Felcorp



**WestLine Condos**
CentreCourt Developments Inc.



**U.C. Tower 2**
Tribute Communities and Riocan Real Estate Investment Trust



**Verge Condos**
Riocan Real Estate Investment Trust



**Gemma Condos**
Pinnacle International



**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

கனடா மொன்றியால் மாநகரில்
ஒரே நாளில் ஒரே மேடையில்

Powered by
FRUITS HABY
5925 Victoria
Monreal, QC
H3W 2R9
(514) 342-4229
(514) 865-0519

www.uthayannews.ca
உதயன்
நண்பன் WORLDWIDE

உதயன் வெள்ளி விழாவும்
நண்பன் விருது விழாவும்

கலை நிகழ்ச்சிகள், இனிதான இசைச்சாரல், விருதுகள் வழங்கல் மற்றும் இராப்போசன விருந்து.

13-11-2021 சனிக்கிழமை
மாலை 6:00 மணி தொடக்கம்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக...
Tasty தமிழா
437 539 7521

Sunnybrook Condominium Village Auditorium
105 Rue Angora,
Dollard Des Ormeaus,
Quebec, H9B 1W6

Covid-19
கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்

அனுமதிச் சீட்டுக்களுக்கும் விபரங்களுக்கும்:
(514) 684-3604, (514) 924-3436, (514) 465-1053, (416) 732-1608



MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta credit™

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor


கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்
அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்
POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
வெள்ளி விழாவும்
நண்பன்
WORLDWIDE
விருது விழாவும்
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக...
Tasty
தமிழா
30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்
கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து
Covid-19
கட்டுப்பாடுகளுக்கு
ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்
Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4
அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512


Carefirst Family Health Team
Carefirst Family Health Team
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
தமிழ் பேசும் வைத்தியர்கள்
ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch
N


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும்
'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும் விஜயதசமி
பண்டிகைக்குத் தேவையான அனைத்து வகை பொருட்கள்,
கொலு வைப்பதற்குத் தேவையான அழகிய கடவுளர்களின் சிலைகள், ஏனைய
பொம்மைகள் மற்றும் மாலைகள் அனைத்தையும் இறக்குமதி செய்துள்ளார்கள்.
Sumeet
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# கருத்தியல் இதயத்தில் ஒரு ஈட்டி

- திசாராணி குணசேகரா

(முழுச் சிங்கள சமூகமும் தமிழர்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள அறிவுப்பிழைப்பார்கள் மத்தியில் நியாயத்தை, நீதியை கடைப்பிடிப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் இக்கட்டுரையாளர். **Colombo Telegraph** இணைய தளத்தில் அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையை **https://www.colombotelegraph.com/index.php/a-stake-through-the-ideological-heart/comment-page-1/?unapproved=2408930&moderation-hash=19e840286504054d4ee667c05aa61834#comment-2408930p;pmnp** என்ற முகவரியில் படிக்கலாம். *தமிழாக்கம் கனடா நக்கீரன்)*

”போதுமான இறப்பு ஏற்பட்டுள்ளது.” **~ Colm Tóbín (House of Names))**

சனாதிபதி பதவியை இழந்த சில மணிநேரங்களுக்குப் பிறகு, மகிந்த இராசபக்ச தனது மூதாதையர் வீட்டில் ஒரு சன்னல் மீது ஏறி, துக்கத்தில் இருந்த தனது ஆதரவாளர்களுக்கு ”அவர்கள் ஈழத்தில் இருந்து பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்” எனக் கூறினார்.

மெதமுலான பிரகடனம் மைத்திரிபால சிறிசேனவினால் மகிந்த இராசபக்ச தோற்கடிக்கப்பட்டதை சிங்கள - பவுத்த இலங்கையை தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் தோற்கடித்தாக மகிந்த இராசபக்சா சித்திரித்தார். இந்த மறுவாசிப்பில், சிறுபான்மையினர் வாக்காளர்கள், குடிமக்கள் ஆனால் அந்நியர். சிங்கள- பவுத்த பிறப்புரிமையின் ஒரு வெளிப்பாடாக, அவர்கள் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் எந்தவொரு தேர்தல் முடிவும் வரையறையின் மூலம் சட்டவிரோதமானது. இந்தப் பொய்யான கதைக்கு ஒற்றைக் குறிக்கோள் இருந்தது - இராசபக்சாக்கள் சிங்கள - பவுத்த வாக்குகளால் மட்டுமே அதிகாரத்தை மீண்டும் பெற முடியும். ஆனால் இது சனாதிபதிமுறையின் கீழ் சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது.

பெரும்பான்மை மக்களது மனக்குறை அரசியல் மட்டுமே என்பது இராசபக்சாவின் உத்தியாக மாறியது. மகிந்தா சுலங்காவில் தொடங்கி, இராசபக்ச தலைமையிலான எதிர்க்கட்சிகள் சிங்கள பவுத்த சுனாமியால் இலங்கை சனநாயகத்தை மூழ்கடிக்க திட்டமிட்ட பரப்புரை மேற்கொண்டன.இந்தச்செயற்பாட்டில், இராசபக்சவுக்கும் பெரும்பான்மை சமூகத்துக்கும் இடையே ஒரு மத - இன உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. அதுவே இராசபக்ச அதிகாரத்திற்கு ஈடாக சிங்கள - பவுத்த மேலாதிக்கம். சிறுபான்மையினருக்கு இனிச்சலுகைகள் அல்லது சகாயங்கள் இல்லை இந்தியா அல்லது மேற்கு நாடுகளை இனித்திருப்திப்படுத்த முடியாது. அரசியல் பிக்குகளின் இராணுவம் இந்தப் பேரத்தின் உத்தரவாததாரர்களாகவும் - விற்பனையாளர்களாகவும் செயல்பட்டது.

இந்தச் சூதாட்டம் வேலை செய்தது. 2019 உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம் தீவிரவாதிகள் சுமார் 270 அப்பாவி மக்களைத் தற்கொலைத் தாக்குதல் மூலம் கொன்றார்கள். இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்கு முஸ்லீம் மத வெறியர்களின் குழுவின் சிறிய உதவி இருந்தது. மெதமுலானாவில் தொடங்கிய பிளவுபட்ட பயணம் மகத்தான வெற்றி பெற்றது. கோட்டாபய இராசபக்ச அவர்களை சிங்கள - பவுத்த வாக்காளர்கள் அதிபர் பதவியில் அமர்த்தியது.

**The Rajapaksas are not ideological. They are consummate users of an ideology. Sinhala-Buddhist supremacism is their sword and shield, their path to power, their rampart against opposition. It is their go-to solution when everything else fails.**

இராசபக்சாக்கள் கருத்தியல் சார்ந்தவர்கள் அல்ல. அவர்கள் ஒரு சித்தாந்தத்தின் முழுமையான பயனர்கள். சிங்கள - பவுத்த மேலாதிக்கவாதம் அவர்களின் வாள் மற்றும் கேடயம் ஆகும். அவர்களின் அதிகாரத்திற்கான பாதை மற்றும் எதிர்ப்பிற்கு எதிரானஅவர்களின் பாதுகாப்பு ஆகும். மற்ற அனைத்தும் தோல்வியடையும் போது சிங்கள - பவுத்த மேலாதிக்கவாதம் தலைதூக்கும்.

சிங்கள - பவுத்தத்தின் மீதான இராசபக்ச விசுவாசம் ஷி ஜின்பிங்கின் சோசலிசத்தின் மீதுள்ள விசுவாசத்திலிருந்து வேறுபட்டதல்ல. ஆனால் பக்தியின் காட்சிகள் மற்றும் அறநெறி பற்றிய அறிவிப்புகள் மூலம் இடைவெளிகளை மறைக்க எண்ணலாம். இலங்கை ஒரு தூயசிங்கள-பவுத்தஇராச்சியம் ஆகும். இதுசிறுபான்மையினரைப் பற்றிக் கவலைப்படாத மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு பயப்படாத ஒரு தடித்த குடும்பத்தினால் வழிநடத்தப்படுகிறது. அந்தக் கற்பனாவாதத்தில், ஏழ்மையான சிங்கள - பவுத்தர்கள் கூட பணக்காரத் தமிழ், முஸ்லீம் அல்லது கிறிஸ்தவர்களை விட அதிக அரசியல் அதிகாரம்படைத்தவர்கள் என்பதை அறிந்து திருப்தி அடைகிறார்கள். சில பொருளாதார அப்பத்துண்டுகளை வீசினால் இராசபக்ச ஆட்சி சிங்கள - பவுத்த கைகளில் இளம் நாமல் வரை, ஒருவேளை அதற்கு அப்பாலும் பாதுகாப்பாக இருக்கும்.

இப்போது அந்த கற்பனாவாதம் சிதறுண்டு கிடக்கிறது. ஒரு குழந்தைக்குப் பால் பவுடருக்காக வரிசையில் மணிக்கணக்கில் செலவிட வேண்டியிருக்கும் போது, யாரையும் விட தாங்கள் உயர்ந்தவர்கள் என உணர்வது கடினம். அல்லது வெற்று எரிவாயு சிலிண்டருடன் ஒரு கடையிலிருந்து இன்னொரு கடைக்கு விரைந்து செல்லவேண்டும். இராசபக்சே உருவாக்கிய, தொற்றுநோய் - மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு இணையாக விரக்தி புதிய உச்சத்தை எட்டும்போது, ஆட்சிக்கு இருக்கும் ஒரே வழி சிங்கள- பவுத்த கோபத்தை பொருத்தமான எதிரியை நோக்கி மடமாற்றுவதாகும்.

”இஸ்லாம் பாகிஸ்தானிலும் மற்றும் பிற முஸ்லீம் நாடுகளிலும்பலவீனமான மற்றும் கேவலமான ஆட்சிகள் மற்றும் நவீன காலங்களில் தலைவர்களுக்கான புகலிடமாக உள்ளது” என்று இக்பால் அகமது **(Eqbal Ahmed)** எச்சரித்துள்ளார். ”அவர்கள்தாங்கள் அச்சுறுத்தப் படுவதாகவும் தனிமைப்படுத்தப் பட்டதாகவும் உணரும்போது - மற்றும் அவர்களின் பிடியை இழந்து, புகழ் இழந்து, மக்களின் ஒருமித்த உணர்வை இழந்து - அவர்கள் இஸ்லாமை மறைவிலிருந்து வெளியே கொண்டுவந்து அதை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள்” (பேரரசை எதிர்கொள்வது). இந்த வாசிப்பு இன்றைய இலங்கைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. ஏனெனில் இராசபக்சாக்கள் தேய்ந்து வரும் தங்கள் புகழில் ஒட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

சிங்கள-பவுத்த்தர்களின் இருப்புக்கான புதிய மற்றும் பயங்கரமான அச்சுறுத்தல்கள் விரைவில் கண்டுபிடிக்கப்படும். இன்னும்பயங்கரமான போர்வையில் பழக்கமான எதிரிகள் நிலப்பரப்பில் பரவி இருப்பார்கள். அச்சத்துடனும் பீதியுடனும் சிங்கள - பவுத்த வாக்காளர்கள் அப்பாச்சி மகிந்த, கோட்டாபய, பசில் மற்றும் நாமல் ஆகியோரை வெற்றுப் பைகளில் மற்றும் வெற்று வயிற்றில் கூட ஒட்டிக்கொள்வார்கள்.

பவுத்த பிக்கு கலகொட - அத்தேஞானசாரரை திடீரென வெளியில் கட்டவிழ்த்துவிடப்பட்டது, அவர் முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்கர்களுக்கு எதிராகப் புண்படுத்தும் வார்த்தைகளை வீசுவது, அந்த எதிர்காலத்தை முன்னறிவிக்கிறது.

தீவிரவாத நரகங்களிலிருந்து வெளவால்கள்

கடந்த பத்தாண்டுகளில் இரண்டு முஸ்லீம் எதிர்ப்புக் கலவரங்களை இலங்கை சந்தித்தது. இரண்டிற்கும் முன்னால் முஸ்லீம் விரோத வெறி, அலுத்கமவில் இடம்பெற்ற ஹலால் பற்றிய பயம் மற்றும் திகனாவுக்கு முன்னால் வாந்தி பேதி பற்றிய பைத்தியம் இடம்பெற்றது. அவை காரணமாக எழுந்த பயம் மற்றும் வெறுப்புச் சூழ்நிலை போன்ற தற்செயலான சம்பவங்கள் எதிர்காலத்தில் வன்முறையை கட்டவுழ்க்கப் பயன்படுத்தப்படலாம்.

2014 இல் அளுத்கமவில், அது ஒரு பவுத்த பிக்கு மற்றும் மூன்று முஸ்லீம் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட ஒரு தகராறு இடம்பெற்றது. பவுத்த பிக்கு கலகொட-அத்தே ஞானசார தலைமையிலான பொதுபலசேனா அந்த நகரத்தில் இறங்காமல் இருந்திருந்தால் அது நடந்திருக்காது. “இந்த நாட்டில் இன்னும் சிங்களக் காவல்துறை, சிங்கள இராணுவம் உள்ளன. இன்றைக்குப் பிறகு ஒரு ஒற்றை முஸ்லீம் அல்லது வேறு சில வேற்றுகிரகவாசிகள் ஒற்றைச்சிங்களவர் மீது கை வைத்தால், அல்லது பவுத்த தேரர் மீது கை வைத்திருந்தால் இந்த அனைத்து உயிரினங்களின் முடிவாக இருக்கும்” என அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் ஞானசார பிக்கு இடிபோல் முழங்கினார். இதனால் வன்முறை வெடித்தது, கலவரக்காரர்கள், பெரும்பாலும் வெள்ளை உடை அணிந்த முஸ்லீம் மக்களது சொத்துக்களைதண்டனை கிடைக்காது என்ற துணிவில் தாக்கினர்.

திகனாவும் இதுபோன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தது. பெப்ரவரி 20, 2018 அன்று, ஒரு சிறிய சாலை விபத்தைத் தொடர்ந்து, நான்கு முச்சக்கரவண்டிப் பயணிகள் பாரவண்டி ஓட்டுநரை கடுமையாகத் தாக்கினர். தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லீம்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர். தாக்குதல் நடத்திய முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மார்ச் 3 ஆம்நாள் இறந்தார். அநியா-யமாக நடந்த உயிர்ச்சேதம் பற்றி வருத்தம் இருந்தது, ஆனால் மார்ச் 4 அன்று மாலை பிக்கு கலகொட - அத்தே ஞானசாரார் இறுதிச் சடங்குக்குச் செல்லும் வரை கோபமோ அல்லது முஸ்லிம்களைக்
குறிவைத்த எந்தக் கோபமும் இருக்கவில்லை. ஆனால் ஞானசேரர் சென்றவுடன் கலவரம் தொடங்கியது.

பகுத்தறிவுயின்மை என்பது மத வெறியரின் பகுத்தறிவு ஆகும். உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை படுகொலை அளுத்கம மற்றும் திகானா இல்லாவிட்டாலும் கூட நடந்திருக்கலாம், ஏனென்றால் தற்கொலைக்குண்டுவெடிப்பாளர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நிஜ உலகில் இல்லாத ஒரு மன வெளியில் வாழ்ந்தனர். ஆனால் அலுத்கம மற்றும் திகானா சஹ்ரான் ஹாீமின் கொடிய தற்கொலைத் தாக்குதலை எளிதாக்கியிருக்கும். ஆட்சேர்ப்புக்கு அவர் சொல்ல வேண்டியதெல்லாம், அலுத்கம மற்றும் திகானா இரண்டையும் பாருங்கள் என்பதாக இருக்கும்.

இப்போதுபிக்கு ஞானசாரர் தனது வழக்கமான - கீழ்த்தரமான விளையாட்டில் மும்மரமாக ஈடுபட்டுள்ளார். இந்த முறை, அவருக்கு அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி மூலம் ஒரு மேடை கொடுக்கப்பட்டுள்ளது. மகிந்த இராசபக்ச பொலக்னா **(Bologna)** இல் மத நல்லிணக்கத்தைப் பேசிக்கொண்டிருந்தபோது, கோட்டாபய இரர்சபக்ச நியூயோர்க்கில் நல்லிணக்கத்தைப் போதித்துக்கொண்டிருந்தபோது, கொழும்பில், பிக்கு ஞானசாரர் அரச தொலைக்காட்சியில் மற்றொரு மத வன்முறைக்கான அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருந்தார்.

இந்தக் கிழமை இலங்கை, இந்தியாவிடம் எரிபொருளை வாங்குவதற்கு 500 மில்லியன்
டொலர் கடன் கேட்டது நமது பொருளாதாரத்தின் நிலையற்ற நிலைமையின் மற்றொரு அறிகுறியாகும். கலகலப்பை தூண்டும் இராசபக்சவின் பினாமிகள், சிறுபான்மையினருக்கு எதிராக மற்றொரு வன்முறையை கட்டவுழ்த்து விட்டால், அது ஏற்கனவே நோய்வாய்ப்பட்ட பொருளாதாரத்திற்குக் கொலைகார அடியாக இருக்கும்.பேரம் பேசும் அடித்தள விலைகளிலும் முதலீட்டாளர்கள், பிரதான சொத்துக்காக வாங்குபவர்கள் இருக்க மாட்டார்கள், மிகக்குறைவான சுற்றுலாப் பயணிகளே இருப்பார்கள். பொருளாதாரம் நொறுங்கும், ரூபாய் வீழ்ச்சியடையும், பசியும் தேவையும் நாட்டைப் பீடிக்கும். இதில் பாதிக்கப்பட்டவர்களின் இனம் அல்லது மதம் பற்றிய கவலை இருக்காது.

இராசபக்சாக்கள்தங்கள் சிங்கள - பவுத்த அடித்தளத்தின் குருதிக் கசிவை நிறுத்துவதற்காக அரசியல்-பொருளாதாரத்தின் மீது ஒரு தவறான இன/மத முரண்பாட்டைமிகைப்படுத்த முயற்சிக்கின்றனர். குடும்பத்தின் அரசியல் பிழைப்புக்கு சிறுபான்மை எதிர்ப்பு வெறி மற்றொரு அலை அவசியம். ஆனால் அது முழு இலங்கைக்கும் மற்றும் அனைத்து இனத்தவருக்கும் மதத்திற்கும் ஆபத்தானது. இராசபக்சாக்கள் தங்கள் சொந்தப் பிழைப்புக்காக செய்ய வேண்டியவை இலங்கை ஒரு தேசிய அரசா நிலைத்து இருத்தலை கடுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

”அரசியல் என்பது ஒரு மனிதனின் வித்தியாசமான வழிபாட்டைப் பற்றியது அல்ல” என்று அமெரிக்கமேலவை உறுப்பினர் பென் சாஸ் **(Ben Sasse)** ட்ரம்ப் தேர்தல் அவதூறுகளின் பின்னணயில் தனது சக குடியரசுக் கட்சியினருக்கு நினைவுபடுத்தினார். (**CNN** - 15.2.2021).

இராசபக்சவின் பிரபஞ்சத்தில், அரசியல் என்பது ஒரு குடும்பத்தின் வித்தியாசமான வழிபாடு தவிர வேறில்லை. உடுவே தர்ம்மாலோக தேரர் (ஒரு முறை அவர் ஒரு காலை வேளையில் இரண்டு யானைக் குட்டிகளைத் தனது கோவில் வாசல்களுக்கு வெளியே வீசப்பபட்டதாகக் கூறினார்) அண்மையில் இரசபக்சாக்களை அழித்ததை இலங்கையை அழித்ததோடு ஒப்பிட்டார். உண்மையில் அதற்கு எதிர்மாறுதான் உண்மை. இராசபக்சே சித்தாந்தத்தின் மையத்தில் பொய்யான கதைக்கூற்றின் மூலம் ஒரு ஈட்டியைச் சொருகினால் மட்டுமே இலங்கைக்கு எதிர்காலம் இருக்க முடியும். இராசபக்சவை தோற்கடிப்பது போதாது அவர்களின் சூழ்ச்சி வெளிப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். அல்லது அவர்கள் மற்றொரு சுற்று இரத்தக் கசிவுக்குத் திரும்புவார்கள். மிகுதி அடுத்த கிழமை).


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

இந்தியா செய்திகள்
India News

# பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட இந்திய விமானப்படை பெண் அதிகாரிக்கு பரிசோதனை நடத்தப்பட்டமைக்காக வலுக்கும் எதிர்ப்பு



தமிழ்நாட்டின் கோவையில் உள்ள இந்திய விமானப்படை கல்லூரியில் தன்னை ஆண் அதிகாரி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியதாக 28 வயது பெண் அதிகாரி உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் கூறியிருந்த நிலையில், சட்டவிரோதமாக தம்மை விமானப்படை மருத்துவர்கள் இரு விரல் பரிசோதனைக்கு உட்படுத்தியதாக குற்றம்சாட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை கோவை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்ட பெண் அதிகாரியே முதல் அறிக்கையில் கூறியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இது தொடர்பான செய்தி சில ஊடகங்களில் வெளியான நிலையில், தேசிய மகளிர் ஆணைய தலைவர் ரேகா சர்மா, இந்திய விமானப்படை தளபதிக்கு கடிதம் எழுதியுள்ளார். பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்படும் பாதிக்கப்பட்ட பெண்ணின் தனி உரிமை மற்றும் மதிப்பை மீறும் வகையிலும் உச்ச நீதிமன்றம் இதுபோன்ற விவகாரங்களில் பிறப்பித்த உத்தரவை மீறும் வகையிலும் இரு விரல் பரிசோதனை நடத்திய இந்திய விமானப்படை மருத்துவர்களின் செயல் தேசிய மகளிர் ஆணையத்துக்கு ஏமாற்றத்தை தருகிறது என்றும் இது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் தேசிய மகளிர் ஆணைய தலைவி ரேகா சர்மா கூறியுள்ளதாக அந்த ஆணையம் இன்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுத்து, அரசாங்கமும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலும் 2014ஆம் ஆண்டில் அறிவித்தபடி இருவிரல் பரிசோதனை முறை அறிவியல் பூர்வமற்றது என்பது குறித்து இந்திய விமானப்படை மருத்துவர்களுக்கு புரிய வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ரேகா சர்மா கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள 29 வயதாகும் ஆண் அதிகாரி சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்தவர். அந்த பெண் அதிகாரி புகார் தெரிவித்தவுடனேயே அந்த ஆண் அதிகாரி மாவட்ட நீதிபதி முன்பு சரண் அடைந்தார். இதற்கிடையே, இந்த விவகாரத்தில் பெண் அதிகாரி அளித்த பாலியல் வன்புணர்வு புகாரை விமானப்படையே விசாரிக்க முடியும். அதை உள்ளூர் காவல்துறை விசாரிக்க வரம்பு இல்லை என்று கூறி குற்றம்சாட்டப்பட்ட அதிகாரியும் விமானப்படை தரப்பும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இதன் மீது முடிவு எடுக்கும்வரை குற்றம்சாட்டப்பட்ட ஆண் அதிகாரியை நீதிமன்ற காவலில் வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கை விமானப்படையே விசாரிக்கலாம் என்று நீதிபதி மகேஸ்வரி இன்று உத்தரவிட்டிருக்கிறார்.

ஃபிளைட் லெப்டினன்ட் அந்தஸ்தில் உள்ள ஆண் அதிகாரியால் செப்டம்பர் 10ஆம் தேதி தான் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக விமானப்படை தள பொறுப்பு அதிகாரியிடம் புகார் தெரிவித்த பிறகும் அவர் 20ஆம் தேதிவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்த பெண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும், உச்ச நீதிமன்றம் சில ஆண்டுகளுக்கு முன்பு பிறப்பித்த உத்தரவுக்கு முரணாக தான் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதைக் கண்டறிய தன்னை இரு விரல் பரிசோதனைக்கு விமானப்படை மருத்துவர்கள் உட்படுத்தியதாகவும் அந்த பெண் அதிகாரி கூறியிருக்கிறார்.


புகார் தெரிவித்த பெண் அதிகாரியும் ஆண் அதிகாரியும் கோவை விமானப்படை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி வகுப்புகளுக்கு சென்று வந்துள்ளனர். இந்த நிலையில், செப்டம்பர் 9ஆம் தேதி இரவு படையின் மெஸ்ஸில் நடந்த இரவு விருந்தில் கலந்து கொண்டதாகவும் பயிற்சியின்போது காலில் ஏற்பட்ட காயத்துக்கு மருந்து சாப்பிட்டு விட்டு உறங்கி விட்டதாகவும் பெண் அதிகாரி புகாரில் கூறியுள்ளார். மேலும், அன்றைய தினம் நள்ளிரவைக் கடந்த நிலையில், குற்றம்சாட்டப்பட்ட ஆண் அதிகாரி குடிபோதையில் தன்னிடம் தவறாக நடந்து கொண்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியதாகவும் பெண் அதிகாரி கூறியுள்ளார். தனக்கு நேர்ந்ததாக கூறப்படும் சம்பவம் குறித்து விமானப்படை குழு தலைவரிடம் கூறியதும், மற்றொரு பெண் அதிகாரியுடன் தன்னை சந்தித்த அவர், "உன் எதிர்காலம், குடும்ப மரியாதை போன்றவற்றை நினைத்துப் பார்," என்று கூறியதாகவும் பெண் அதிகாரி தெரிவித்துள்ளார். பின்னர் அந்த இரு உயரதிகாரிகளும் மீண்டும் தன்னை சந்தித்து, ஒன்று எழுத்துபூர்வமாக புகார் தெரிவிக்க வேண்டும் அல்லது கருத்தொற்றுமையுடன் உறவு கொண்டதாக எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டும் என்று கூறியதாகவும் பெண் அதிகாரி கூறியுள்ளார். இதையடுத்து புகார் தெரிவிக்க துணிந்தபோது அன்றைய தினம் மருத்துவமனையில் இரு விரல் பரிசோதனைக்கு தான் உட்படுத்தப்பட்டதாக அந்த பெண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த பரிசோதனையில் முடிவு நெகட்டிவ் என்று வந்ததாக தன்னிடம் கூறிய உயரதிகாரி, எழுத்துபூர்வ புகாரை திரும்பப் பெறவேண்டும் என்றும் இல்லாவிட்டால் இந்த தகவல் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்து விமானப்படைக்கு மட்டுமின்றி உனக்கும் களங்கத்தை ஏற்படுத்தி விடும் என்று தன்னிடம் எச்சரித்ததாக பெண் அதிகாரி தெரிவித்தார் என்று காவல்துறையினர் கூறுகின்றனர். இருந்தபோதும், இந்த விவகாரத்தில் அவர் துணிந்து சென்று நகர காவல் ஆணையரை சந்தித்து புகார் அளித்ததைத் தொடர்ந்து அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையே, "விமானப்படை அதிகாரியை உள்ளூர் காவல்துறை வழக்கு ஒன்றில் கைது செய்திருப்பது தவறு என்றும் அந்த அதிகாரியை தங்களிடம் ஒப்படைத்தால் விமானப்படை சட்டத்தின்படி அவருக்கு எதிரான விசாரணை நடத்தப்படும்," என்றும் கூறி நீதிமன்றத்தில் இந்திய விமானப்படை மனு தாக்கல் செய்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக இந்திய விமானப்படை தரப்பில் இருந்து இன்னும் கருத்து ஏதும் ஊடகங்களிடம் தெரிவிக்கப்படவில்லை.

2014ஆம் ஆண்டு ஹரியாணா மாநிலத்தில் நடந்த ஒரு சம்பவம் தொடர்பான மேல்முறையீட்டு வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. அதில், "இரு விரல் பரிசோதனை" மற்றும் அதன் விளக்கம் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் தனியுரிமை, உடல், மன ஒருமைப்பாடு மற்றும் கண்ணியத்திற்கான உரிமையை மீறுவதாக உள்ளது," என்று கூறப்பட்டுள்ளது. "இரண்டு விரல் பரிசோதனை" மற்றும் கன்னித்தன்மை பரிசோதனைகள் மூலம் வன்முறையின்றி உறவு கொண்டார்கள் என்பதை உறுதிபட குறிப்பிட முடியாது என ஆராய்ச்சியாளர்களும் மருத்துவ நிபுணர்களும் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளனர். கன்னித்திரை கிழிந்தோ சேர்ந்தோ இருப்பதை மட்டும் வைத்து இதில் முடிவெடுக்க முடியாது. அதற்கும் பாலியல் வன்முறை அல்லது துஃபிரயோகம் தொடர்பான விசாரணைக்கும் தொடர்பு இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை மேற்கோள்காட்டி சில மாதங்களுக்கு முன்பு பாகிஸ்தானின் லாகூர் நீதிமன்றத்தில் கூட ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், இதுபோன்ற இருவிரல் பரிசோதனை, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எவ்வித பயனையும் தரப்போவதில்லை. மாறாக அவர் மீதே சந்தேகம் கொள்ளும் பார்வையை தோற்றுவித்து விடும் என்று நீதிமன்றம் கூறியது. ஒரு பெண்ணின் கன்னித்திரை தன்மையை வைத்து அவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகவில்லை என்ற முடிவுக்கு வர முடியாது என்றும் பாகிஸ்தான் நீதிமன்றம் கூறியிருந்தது.

உலக சுகாதார அமைப்பும், கடந்த 2018ஆம் ஆண்டு இதே கருத்தை வெளியிட்டுள்ளது. "கன்னித்தன்மை சோதனை பெரும்பாலும் கன்னித்திரை தன்மை அல்லது அது கிழிந்த அளவு, மற்றும்‧அல்லது யோனியில் விரல்களைச் சொருகுவதன் மூலம் ("இரண்டு விரல்" சோதனை) பரிசோதிக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் "பாலியல் செயல்பாட்டு வரலாறை" இந்த முறையில் அறியலாம் என்பது நம்பிக்கை அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், ஒரு பெண் யோனி வழியாக உடலுறவு கொண்டாரா இல்லையா என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்கிறது உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.



# Personal Prayer To The Holy Spirit

## Our Mother of Perpetual Help

Holy Spirit Thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated form You no matter how great the material desire may by. I want to be with You and my loved ones in Your prepetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no mater how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted. **R.R**

## ஜீவன் முக்தி (பகுதி ) 126

# கடவுளோடு விளையாட முடியும்



இந்த விஷயத்தைப் பகிர்ந்து கொள்ள மாதாஜி குப்பம்மாள் வீட்டிற்குச் சென்றேன்.
முதலில் மாதாஜி குப்பம்மாள் எனக்கு குரு போன்ற இருந்தார்கள். அவர்களிடம்தான் எல்லா விஷயங்களையும் போய் சொல்வேன்.

இந்த நிகழ்ச்சியைச் சொல்வதற்காக அந்த அம்மாவை நேராகச் சென்று பார்க்கப் போனேன். குப்பம்மாவை நேரில் பார்த்தேன்.

அந்த அம்மா என்னைப் பார்த்ததும், இது என்ன காவி உடை?' என்றார்.

உடனே நான் அம்மா ஒரு சன்யாசி எனக்கு இதை கொடுத்தார்' என்றேன்.

அந்த அம்மா, எந்த சன்யாசி உனக்கு காவி கொடுத்தார். சன்யாசி உனக்கு காவி கொடுத்தார் என்றால், நீ அவருடைய சிஷ்யனாகி விட்டதாய் என்ற அர்த்தமாகிவிடுமே! நீ அவருடைய சீடனாகி விட்டாயே. நீ எப்படி சன்யாசம் வாங்கலாம்?' என்று அந்த அம்மா ஓ' வென்று சத்தம் போட்டார்கள்.

எனக்கு அப்பொழுது தான் ஷக்' அடித்த மாதிரி இருந்தது.
ஒன்றுமே புரியவில்லை. என்னடா இது? சன்யாசம் கொடுத்ததாக சொல்றாங்க. இந்த அம்மாவிடம் ஏன்தான் வந்து சொன்னோமோ?' என்று நினைத்தேன்.

ஏனென்றால் அந்த அம்மா என்னைப் பாராட்டுவார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் ஏன் இந்த அம்மா இதை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொள்கிறார்கள்? என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உடனே அந்தம்மா எந்த சன்யாசி என்று சொல்லு? எனக்கு அவரைக் காட்டு' என்றார்.

நான் அதற்கென்ன, வாங்க காட்டுகிறேன்' என்று சொல்லி நேரே அந்தக் குகைக்கு அருகில் அழைத்துச் சென்றேன்.

அந்த அம்மாவை அழைத்து வந்து, எந்த குகைக்குள்ளிருந்து அவர் தினமும், வந்து போவாரோ, அதே குகைக்கு முன்னே எப்போதும் கூப்பிடுவதுபோல் சாமி, சாமி' என்று கூப்பிட்டேன். வழக்கமாக அங்கு நின்று அவரைக் கூப்பிட்டாலே வெளியே வந்து விடுவார். குப்பம்மாள் வந்த உடனே, சாமி, வெளியில் வாங்க, குப்பம்மாள் வந்திருக்காங்க, உங்களைப் பார்க்கணும்னு சொல்றாங்க' என்று கூப்பிட்டேன்.

ஒரு தரம் கூப்பிட்டேன். வரவில்லை. இரண்டாவது தரம் கூப்பிட்டேன். அப்பொழுதும் வரவில்லை.
குப்பம்மாள் அவர்களுக்கே 'நான் எங்கிருந்தோ காவித் துணியைத் திருடிக் கொண்டு வந்துவிட்டேன்' என்று பயம். அந்த அம்மா என் பாட்டியின் உறவினர், அதிலும் பாட்டியினுடைய தோழி.

அந்த அம்மா உடனே டேய் எந்த சன்யாசி உனக்கு காவி கொடுத்தார். எங்கேயாவது திருடிட்டு வந்து பொய் சொல்கிறாயா?' என்று சொல்லி என்னை அடிக்க ஆரம்பித்துவிட்டார்.

நான் சொன்னேன், இல்லை இங்குதான் அந்த சன்யாசி இருந்தார். அவர்தான் வந்து கொடுத்தார்' என்று சொன்னேன்.

உடனே அந்த அம்மா, எங்கிருந்து வந்தாங்க' என்று கேட்டார்.

நான் அந்தக் குகையைக் காண்பித்து, இங்கே இருந்துதான் வந்தாங்க.' என்று சொன்னேன்.
உடனே அந்த அம்மா ஓ! இந்தக் குகையா? வா' என்று குகையில் கை வைத்துத் தள்ளினார்.

அப்பொழுதுதான் தெரிந்தது, அது குகையே கிடையாது! அது ஒரு சமாதி என்று.

எனக்கு ஷக் ஆகிவிட்டது. ஏனென்றால் அதுவரை நான் சொன்னதெல்லாம் பொய் சொன்ன மாதிரி ஆகிவிட்டது அல்லவா?

குகையே இல்லை என்கிறபோது, அந்தக் குகையிலிருந்து எப்படி சன்யாசி வெளியே வரமுடியும்? எப்படி காவி கொடுக்க முடியும்? ஆனால் இது அத்தனையும் நடந்திருக்கிறது.

அந்த அம்மாவிற்கும் பயங்கர ஷாக், எனக்கும் ஷாக்.
அந்த அம்மா தெளிவாக முடிவெடுத்து விட்டார்கள். நான் எங்கிருந்தோ காவியை திருடிக்கொண்டு வந்திருக்கிறேன்' என்று. அதை மறைப்பதற்காகத் தான் இந்த மாதிரி சன்யாசி வந்தார், கொடுத்தார்' என்று பொய் சொல்வதாக குப்பம்மாள் முடிவு செய்து விட்டார்கள்.

திருடிவிட்டு அதை மறைப்பதற்கு பொய்யும் சொல்கிறான்' என்று நினைத்து, கோபத்தில் அந்த அம்மா அங்கேயே பளிச் பளிச் என்ற நான்கு அறை கொடுத்தார்கள்.

நான் என்ன சொன்னாலும் அதை குப்பம்மாள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.
நீ எங்கிருந்தோ திருடியிருக்கிறாய் எங்கிருந்து எடுத்தாய்?' என்று கடுமையாக கேட்டார்.

ஒருவருக்கு ஒருவர்மீது சந்தேகம் வந்துவிட்டால், அதை மாற்றுவது அவ்வளவு லேசுபட்ட காரியமில்லை.

என்ன சொன்னாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாதபோது, நாம் என்ன சொன்னாலும் அது மேலும் மேலும் சந்தேகத்தை வலுப்படுத்தும். ராமகிருஷ்ன பரமஹம்ஸர், சீடர்களின் சந்தேகங்களுக்கு எப்போதும் பொறுமையாக பதிலளித்துக் கொண்டே வருவார். சீடர்களின் சந்தேகங்களும் மறைந்து கொண்டே வரும்.

ஆனால் அந்தப் பதிலைப் பொருட்படுத்தாத சிலர் விதண்டாவாதமாக கேட்கும் கேள்விகளுக்கு என்ன செய்வாராம். ஒன்றும் பேசாமல் சாந்தமாக அவர்களுடைய கையை பிடித்துக்கொள்வாராம்.

அதுவரை பேசிக்கொண்டே இருந்தவர்கள், அமைதியாவது மட்டுமல்லாமல் அவர்களுக்குள் அந்தக் கேள்வி மீண்டும் எழவே எழாது. சக்தி பாய்ந்ததும், கேள்விகள் கரைந்து விட்டிருக்கும். குப்பம்மாளின் சந்தேகம் அதிகமாகிக் கொண்டே வந்தது. 'பளீரென்று அடித்த பிறகு மேலும், மேலும் விளக்கம் அளிப்பதை நிறுத்தினேன்.

அப்போது அவரிடம் சொன்னேன்.
பாட்டி உன்மேல் சத்தியம்
என்மேல் சத்தியம்
நம்மை ஆளும் இந்த அண்ணாமலையார் மீது சத்தியம்
அவர்தான் வந்தார்.
அவர் இந்த காவியை போர்த்தி விட்டார்.' என்று குப்பமாளின் தலைமீது என் கையால் அடித்து சத்தியம் செய்தேன். பின் அவரது கையிலும் சத்தியம் செய்தேன்.

சத்தியத்தைச் செய்து விட்டுக் குப்பம்மாளின் கண்களைப் பார்த்தேன். கரகரவென்று கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அருணகிரி யோகீஸ்வரர் சந்நியாசம் அளித்த பிறகு எனக்குள் என்ன அனுபவம் பொங்கிக் கொண்டிருந்ததோ அதே அனுபவம் அவருக்குள்ளும் நிகழ்ந்தது. சக்தி பாய்ந்ததும் அவருக்குள் இருந்த சந்தேகம் கரைந்து விட்டது.
உடனே அந்தம்மா கேட்டார்கள்.
டேய் உண்மையாகவா சொல்ற'?
அவர் எப்படிடா இருந்தார்'? என்று கேட்டார்.
நான் சொன்னேன். 30. 35 வயது இருக்கலாம். நீளமான முடி இருந்தது. விபூதி வைத்திருந்தார். குங்குமம் வைத்திருந்தார். கண்கள் பளபளவென மிளர்ந்தன. உடம்பில் உருத்திராட்சம் போட்டிருந்தார்'. என்று அவரைப் பற்றி விளக்கினேன்.

உடனே கும்பம்மாள் பேர் ஏதாவது சொன்னாராடா? எத்தனை நாட்களாக அவரைப் பார்க்கிறாய்'? என்று கேட்டார்கள்.

ஒரு ஏழெட்டு மாதமாக கூட இருக்கலாம். நான் வந்து கூப்பிடும் போதெல்லாம் வெளியே வருவார். இரண்டு பேரும் உட்கார்ந்து பேசுவோம்' என்றேன்.
'சரி, பெயர் ஏதாவது சொன்னாராடா? என்று கேட்டார்.

நான் சொன்னேன், ஆமாம் பெயர் சொன்னார்'
என்ன பெயர் சொன்னார்'? என்றார்.
உடனே நான், அருணகிரி யோகீஸ்வரர்' என்றேன்.
நான் பெயரைச் சொன்ன உடனேயே அந்தம்மா பளிச்சென்று என் காலில் விழுந்து கும்பிட்டார்கள்.



நன்றியுணர்வோடு என் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.
அருணகிரி யோகீஸ்வரரே உனக்கு சந்நியாசம் கொடுத்திருக்கிறார்.'
என்று பூரித்துப் போனார். அதிலிருந்து அவர் என்னைச் சிறுவனாக பார்க்கும் பார்வை மாறியது.
நன்கு புரிந்து கொள்ளுங்கள். அப்போது அந்த அம்மா எனது குரு. அந்த அம்மா என் காலிலே விழுந்து கும்பிட்டார்களென்றால்... கையை பிடித்ததும் அவர்களுக்குள்ளும் அந்த ஆழ்ந்த அனுபவம் அந்த வினாடி நிகழ்ந்ததால்தான்!
குப்பம்மாள் தாரை தாரையாக கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்துவிட்டார்கள். அதுவரைக்கும் நான்தான் அழுது கொண்டிருந்தேன்.

இப்போது சூழ்நிலை மாறி அந்த அம்மா அழ ஆரம்பித்து விட்டார்கள். நான் புரியாமல் கேட்டேன்,'ஏன்? ஏன்'? ஏன்' நீங்க அழுறீங்க?'

அந்தம்மா, உனக்குத் தெரியாதடா, நாங்கள் யாரைப் பார்ப்பதற்காக, யுக யுகமாக தவமிருக்கின்றோமோ, காலங்காலமாக தவம் செய்கின்றோமோ அவருடைய சமாதிகுள்ளிருந்து அவரே வந்து உனக்குத் தரிசனம் கொடுத்திருக்கிறார். அவரைப் பார்த்தது மட்டுமல்லாமல் அவரோடு விளையாடியும் இருக்கிறாய், பழகியிருக்கிறாய்' என்று சொன்னார்.
அவர் சொன்னபிறகுதான் எனக்குத் தெரிந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அங்கு சமாதி அடைந்த அருணகிரி யோகீஸ்வரர் என்பவர் ஈஸ்வரனடைய அவதாரமானவர் என்று.
அருணகிரி யோகீஸ்வரர் சமாதியடைந்து 2000 வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. அருணகிரியோகீஸ்வரர் சமாதியின்மேல்தான் திருவண்ணாமலையில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது என்று அப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள்.**

**மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

# "தேசிய உண்மை மற்றும் நல்லிணக்க தினம் பூர்வீக கனேடியர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நாள், அது அனைத்து கனேடியர்களுக்குமானது அல்ல"

## ஒட்டாவாவில் அங்குரார்ப்பண உரையாற்றிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு



"30ம் திகதி தொடக்கம் கனடாவில் அமுலுக்கு வரவுள்ள தேசிய உண்மை மற்றும் நல்லிணக்க தினம் பூர்வீக கனேடியர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நாளா-கும், அது அனைத்து கனேடியர்களுக்கும் உரி-யது அல்ல"

இவ்வாறு கடந்த புதன்-கிழமையன்று ஒட்டாவா மாந-கரில் பாராளுமன்றத்திற்கு முன்பாக அமைக்கப்பெற்ற விசேட இடத்தில் உரையாற்றிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார்.

நேற்று செப்டம்பர் மாதம் 30ம் திகதியன்று அமுலுக்கு வந்துள்ள 'தேசிய உண்மை மற்றும் நல்லிணக்க தினம்' தொடர்பான முதல் நாள் நிகழ்வில் அவர் கலந்து கொண்டு ஒரு உருக்கமான உரையை ஆற்றினார்

கனடாவின் பூர்வீக பழங்குடியினர் சார்ந்த பல தலைவர்கள் அங்கு உரையாற்றினார்கள். அவர்கள் அனைவரும் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பெற்ற பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு எதிராக பல விடயங்கள் அரங்கேற்றப்பட்டன.

என்றும் அவர்கள் தங்கள் இனத்திற்குரிய மொழியை மறந்து விட வேண்டும் என்பதற்காக வதிவிடப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களும் நிர்வாகிகளும் நிறையவே தவறுகளை இழைத்திருக்கின்றார்கள். என்று தெரிவித்தார்கள்.


மேலும் சிலர் இவ்வாறான கொடுமைகளிலிருந்து தாங்கள் தப்பிப்பிழைத்தவர்கள் என்று கூறி. தாங்கள் அனுபவித்த அதிர்ச்சி மற்றும் வலியின் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய கனடியப் பிரதமர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார்.

"நாம் அனைவரும் - நாம் அனைவரும் - இந்த கதைகளை நம் இதயங்களில் வைத்திருக்க வேண்டும். எங்கள் புரிதலில், நாம் நல்லிணக்கத்தை பிரதிபலிப்பது போல் அல்ல, மாறாக இந்த நாட்டைப் பிரதிபலிக்கிறோம்."

சத்தியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தொடக்க நாள் பழங்குடி மக்களுக்கான நாள் மட்டுமல்ல, அனைத்து கனேடியர்களும் "நாங்கள் செய்த தவறுகளின் உண்மை, கடந்த காலத்தில் செய்த தீமைகள்" மற்றும் வேலை பற்றி சிந்திக்க வேண்டும். மேலும் . அந்த வதிவிடப் பாடசாலை-களில் கல்வி கற்க அழைக்கப்பெற்று பின்னர் கொல்லப்பட்ட அநீதிக்கு நாம் தீர்வு காண வேண்டும்.

நூம் கனடியர்கள் ஓர விடயத்தை மிக அவசரமா-கவும் அவசிய-மாகவும் உடன் செய்ய வேண்டும். .. முன்னைய நாட்களில் இடம்பெற்ற கொ-டுமைகளில் இருந்து தப்பிப்பிழைத்தவரின் கதைகளைக் கேட்க சிறிது நேரம் ஒதுக்கு வேண்டும், இந்த நாட்டில் அவர்களின் முன்னோக்கு மற்றும் அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பழங்குடி பெரியவர். அந்த கதை, அவர்களின் கதை மட்டுமல்ல எங்களது கதையும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்." என்றார்.






இவ்வாறான நிலையில் முதல் நாள் ஒட்டாவா மாநகரில் பூர்வீக குடி மக்கள் சார்ந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் அடுத்த நாளான வியாழக்கிழமை அவர் தனது குடும்பத்துடன் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள டோ.ஃபினோவுக்கு விடுமுறையாக கருதி விமானத்தில் சென்ற விடயம் பத்திரியாளர்கள் மத்தியில் விமர்சனங்களை எழுத வைத்துள்ளது கனேடியர்கள் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான முதல் தேசிய தினத்தைக் கொண்டாடிய நாளன்று பிரதமர் எவ்வாறு விடுமுறை யில் செல்ல முடியும் என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்,

ட்ரூடோவின் தினசரி பயணத்திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பத்தில் அவர் ஒட்டாவாவில் "தனிப்பட் கூட்டங்களில்" இருப்பதாகக் கூறப்பட்டாலும், பின்னர் அவர் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் டோ.ஃபினோவிற்குச் குடும்பத்துடன் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது

இவ்வாறு பிரதமர் மேற்கொண்ட தனிப்பட்ட பயணம் தொடர்பாக கருத் து வெளியிட்ட கனடாவின் பூர்வீக மகளிர் சங்கத்தின் தலைமை நிர்வாக அதிகாரி லின் க்ரூலக்ஸ், பத்திரிகையாளர்களோடு வெளிப்படையாகப் பேசினார். இந்த குறிப்பிட்ட நாளில் பிரதமர் பயணம் செய்வது "மிகவும் வருத்தமளிக்கிறது" என்றும் கூறினார்.

"இது பழங்குடியின மக்கள் சார்ந்த மிக முக்கியமான முன்னுரிமை விடயம் என்று கூறிய பிரதமர் அவர் அரசாங்கம், அவரது நடவடிக்கை . மேற்படி அறிக்கையில் உள்ள வார்த்தைகளுடன் பொருந்தவில்லை," என்று அவர் கூறி-னார். மேலும், வேறு சில தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில். பிரதமருக்கு இது மிகவும் இன்றைய நாளுக்கு பொருந்தாத விடயத்தை செய்து விட்டார் என்று தெரிவித்தனர்.


பிக்கரிங் நகரில்

அருள்ஜோதி சிவாலயம்







1400 Baylyst Unit - 13 அமைந்திருக்கும்
அருள்மிகு கௌரி அம்பிகா சமேத சாம்பசிவ பெருமானுக்கு
"மஹா கும்பாபிஷேகம்"

20-10-2021 புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி
23-10-2021 சனிக்கிழமை காலை 9மணி முதல் 4மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்
24-10-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 தொடக்கம் 8.30 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில்
மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அடியவர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து சிவப்பரம் பொருளின் அருளைப் பெருமாறு அழைக்கின்றார்கள் ஆலய அறங்காவல சபையினர்.

தொடர்புகளுக்கு: 647–746–7474

# கடந்தவையும் கடப்பவையும் (4)

- உமா மோகன் -

தேவனைத் தரிசித்த மகிழ்வாலே
தேகமே பூரித்த அவ்வேளை
மகிழ்விற்கு மேலும் மகிழ்வூட்ட
எழுந்திடும் குளிர்ந்த கடற்காற்று

உயர்ந்திடும் தென்னை மரக்கீற்றின்
அசைந்திடும் வண்ண அழகோடு
தவழ்ந்து தான் வரும் அக் கடற்காற்றும் - அது

குறிஞ்சித் தலைவனின் கூடலிலே
குளிர்ந்த தலைவியின் உளம் போலே
மகிழ்ந்திடும் சுகத்தைத் தந்ததுண்டு - அதை
உணர்ந்தே பயணமும் தொடர்ந்ததன்று

தொடரும் வழியில் வருவதுதான்- இன்று
பலரும் சொல்லும் இன்பரிட்டி- அன்று
இன்பர் சிட்டி என்பதுவே இன்று
இன்பரிட்டி ஆனதுவாம்

இன்பர் என்போர் தேவராம் - அவர்
இன்பமாய் அங்கு வாழ்ந்தாராம் - அந்த
இன்பத்தின் உணர்வைத் தாங்கள் எல்லாம் - கொண்ட
அன்பினால் இன்றும் உணர்வதுண்டாம் - ஆம்

கடற்கரைப் பக்கம் கிடுகு வேலிகள் - அங்கு
அடக்கமாய்ச் சிறிய வீடுகள் - ஆங்கே
பெரியவர் சிறியவர் பேதமின்றி
தெரிவரே மீனை வலையினின்றும்

தெரிந்த மீனைக் கரையினிலே
பரப்பிவிடுவர் தறுப்பாட்டரையினிலே
எழுந்திடும் சூரியக் கதிராலே
காய்ந்த மீனின் வாசனையும்

காற்றுடன் கலந்து வருவதுண்டு - அதை
நாற்றமெண்டு எண்ணாது நாமும் நன்கு
நுகர்ந்ததுண்டு

செய்யும் தொழிலில் மட்டுமன்றி
ஓய்வாய் இருக்கும் வேளையிலும்
மகிழ்வாய் இருந்தார் அம் மக்கள்
புகழில் உயர்ந்த அருச்சுணனின்

பெயரில் ஆன மைதானம் அதன்
அயலில் இருந்தது நூலகம்
'காண்டீபன்' என்ற அப்பெயரும் - அங்கு
நீண்டுதான் வாழுது இன்று வரை - அங்கு

வெற்றி கொடுக்கும் வெற்றிவேலனை
பற்றிய பின்னரே தொழிலைச் செய்திடும் இறை
பற்றுள்ள மக்களைப் பார்த்தபடி - அவ்
அற்புத வேலனைத் தொழுதபடி

நகருமே நம் பேருந்தும் நல்லபடி.

இன்பர் சிட்டியைத் தாண்டினால் அடுத்து வருவது
தன்பேர் சுட்டும் 'வியாபாரிமூலை'

ஐம்பது அறுபதுகளில் நாளங்காடி, அல்லங்காடி
என்பதுவாய் இருகாலச் சந்தைகளைக் கொண்டதுவாம்

தன் பெயரின் காரணத்தை தன்னிலே கொண்ட
நற் பெரும் 'வியாபாரிமூலை'

காலையில் பார்க்கும் போது அங்கு
அலை அடிக்கப் பால்பொங்கும் கரையினிலே

வள்ளங்கள் வந்து நிற்க , காகங்கள் வட்டமிட
துள்ளும் இளமையுடன் வாலிபர்கள் வலை இழுக்க
மெள்ளவே ஆண்களும் பெண்களும் மீன் எடுக்க - அதை

கால் கொண்ட மண்டபத்துள் அள்ளி வந்து சிலர் போட - அதை
நேர் நிண்டு பார்க்கும் போது புத்துணர்ச்சி எமக்கும் வரும்

மாலையில் அவ்விடத்தை மறுபடி பார்க்கும் போது - அங்கு
நாலைந்து சிறுவர்கள் பட்டம் விட

கால் நீட்டி பாட்டிமார் பார்த்திருக்க
மேல்த்துண்டுத் தாத்தாமார் தாயம் ஆட - தம்

கை கொண்டு இளைஞர்கள் பந்தடிக்க - அதை
மெய் மறந்து இளம் பெண்கள் சிலர் பார்த்து நிற்க

குடும்பத் தலைவியரும் தம் வாயில்களில் ஒன்று கூடி
விடுப்புக்கள் கதைக்கும் காட்சி எல்லாம்

கொண்டதுதான் அன்றைய அந்த வியாபாரிமூலைக் கடற்கரைப் பாதை...

(தொடரும்)

# ஸ்காபரோ மருத்துவமனைகளுக்கு ஒன்றாரியோ அரசால் 26 மில்லியன் டாலர்கள் நிதி வழங்கப்பட்டது




ஒன்றாறியோ மாநிலத்திலுள்ள நோயாளர்களுக்கு உயர்தர பராமரிப்பினை வழங்குவதற்கென ஒன்றாரியோ அரசு ஸ்காபரோ சுகாதார கட்டமைப்புக்கு 26.83 மில்லியனுக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்த்தொற்றால் உருவான நிதி நெருக்கடியிலிருந்து மருத்துவமனைகளை விடுவிப்பதற்கு உதவுமுகமாக முன்னரே அறிவிக்கப்பட்ட 1.2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் ஒரு பகுதியான இந்நிதியானது, மருத்துவமனைகளின் மீதான நிதியியல் அழுத்தத்தினைக் குறைப்பதுடன் ஒன்றாறியோ வாழ் மக்களின் மருத்துவ தேவைகளுக்கும் அவர்களுக்கான உயர்தர சேவையை தொடர்ந்து வழங்குவதற்கும் பயன்படும். இந்நிதியானது, கோவிட்-19 நோய்த்தொற்றினால் உருவாகும் எத்தகைய மாறுபட்ட நெருக்கடி நிலையையும் மருத்துவமனைகள் சமாளிக்க உதவியாக அமையும்.

ஒன்றாறியோவிலுள்ள பல மருத்துவமனைகள் அதிகரித்த நோய்த்தொற்றால் ஏற்பட்ட நிலைமையின் நிமித்தம் தமது வருடாந்த நிதி ஒதுக்கீட்டுக்கான பற்றாக்குறையால் நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றன. முக்கியமான இத்தருணத்தில் ஒன்றாறியோவிலுள்ள மருத்துவமனைகள் தமது நிதிநிலையில் ஸ்திரத்தன்மையுடன் விளங்குவது இன்றியமையாதது. எனவேதான், ஒன்றாறியோ அரசானது வரலாற்றுத் தேவையான மருத்துவமனைகளின் நிதிப்பற்றாக்குறையைப் போக்கும் விதத்தில் இந்நிதியினை ஒன்றாரியோ அரசுவழங்குகிறது.

இந்த 26.8 மில்லியன் நிதி ஒதுக்கீடானது ஸ்காபரோ மருத்துவமனைகளின் நிதிநிலையை வலுவாக வைத்திருக்க உதவுவதுடன், ஸ்காபரோ வாழ் மக்களுக்குத் தேவையான உயர்தர மருத்துவ பராமரிப்பையும் வழங்கும் என ஒன்றாரியோ அரசு நம்புகின்றது.

**விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்**
**ஸ்காபரோ - றூஜ் பார்க்**

# கனடா 'ரொறன்ரோ மனித நேயக் குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் திருமலை செல்வநாயகபுரம் பகுதியில் வாழும் 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன





கனடாவில் இயங்கிவரும் "ரொறன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் (TORONTO VOICE OF HUMANITY) ஏற்பாட்டில் கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர்களான திருவாளர்கள் பாஸ்கரன் சின்னத்துரை மற்றும் என்கேஎஸ் - கேதா நடராஜா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் வாழும் வாழ்வாதாக உதவிகள் தேவைப்பட்ட 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன.

கடந்த சில வருடங்களாக "ரொறன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் ஏற்பாட்டில் கனடா வாழ் ஈகைப் பண்பு கொண்ட பல அன்பர்களது ஆதரவோடு இவ்வாறான உதவிப் பணிகள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.









**செய்தியும் படங்களும்:**
**திருமதி. தவமலர் கோணேஸ்வரநாதன் - திருகோணமலை**

மலேசிய மடல்

# சுங்கை பீளேக்கில் பிறந்த நாள் விழா தஞ்சை பெரிய கோவில் பகுதியில் அன்னதானம்

## தயாளனின் தயாள குணம்



நக்கீரன்

கோலாலம்பூர், செப்.30:



**சி**லாங்கூர் மாநிலம், சிப்பாங் மாவட்டம் சுங்கை பீளேக்கில் வசிக்கும் தயாளன், உள்ளூரில் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிய வேளையில் தஞ்சை பெரிய கோயிலைச் சுற்றியுள்ள நலிந்த மக்களுக்கு அன்னதானம் செய்து தன் பெயருக்கேற்ப தயாள குணத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

சுங்கை பீளேக் அருள்மிகு அதிசய விநாயகர் ஆலயத்தின் முன்னாள் துணைத் தலைவரான ச.தயாளன், அண்மையில் தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடிய அதேநேரத்தில் தஞ்சாவூர் பெரிய கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்கள், துப்புரவு தொழிலாளியர், ஆதரவற்று சாலை ஓரங்களில் வசிக்கும் முதியவர்கள் என நளிந்த மக்களைத் தேடிச் சென்று 200 உணவுப் பொட்டலங்களை வழங்கி சம்பந்தப்பட்டவர்களின் மனங்குளிர வைத்துள்ளார்.

இதற்காக அங்குள்ள நண்பர்களின் துணையை நாடி, அவர்களின் மூலம் இந்த சமூக நல நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் தயாளன். வட்டார அளவில் சமூக செயற்பாட்டாளராகவும் சிறு தொழில் முனைவராகவும் விளங்கும் தயாளன், தன்னுடைய மனைவி கு. ஜெயமாதவியின் ஆலோசனையின் படி இந்த சேவையை மேற்கொண்டுள்ளார்.



தஞ்சை நகரப் பகுதியில் வசிக்கும் தயாளனின் நண்பர்களின் மூலம், முதல் நாளே சாப்பாட்டுப் பொட்டலத் திற்கான ஏற்பாட்டை செய்து, சம்பந்தப்பட்ட தினத்தில் ஒரு தானி வாகனத்தின் (ஆட்டோ ரிக்‌ஷா) மூலம், உணவுப் பொட்டலங்களை ஏழை மக்களுக்கு வழங்கி, அதன் மூலம் பெரு மகிழ்ச்சி அடைந்துள்ளனர் தயாளன்-ஜெயமாதவி இணையர்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24










# தமிழ் சமூக மையம் மீதான முதற்பார்வை



தமிழ் சமூக மைய செயற்றிட்டத்தின் இயக்குனர் சபையானது கட்டிடத்தினதும் அதைச் சூழவுள்ள பகுதிகளினதும் பூர்வாங்க வடிவமைப்பொன்றை வெளியிட்டது.

வடிவமைப்புக்கு முந்திய ஆய்வானது 311 ஸ்ரெயின்ஸ் வீதியின் வாய்ப்புகளும் கட்டுப்பாடுகளும் எங்ஙனம் தமிழ் சமூக மையத்தால் சாதகமாகப் பயன்படுத்தப்படலாம் என எடுத்துக்காட்டுகிறது.

வடிவமைப்புக்கான அடிப்படை வழிகாட்டிகளாக ஐந்து விடயங்களை நாம் மனதிலிருத்தினோம்: (1) கலந்தாய்வுகளின் அடிப்படையிலான சேவைத்திட்ட வெளிகள் (2) சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான உறுதிப்பாடு (3) பூர்வகுடிக் குமுகங்களை மதித்தல் (4) குடியிருப்பாளர்களின் கரிசனங்களுக்கான தீர்வுகள் (5) தமிழ்ப் பண்பாடும் வரலாறும் தமிழின அழிப்பும்.





உங்கள் பின்னூட்டங்களை
ஒக்டோபர் 13க்கு முன்
www.tamilcentre.ca இல் வழங்குங்கள்.
ஒக்டோபர் 13, மாலை ஏழு மணிக்கு
நடைபெறவிருக்கும் நிகர்நிலை
குமுகப் பொதுக்கூட்டத்திலே
கலந்துகொள்ள www.tamilcentre.ca
இல் பதிவுசெய்யுங்கள்.



தமிழரின் பாரம்பரியக் கட்டிடக்கலை (மைய முற்றம்), தமிழ்மொழியும் சங்க இலக்கியக் கோட்பாடுகளும் (ஐந்திணைகள்), புலப்பெயர்வையும் ஏதிலிவாழ்வையும் புகலடைவையும் உள்ளடக்கிய தமிழரின் அண்மைக்கால வரலாறு (கப்பல்) ஆகியவற்றால் வடிவமைப்பு அகத்தூண்டல் பெற்றுள்ளது.

www.tamilcentre.ca

# இவ்வார ராசிபலன்

**01-10-2021 வெள்ளி தொடக்கம் 07-10-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** நிதானத்தோடு செயல்பட வேண்டும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத் தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். கருட வழிபாட்டால் கடன் தீரும்.
அதிர்ஷ்ட எண்: *1,0,3,5*
அதிர்ஷ்ட நிறம்: கருமை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,B




**ரிஷபம்:** மனித நேயம் மிகுதியாகும். வீண் செலவு ஏற்படும். விவேகம் வெளிப்படும். வெளியூர் பயணம் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும்.
அதிர்ஷ்ட எண்: *6,2,3,8*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,L




**மிதுனம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத் தொழில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு. நவகிரஹ வழிபாடு நன்மை தரும்.
அதிர்ஷ்ட எண்: *9,0,9,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,W




**கடகம்:** தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். அன்னதானம் ஆரோக்கியம் தரும்.
அதிர்ஷ்ட எண்: *4,5,3,0*
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A




**சிம்மம்:** விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். அர்ச்சனையால் பிரச்சனைக் குறையும்.
அதிர்ஷ்ட எண்: *8,1,7,6*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y




**கன்னி:** கடுமையான நாள். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புகள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பங்குச் சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. பயணம் அனுகூலம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். சுயநலம் கூடும். பாத விநாயகர் வழிபாடு பாவம் போக்கும்.
அதிர்ஷ்ட எண்: *4,1,1,9*
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,U




**துலாம்:** திருமகள் கிருபை உண்டு. உத்தியோக வாய்ப்புண்டு. மன நிம்மதி அதிகரிக்கும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும். வம்பு தும்புகள் ஒழியும். திறமைகள் வெளிப்படும். செலவுகள் குறையும். வருமானம் திருப்தி தரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை.
அதிர்ஷ்ட எண்: *2,4,6,9*
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,I




**விருச்சிகம்:** உடல் நலம் மேம்படும். மனைவியின் உறவு மேம்படும். தொழிலில் அதிக லாபம் வரும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். கணபதி வழிபாட்டால் கடன் தீரும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு.
அதிர்ஷ்ட எண்: *2,5,7,8*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**தனுசு:** குடும்பத்தில் குழப்பம் நீங்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மாங்கல்ய நமஸ்கரம் மனோ தைரியம் கொடுக்கும். காரியம் கை கூடும். புத்திர வகையில் சந்தோஷம் கூடும். பொது வாழ்வில் பூமியில் நன்மை உண்டு. ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும்.
அதிர்ஷ்ட எண்: *5,7,8,9*
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,C




**மகரம்:** திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். எதிர்ப்பார்த்த மறைமுக எதிர்ப்பு உருவாகும். வழக்குகள் சாதகமாகும். மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோக உயர்வு உண்டு. பழைய கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.
அதிர்ஷ்ட எண்: *2,4,7,6*
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**கும்பம்:** உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். முதலீடு உண்டாகும். தொலை தூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசு கரையாது. நினைத்தது நடக்கும். அதிதேவதை வழிபாட்டால் ஐஸ்வர்யம் கூடும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகள் குறையும்.
அதிர்ஷ்ட எண்: *2,4,5,9*
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**மீனம்:** குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோபுர வழிபாட்டால் குடும்ப மேன்மை உண்டு. ஆதாயம் பெருகும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும் வியாபாரம் திருப்தி தரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும்.
அதிர்ஷ்ட எண்: *1,3,5,8*
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F

## உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள்!

**- திருமதி பவானி தர்மகுலசிங்கம் (கனடா)**

*நோயுற்றுக் காயம்தான் நொய்ந்துருகி நுடங்கிடினும்,*
*வாயுரைக்க நாவரண்டு வார்த்தைகள்தான் புரண்டிடினும்,*
*ஓயும்நிலை உனையணுகி உறக்கநிலை நெருங்கிடினும்,*
*தாயுள்ளம் கொண்டிலங்கில் தளிர்த்திடுவாய் தரணியிலே!*

*நம்பிக்கைத் துடுப்பெடுத்து நல்வாழ்வுப் படகோட்டி,*
*அம்புலியின் வளர்ச்சிதனை, ஆதவனை அகத்திருத்தி,*
*எம்புவியில் நீயடைந்த எழுச்சிமிகு வாழ்வெண்ணி,*
*வெம்பியழும் நிலைமறந்து வியனுலகம் கண்டிடுவாய்!*

*நதிவெள்ளம் கடல்சேர, நலிவதில்லை மாநதிகள்!*
*உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள்!*
*சிதிலமாதல் கண்டுகண்ணீர் சிந்துவதில்லை சிற்பங்கள்!*
*விதியென்பார்! வினையென்பார்! வீணுரைப்பார்! விலக்கிடுவாய்!*

*இளமையான மேனியென்றும் இகத்தினிலே நிலைப்பதில்லை.*
*அளவார்ந்த செல்வமுமோ அழிந்துவிடும் மின்னலென.*
*வளமான நிலமென்னும் மனத்தினிலே நல்லெண்ணம்*
*உளமார்த்து விதைத்திட்டால் உண்டாகும் கனிவளங்கள்!*

*ஆதவனின் ஒளிக்கீற்றால் ஆர்கலியும் வளம்குன்றிப்*
*பேதமின்றி மழைநீராய்ப் பெய்கிறதே மாநிலத்தில்!*
*வேதனைதாம் கொள்வதில்லை, விஞ்சிடும்தன் வரட்சிகண்டு,*
*பூதலத்தாள் உவகைகண்டு பூத்திருப்பாள் சமுத்திரத்தாள்!*

*வாழ்க்கையெனும் தேரதனை வண்ணமுற வடம்பிடித்து*
*ஆழ்ந்தவுயர் அறிவுகொண்டு அடக்கத்தைக் கடைப்பிடித்தால்,*
*தாழ்ச்சியென்றும் நெருங்கிடாது, தாளாண்மை கொண்டுநீயும்*
*சூழ்கின்ற துயர்போக்கத் துணிவுடனே செயற்படுவாய்!*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 966



## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் உடுப்பிட்டி

தந்தையாகிய தக்கன் சிவனை நிந்தித்ததை நேரிலே கண்டு, அதனைத் தடுத்துத் தந்தையைக் காப்பாற்ற முயன்றும், பலனளிக்கவில்லை. மகளை அவமதித்துத் துரத்திய தக்கன், யாகத்தைத் தொடர்ந்து நடத்தினான். விருப்பு வெறுப்புக்களற்ற இறைவன், ஆணவம் தலைவிரித்தாடும் தக்கனின் யாகத்தைச் சங்காரம் செய்து, அவனைக் காப்பாற்றக் கருணை கொண்டார். இவ்வேளையில், தகாது செய்யும் தக்கனின் மகள் என்ற வடு, தனக்கு ஏற்படாதிருக்கும் பொருட்டு, யோகாக்கினியால் தன்னுடல் நீத்து, தாட்சாயணி என்னும் நிலையினின்றும் நீங்கி, பர்வதராசனின் புதல்வியாக அவதரித்து, பார்வதி என்னும் நாமத்தினை இறைவி பெற்றார்.

இறைவியின் இந்நிலைபற்றி அறிந்த இறைவன், கோபங்கொண்டு தக்கனைச் சங்காரம் செய்யத் திருவுளம் கொண்டார். சங்காரமூர்த்தமான உருத்திர மூர்த்தியினது சொரூபமாய் சிவபிரானது நெற்றிக் கண்ணினின்றும் வீரபத்திரமூர்த்தி தோன்றினார். இவ்வேளையில் உமாதேவியாரது கோபாக்கினியினின்றும், பத்திரகாளி தோற்றம் பெற்றார்.

வீரபத்திரர், பத்திரகாளி என்ற இரு பெயர்களிலும் காணப்படும் பத்திரம் என்ற சொல், நன்மை என்று பொருள்படும். சிவசக்தி அம்சமாகத் தோற்றம் பெற்ற வீரபத்திர மூர்த்தியையும், பத்திரகாளியையும் தோற்றம் பெறச் செய்து, ஆணவமயப்பட்ட தக்கனின் யாகசங்காரம் நடைபெற்றது. யாகசங்காரத்தின் பின் தக்கனும், ஏனையோரும் தமது தவறை உணரும் நிலையை ஏற்படுத்தி அருள் புரிந்து காப்பாற்றப்பட்டனர். பரம்பொருளான இறைவனை உள்ளத்திருத்தாது, யாகங்கள் செய்வதன் மூலம் நன்மைகள் ஏற்படாது துன்பமே எஞ்சும் என்பதையே மேலே கூறப்பட்ட கதை விளக்கியுள்ளது.

வீரபத்திர மூர்த்தியை வீரபத்ர எனவும் வழங்குவர். இச்சொல்லிலுள்ள வீர என்பது வீரத்தையும், பத்ர என்பது நன்மையையும் குறிக்கின்றது. எனவே வீரபத்திரமூர்த்தியானவர் வீரத்தினையும், நன்மையையும் பக்தர்களுக்கு நல்கும் அருள்கொண்டவர். வீரபத்திரர் தோன்றும்பொழுது பாதார விந்தங்களிலே தண்டை வீரகண்டையுடன் தோன்றியமையால், அவருக்கு வீரபத்திரர் என்ற பெயர் ஏற்பட்டதாகப் பிரபஞ்ச உற்பத்தி என்னும் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது. வீரபத்திர கோலத்தில் புரிந்த அருட்செயல்களை அடிப்படையாகக் கொண்டு, வீரபத்திரரை உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், முக்கண்ணன், சடையோன், வில்லி, குரோதன் எனப் பல நாமங்களால் அழைக்கும் வழக்குண்டு. வீரபத்திர மூர்த்திக்கு வேதாகமவழியிலும், வேதாகமத்திற்குப் புறம்பான வழியிலும் வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. வேதாகம முறையைப் பின்பற்றும் ஆலயங்களில் மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மகோற்சவ விழா இடம்பெறாத ஆலயங்களில் அலங்கார உற்சவங்களும், பொங்கல், திருக்குளிர்ச்சி போன்ற வழிபாடுகளும் இடம்பெறும். ஆகமமரபில் வீரபத்திரமூர்த்தியை வழிபடும்போது அவருக்குரிய தியான மந்திரத்தைக் கூறுவது மரபாகக் காணப்படுகின்றது.

வீரபத்திரரது வழிபாட்டிலே தைப்பூசம், சிவராத்திரி, சித்திரைப்பரணி, தை அமாவாசை, ஐப்பசிப்பரணி, என்பவற்றோடு மங்கலவாரம் எனப்படும் செவ்வாய்க்கிழமையும் சிறந்த விரத நாட்களாகக் கருதப்படுகின்றது. அறுசுவை அன்ன வகைகளும், பணிகார வகைகளும் இவருக்கு ஏற்புடையது. விரததினங்களிலே பொங்கல் உகந்தது. பொங்கல் சாதத்தோடு பணிகாரங்களையும், பழவகைகளையும் படைத்து மடை என்ற ரீதியில் வழிபடுவது மேன்மையானது. நோயுற்றோர் விபூதியினால் அபிஷேகம் செய்து அவ்விபூதியைப் பெற்று அணிவதனால், துன்பங்கள் நீங்கிச் சுகம் பெறுவர் எனப் பெரியோர் உரைத்துள்ளனர். இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட வீரபத்திரசுவாமி வழிபாடு, ஈழத்தில் பல்வேறிடங்களிலே காணப்படுகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தில் உடுப்பிட்டியிலுள்ள சந்திரசேகர வீரபத்திரசுவாமிகோயில் வரலாற்றுச் சிறப்புடையது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டது. இக்கோயிலின் வரலாறு தமிழகத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

தென்னிந்தியாவிலே காஞ்சிமாநகர் பல்வேறு சிறப்புக்களையும் கொண்டது. இங்குள்ள பண்டாரத்தோட்டம் என்னும் கிராமத்திலே வீரபத்திரரைக் குலதெய்வமாகக் கொண்ட சேதுகாவல சேனாதிராச மாப்பாணமுதலியார் வம்சத்திலே, சந்திரசேகர மாப்பாணமுதலியார் என்பவர் தீராத நோயால் பீடிக்கப்பட்டுத் துன்பமுற்றார். குளக்கோட்டு மகாராசாவின் பரம்பரையைச் சேர்ந்த இளவரசன் ஒருவன் இவரது நண்பராயிருந்தார். இந்த நண்பர் ஈழத்தின் வடபாலுள்ள கீரிமலைப் புனிததீர்த்தத்தைப்பறியும், இத்தீர்த்தத்திலே நீராடிக் குன்மநோய் நீங்கப் பெற்றோர் வரலாறுகளையும், தனது நண்பராகிய சந்திரசேகர மாப்பாண முதலியாருக்கு கூறி, கீரிமலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

நோய்நீங்கி நலம்பெறவிரும்பிய சந்திரசேகர மாப்பாணமுதலியார், தனது மனைவி பார்வதி மற்றும் புதல்வர்களாகிய தனபாலசிங்கம், குணபாலசிங்கம், பரம்பரைப் புரோகிதர், காசிப்பிராமணர் கோபாலக்குருக்கள் ஆகியோருடன் 1365 ஆம் ஆண்டு நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள வீரமாகாளியம்மன் துறையிலே வந்திறங்கினார். கீரிமலையை நோக்கிப் புறப்பட்ட சந்திரசேகரனும் ஏனையோரும், மேற்கே செல்வதற்குப் பதிலாகத் தென்திசையை நோக்கி நகர்ந்த காரணத்தால், அவர்கள் உடுப்பிட்டியை வந்தடைந்தனர்.

உடுப்பிட்டியில் இவர்கள் தங்கிய இடத்திலே ஒரு குளமும், காய்த்துக் குலுங்கிய மாமரமும் இருப்பதைக் கண்டு அவ்விடத்திலேயே தங்கினர். இவ்விடமே முருகன் பரிவார மூர்த்தியாக இப்பொழுது எழுந்தருளியுள்ள இடமாகும். இக்குளத்திலே சந்திரசேகரமாப்பாண முதலியார் தினமும் நீராடி வந்தார். இதன் பயனாகத் தீராத நோயாக விளங்கிய நோய் மாறி உடல்நலம் பெற்றார். தனது நோய் மாறியமைக்குத் தான் தங்கியிருந்த தலமே காரணம் என உணர்ந்தார். தான் தங்கியிருந்த இடத்திலே தனது குலதெய்வமான வீரபத்திர சுவாமிக்குக் கோயில் அமைக்க ஆவல் கொண்டார். தற்போது வீரபத்திசுவாமி கோயிலுள்ள இடத்திலே கோவிலைக் கட்டி, தான் சுகம் பெறக் காரணமாயிருந்த திருக்குளத்தையும் புனரமைத்துச் சந்திரக்குளம் எனப் பெயரிட்டார். தான் அழைத்து வந்த கோபாலக்குருக்களையும், மூத்தமகன் தனபாலசிங்கத்தையும் உடுப்பிட்டியில் விட்டு, ஏனையோருடன் தாய் நாடு திரும்பினார். இச்சம்பவங்களை உறுதி செய்வது போல வீரபத்திரசுவாமிகோயில் நிறுவப்பட்ட காணி, பண்டாரத்தோட்டம் என அழைக்கப்படுகின்றது.

சந்திரசேகர மாப்பாணமுதலியாரின் சந்ததியினர், இவ்வூரில் பிரபல்யம்பெற்று வாழ்ந்துள்ளனர். இரண்டாவது சந்திரசேகர மாப்பாண முதலியாரின் மகன் வீரகத்தி மணியகாரன். இவரது இரண்டாவது குமாரராகிய கதிர்காம உடையார் என்பவரால் கி.பி 1851 ஆம் ஆண்டு வீரபத்திரசுவாமி கோயில் புனரமைக்கப்பட்டு, கோயிலைச் சுற்றிச் சுற்று மதில் எழுப்பப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்தோடு கதிர்காம உடையார் தனது ஆதனங்களையும் கோயிலுக்குத் தர்மசாசனம் செய்து வைத்தார். இவ்வாண்டிலிருந்து இக் கோயிலில் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. கோவில் பரிபாலனம் சிறப்பாக நடைபெறக் கதிர்காமஉடையாரின் சந்ததியினர், நூற்றுக்குமேற்பட்ட பரப்புடைய ஆதனங்களை இக் கோயிலுக்குத் தர்மசாசனம் செய்துள்ளனர்.

*வளரும்...*

# பெண்களின் சுயத்தொழில் தொடர்பான குறிப்புகள்



இக்கால கட்டத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமனான பல வேலைகளை செய்கின்றனர், அது குடும்பமாக இருந்தாலும் சரி தொழிலாக இருந்தாலும் சரி அதில் திறம்பட செயற்படுகின்றனர். இருப்பினும் ஒரு சில பெண்கள் தன்னுடைய குடும்ப வேளைகளில் ஈடுபடுவதை மட்டும் கவனத்தில் கொள்கின்றனர். அவர்கள் அதையும் தாண்டி சுயமாக ஒரு தொழிலொன்றை மேற்றகொள்வதை பற்றி சிந்திக்க வேண்டும்.

சுயத்தொழில் என்பது எமக்கு வருமானத்தை மட்டுமல்லாமல் எமது கௌரவத்தையும் அதிகரிக்கின்றது. இவ்வாறு பெண்கள் சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் போதும் மற்றும் அதில் தொடர்ந்து ஈடுப்படும் போதும் கவனிக்க வேண்டிய சில விடயங்களை பார்க்கலாம்.

- **தோல்வி பற்றிய பயம் வேண்டாம்.** ஒரு தொழிலை ஆரம்பிக்கும் முன் அது தோல்வி அடையுமோ என எதிர்மறையாக யோசிப்பதை தவிர்க்க வேண்டும். தோல்வி பயம் எமது தைரியத்தை உடைத்து விடும் எனவே தோல்வி பற்றிய எண்ணமின்றி வெற்றியை மட்டுமே சிந்திக்க வேண்டும்.

- **எமக்கு பொருத்தமான தொழிலை இனங்காண வேண்டும்.** எமக்கு திறமை எதில் உள்ளது என இனங்கண்டு எமக்கு பொருத்தமான வேலையே மேற்றக்கொள்ள வேண்டும். இல்லையேல் அது தவறான முடிவுகளை தரக்கூடும்.

- **பிறரின் கருத்துக்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.** அதே சமயம் அதில் சரியானதை மட்டும் மனதில் எடுத்துக்கொண்டு எமது தொழிலில் பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

- **முதலீடு தொடர்பாக சிந்தித்து செயற்பட வேண்டும்.** நாம் தொழிலை ஆரம்பிக்கும் முன் போதிய அளவு முதலீட்டை திரட்டிக்கொள்ள வேண்டும். முக்கியமாக நாம் ஆரம்பிக்கும் சுயத்தொழிலை சிறிய கட்டத்திலிருந்து ஆரம்பித்து முன்னேற்றத்திற்கு கொண்டு செல்வது முதலீடு தொடர்பான பிரச்சினைகளை தவிர்க்கும்.

- **பொருத்தமான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளல்.** நாம் சுயத்தொழில் ஒன்றில் ஈடுப்படும் போது அதற்கான நேரத்தை முறையாக ஒதிக்கிக் கொள்ள வேண்டும். இதனால் எமது குடும்பத்தின் மீதான கவனமும் சிதறாது தொழிலும் சிறப்பாக இடம் பெரும்.

- **தொழிலை விளம்பரப்படுத்துதல்** இது எமது சுயத்தொழிலை மேலும் வளர வழி வகுக்கும் இதற்கென நாம் பாரிய அளவில் செலவிட தேவையில்லை. இக்காலத்தில் பெரும்பாலும் அனைவரிடமும் கையடக்க தொலைபேசி உள்ளது. அதில் எமது தொழில் தொடர்பான புகைப்படத்தை மற்றும் விளம்பரத்தை முகப்புத்தகம் போன்ற சமூக வலைத்தளங்கள் மூலம் பதிவு செய்யலாம் அது மட்டுமல்லாமல் உங்களுக்கென காணப்படும் நட்பு வட்டாரங்கள், குடும்ப உறுப்பினர்களிடமும் கூறுவது முயற்சியாண்மைக்கு பலமாக இருக்கும்.

- **முயற்சியாண்மை தெடர்பான சிறப்புத்தேர்ச்சி.** நீங்கள் ஆரம்பித்த தொழிலை பற்றி மேலும் நன்றாக அறிந்துக் கொள்ளுங்கள். மேலும் அது தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் இதனை இணைய வழி மூலமாகவோ அல்லது அனுபவமிக்கவர்கள் மூலமாகவோ அறிந்துக்கொள்ளலாம். இது தொழிலை மெம்மேலும் நிலைத்திருக்க செய்வதோடு தவறுகளை குறைக்கும்.

- **தொலை நோக்கத்துடன் செயற்பட வேண்டும்.** எப்பொழுதும் எமக்கு தொழில் தொடர்பான தூர நோக்கு இருத்தல் அவசியம் அப்போது தான் எமது தொழில் இடையில் தடுமாறாமல் சரியான வழியில் செல்லும்.

- **வரவு செலவு கணக்கை பராமரித்தல்.** இது மிகவும் அவசியமானதாகும். பெரிய அளவில் இதனை செய்ய முடியாவிடினும் சாதாரணமாக ஒரு குறிப்பு புத்தகத்தில் அனைத்து வரவு மற்றும் செலவுகளை எழுதி வைத்து மாத இறுதியில் கணக்கு பார்த்தால் எமது சுயத்தொழிலின் நீண்டநாள் பயணத்திற்கு அடித்தளமாக அமையும்.

- **இறுதியாக மிகவும் முக்கியமானது,** தன்னம்பிக்கையுடன் பிரச்சனைகளை எதிர்வு கொள்ளல். எமக்கு மனதில் தன்னம்பிக்கை இருந்தால் போதும் எதையும் இலகுவாக தடைகளின்றி சாதித்து விடலாம்.

மனதில் அச்சமின்றி உங்கள் சுயத்தொழிலில் அடி எடுத்து வைக்கவும், வெற்றி நிச்சயம்

**- இரா. சஹானா**


# 12–வது மலேசியத் திட்டம் அறிவிப்பு இந்திய மக்கள் பிரதிநிதிகள் ஆலோசனை



நக்கீரன்

கோலாலம்பூர், செ. 28:

மலேசியாவின் 12-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை திட்டமிட்டபடி பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் நேற்று செப்டம்பர் 27-இல் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.








அந்த சூட்டோடு நேற்று மாலையே இந்தியர் விவகார ஆலோசனைக் குழுவின் (ஐஏஏசி) கூட்டம் சுடசுட நடைபெற்றது. மலேசிய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தை புறநகர் மேம்பாட்டுத் துறை மேநாள் துணை அமைச்சரும் சுங்கை பூலோ தொகுதி மக்கள் நீதிக் கட்சி (பி.கே.ஆர்) நாடாளுமன்ற உறுப்பினருமான சுவராசா ராசையாவும் கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக செயல் கட்சி இந்திய தலைவர்களில் ஒருவருமான சாரலஸ் சந்தியாகோ ஆகிய இருவரும் வழிநடத்தினர்.

மலேசியவாழ் இந்தியர்களின், குறிப்பாக தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வு, சமூக ஒருமைப்பாடு, இந்தியர்களின் அரசியல்-பொருளாதார-கல்வி-சமூக மேம்பாடு குறித்தெல்லாம் விவாதிக்கவும் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய பிரச்சினைகள் குறித்து முடிவு செய்யவும் அண்மையில் உருவாக்கப்பட்ட இந்தக் குழுவின் இரண்டாவது கூட்டம் இது.

சிவராசா தலைமை வகிக்கும் இந்த ஐஏஏசி-யின் நேற்றையக் கூட்டத்தில், சிவராசா, சுங்கை சிப்புட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கேசவன் சுப்பிரமணியன், பேராக் மாநில பத்து காஜா நாடாளுமன்ற ஜசெக உறுப்பினர் வ.சிவகுமார், பேராக் ஈப்போ பாராட் ஜசெக எம்பி மு.குலசேகரன், சிலாங்கூர் மாநிலம் கிள்ளான் ஜசெக எம்பி சார்லஸ் சந்தியாகு, பினாங்கு மாநிலத்தின் பத்து காவான் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் மலேசிய நாடாளுமன்றத்திர்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரே தமிழ்ப்பெண் எம்பியுமான கஸ்தூரி பட்டு, கெடா மாநிலத்தின் பாடாங் செராய் எம்பி கருப்பையா முத்துசாமி, கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச பத்து தொகுதி எம்பி பி.பிரபாகரன் ஆகியோருடன் பிகேஆர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி.குணராஜ், ஜசெக சட்டமன்ற உறுப்பினர்களான கணபதி ராவ், ப. குணா, க. சாமிநாதன், மாநில ஆட்சிமன்ற உறுப்பினர் அருள்குமார் ஜம்புநாதன் ஆகியோருடன் இன்னும பலரும் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் எதிரணியைச் சேர்ந்த 14 இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்திருந்தாலும் இந்திய சமுதாய நலன் சார்ந்து குரல் கொடுப்பதற்காக ஓர் அணியினராக செயல்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.









12-ஆவது ஐந்தாவதுத் திட்டத்தில் இந்தியர்களுக்கான சிறப்பு அம்சம் ஏதும் இடம்பெறாவிட்டாலும் வழக்கமான அம்சங்கள் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகள், இந்திய சமுதாயத்திற்கான சிறப்பு ஒதுக்கீட்டிற்காக அனைத்து இந்திய எம்பிக்களும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர்.

இதற்கு முன் நாட்டில் நிறைவேற்றப்பட்ட 11 ஐந்தாண்டுத் திட்டங்களின்வழி இந்திய சமுதாயம் எட்டிய பலன், நிறைவேறாத வாக்குருதிகள் குறித்தெல்லாம் முறையாக தொகுக்கப்பட்டு, அது அரசின் பார்வைக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும் என்றனர்.

நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு போதிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை. நான்கு, ஐந்து மணி நேரம் காத்திருக்கும் வேளையில், ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்படுவதால் தொகுதி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினை பற்றி எடுத்துரைக்க போதிய காலஅவகாசம் கிட்டுவதில்லை என்ற புகாரும் முன்வைக்கப்பட்டது.

ஐந்தாறு எம்பிக்களைக் கொண்டிருக்கும் கட்சிகள் எல்லாம் அமைச்சர் பதவிகளையும் மற்ற பொறுப்புகளையும் பெறுகிறபோது, நாம் 14 பேரும் ஒன்றுசேர்ந்து பிரதமரிடம் நமக்கான கோரிக்கையை முன்வைக்கலாம் என்று கருத்து தெரிவித்தனர்.

இந்திய சமூக நலத்திற்காக மித்ரா என்னும் அமைப்பு மூலம் ஒதுக்கப்படும் நிதி பரிவர்த்தனையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்பதுடன் அதனால் இந்திய சமுதாயம் அடையும் முன்னேற்றம் குறித்தும் எந்தத் தரவும் இல்லை என்பதால், இதை ஓர் அறவாரியத்தின் மூலம் நிருவகிக்க முயற்சி மேற்கொள்ளலாம். இதன் தொடர்பில் நாம் வரையறை செய்துகொண்டு அதன் பின் அரசாங்கத்தை அணுகலாம என்றும் கருத்து பரிமாறப்பட்டது.

சாதாரண பொதுமக்களுக்கு ஐந்தாண்டுத் திட்டம் என்றால் என்னவென்றே தெரியவில்லை இது என்ன 12-ஆவது திட்டமா? அப்படி யென்றால் இதற்கு முன் பதினோரு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதா என்றுகூட ஒரு சிலர் கேள்வி எழுப்புகின்றனர் என்று இரண்டொரு மக்கள் பிரதிநிதிகள் தங்களின் அனுபவத்தை தெரிவித்தனர்.

மலேசியத் தமிழர்களின் தாய்மொழி வளர்ச்சிக்கு ஆதாரமான தமிழ்ப்பள்ளிகளின் மறுமலர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து முறையான அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை அனைவரும் ஒருமுகமாக அரசுக்கு கொடுக்க வேண்டும். இதன் தொடர்பில், ஒவ்வொரு பள்ளி குறித்தும் துள்ளியமான விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும் என்றனர்.

இந்திய இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுவது பரவலாக்கப்பட வேண்டும். அதைப்போல உயர்க்கல்வி நிலையங்களில் இந்திய மாணவர்களுக்கு உரிய இடம் கிடைப்பதையும் நாம் உறுதி செய்ய வேண்டும் என்றனர்.

பெட்டாலிங் ஜெயா, பண்டார் உத்தாமா, லெபோ பண்டார் உத்தாமாவில் அமைந்துள்ள பண்டார் உத்தாமா சிட்டி செண்டர் வளாகத்தில் சிவராசா தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் சமூக நலம், கல்வி, தொழில் கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி, இந்து அறப்பணி வாரியம், பி-40 தரப்பு குடும்பங்களுக்கான மறுமலர்ச்சி போன்ற தலைப்புகளில் தனிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு அவற்றில் இடம்பெற்றுள்ள மக்கள் பிரதிநிதிக-ளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டன.

அக்டோபர் 27-இல் அறிவிக்கப்பட இருக்கும் 2022 நிதி நிலை அறிக்கையில், இந்திய சமுதாயத்திற்கான சிறப்புத் திட்டங்கள் இடம்பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்ட வேளையில், அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் நிதி யாவும் முறையாக பயன்படுத்தப் பட வேண்டுமே அல்லாமல் அதில் குறிப்பிட்ட தொகையை திருப்பி அளித்தால், அதனால் காலப்போக்கில் பின்னடைவு ஏற்படும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. தெக்குன் சிறு-குறு தொழில் கடன் சம்பந்தமாக பெறப்பட்ட நிதியில் ஒருபகுதி திருப்பி அளிக்கப்பட்டதும் குறித்து நினைவுகூரப்பட்டது.







நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றும் சேவை குறித்து, பொதுமக்களிடம் அதிருப்தி நிலவுவதற்குக் காரணம் அவர்களுக்கு உரிய முறையில் தகவல் கிடைக்கவில்லை என்பதுதான். எனவே, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு, கடப்பாடு குறித்தெல்லாம் அடிக்கடி நாடாளுமன்றத்தில் செய்தியாளர் கூட்டத்தை நடத்த வேண்டும் அல்லது செய்தி அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்தையும் ஒருசிலர் முன்வைத்தனர்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஐயா அவர்களின் 93 ஆவது பிறந்த நாள் அக்டோபர் 1 ஆகும் – சில இனிய நினைவுகள்



பெரிய மனிதர்களையும் - மகாபுருஷர்களையும் கலாமேதைகளையும் அவர்களது பிறந்தநாள் - நினைவு நாட்களில் நினைத்து போற்றுவதும் - வணங்குவதும் ஒரு சமூக கடமை என்று கருதுபவன் நான்!

எல்லாவற்றிலும் - அல்லது தான் வரித்துக்கொண்ட பணியில் என்றும் எக்காலத்தும் "நானே முதல்வன்" என்று நிலைநாட்டியது போன்று ஐயா அவர்கள் அவதரித்த நாளும் முதல் நாளாகும்! அக்டோபர் 1ஆம் நாள் கலை குரிசில் சிவாஜி ஐயா ஒருவருக்கே உரிய பொன்னாளாகும்! அந்த பொன்னான பிறந்தநாளை,

"போற்றி பாடடி பெண்ணே
தேவர் காலடி மண்ணே!" என போற்றிடுவோம்.

சிவாஜி ஐயாவின் பெருமையையும் புகழையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துக் கூறும் அவரைப் போன்று வித்தை கற்ற திரு கமலஹாசன் எழுதிய "தேவர் மகன்" படத்தில் ஒரு காட்சியில் "....அதெலாமிருந்து பார்க்க நான் இருக்க மாட்டேன், ஆனால், விதை நான் போட்டது", என்பார் சிவாஜி ஐயா!

முக்காலும் உண்மை. கலையுலகில் அவர் போட்ட விதை ஆல் போல் தழைத்து, அறுகு போல் பரவி வருகிறது.

அந்தப் பெரியவருக்கு கலையுலக துரோணாச்சியாருக்கு என்றும் உலகத் தமிழர்களின் வணக்கங்கள்!

என்னைப் பொறுத்தளவில் எப்படி எனது தாய், தந்தையரை நினைவில் வைத்து பூஜிக்கின்றேனோ, அவ்விதமே எங்கள் கலையுலகப் பிரம்மா சிவாஜி ஐயாவையும் மரியாதை செய்து வணங்குபவன் நான். அவர் தமிழர்களின் சொத்து. அவரை உணர்வதற்கே ஒரு தகுதி வேண்டும். ஐயா அவர்கள் பற்றி சுமார் 60 ஆண்டுகளாக பேசியும் எழுதியும் வருபவன் நான். நான் எனது தாய் மொழியை நேசிப்பதற்கும் - வாசிப்பதற்கும் செவிமடுத்து சுவைப்பதற்கும் பேசிப்பேசி இன்புறுவதற்கும் அவரும் எனக்கு ஒரு ஆசான் ஆவார்! பல்வேறு தருணங்களில் சிவாஜி ஐயா பற்றிய செய்திகளை - புதினங்களை - பெருமைகளை எழுதி வந்துள்ளேன்.

இம்முறை, "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என அய்யன் வள்ளுவனார் எழுதி வைத்தது போன்று "வசை ஒழிய வாழ்ந்தவர். நமது சிவாஜி ஐயா பற்றி சில செய்திகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"பராசக்தி" வெளிவந்து ஐயா அவர்களின் புகழ் கடல் கடந்து பரவிய காலமாகிய 52 களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் - மூளாய் ஆஸ்பத்திரி வளர்ச்சிக்கும் விஸ்தரிப்புக்கும் - "என் தங்கை" நாடகம் மூலம் வசூலாகிய முழுத்தொகையையும் (அந்நாளில் சுமார் ரூபாய் 25000) நன்கொடையாக வழங்கியவர் பற்றி முன்பு எழுதியுள்ளேன்.

சிவாஜி ஐயா செய்த தானதர்மங்கள் பற்றி விளம்பரம் எதுவும் விரும்பாததால் பலருக்கு செய்திகள் தெரிவதில்லை. சில நல்ல தகவல்களை இந்நாளில் மீண்டும் நினைவு படுத்த விளைகிறேன்.

அவரே மீண்டும் உங்களுடன் பேசுகிறார்... "எனக்கு உயர்ந்த புகழை கொடுத்தது "சிவாஜி" என்ற பெயர்தான். அதை எப்போதும் மறந்ததில்லை. அவருக்காகவும் நாட்டுக்காகவும் இதைச் செய்தேன். ஒருமுறை மகாராஷ்டிரத்திலுள்ள கொய்னா அணைக்கட்டு உடைந்து விட்டது. அப்போதைய மகாராஷ்டிர முதலமைச்சராக இருந்த வை. பி சவான் எல்லோரும் பண உதவி செய்யுங்கள் என்று கேட்டபோது நான் ஒருவன்தான் 11 லட்சத்தை நன்கொடையாக வழங்கினேன்.

அதுமட்டுமல்ல, பம்பாயில் சிவாஜி திடலில் இருக்கிற பெரிய சிவாஜி சிலையை அமைக்க பெரும் பங்கு வகித்தேன். பம்பாய் மக்கள் என்னையும் மராட்டியக்காரர் என்றே நினைத்தார்கள். சிவசேனா இயக்கத்தவர்கள் என்னை "சிவாஜிராவ்" என்றே அழைத்தார்கள்.

ஒரு முறை நமது பிரதமராகவிருந்த "லால் பகதூர் சாஸ்திரி" தேச நலனுக்காக உதவுங்கள் என்று தமிழகம் வந்திருந்தார். எனது மகளின் திருமணத்திற்காக வைத்திருந்த தங்க ஆபரணங்களையெல்லாம் எனது மனைவி அணியச் சொன்னேன். அவளையும் அழைத்துக்கொண்டு பிரதமரை பார்க்கப்போனேன். பிஆர் பந்துலு அவர்கள் நூறு சவரன் உள்ள தங்கப் பேனாவை "ஸ்கூல் மாஸ்டர்" படத்தில் கௌரவ வேடத்தில் நடித்ததற்காக பரிசாகக் கொடுத்திருந்தார். அந்த தங்கப் பேனாவை பிரதமரிடம் வழங்கினேன். இதை கவனித்துக் கொண்டிருந்த எனது மனைவி கமலா, என்ன உத்வேகம் வந்ததோ, "திடீரென ஆவேசம் வந்தது போல் அணிந்திருந்த முழு ஆபரணங்களையும் கழட்டி பிரதமர் நிதிக்கு வழங்கியதோடு, தாலிக்குண்டையும் மூக்குத்தியையும் கழற்றப் போனாள்... அப்போது, சாஸ்திரி (Very Touching.... Very Touching....) என்று சொல்லியவாறு கமலாவை தடுத்தார். சாஸ்திரியின் மனைவியார் ஓடிவந்து கமலாவை கட்டிப்பிடித்து கண் கலங்கினார். இச்சம்பவம் என்னையும் கலங்கடித்து விட்டது.

அதேபோன்று இந்திய - சீன யுத்த சமயத்தில் தேச நலனுக்காக, எல்லா நடிகர்களையும் அழைத்தேன். கவிஞர் கண்ணதாசன் "ரத்தத்திலகம்" படம் எடுத்த சமயம் அது. அவரது அண்ணன் ஏ எல் எஸ் தலைமையில் பத்மினி - சாவித்ரி - பாடகி சுசீலா, சந்திரபாபு உள்ளிட்ட பலரையும் அழைத்து கொண்டு நாட்டின் வட எல்லைக்கு சென்று வீரர்களுக்கு கலைநிகழ்ச்சி வழங்கி உற்சாகம் கொள்ளச் செய்தோம்.

நாட்டிற்கு எது நன்மையோ அதை செய்து கொண்டிருந்தேன். குழந்தைகளின் படிப்புக்காக பாடுபட்ட எனது தலைவர் காமராசர் கொண்டுவந்த சத்துணவுத் திட்டத்திற்காக மதிய நேர உணவுக்காக நேருஜி இடம் ஒரு லட்சம் வழங்கினேன். சிறுவயதில் கல்வி பெறும் வாய்ப்பை இழந்து நாடகத்தில் சேர்ந்த நான், "நம் நாட்டின் எல்லா குழந்தைகளும் கல்வி பெற வேண்டும்" என்று வாழ்நாள் முழுவதும் விரும்பி கொண்டிருப்பவன்.

என் வீட்டின் (அன்னை இல்லம் முகப்பில் பார்த்திருப்பீர்கள், ஒரு குழந்தை பாடப் புத்தகத்தை வைத்துக் கொண்டு வாசிப்பது போன்று சிலை வைத்திருக்கிறேன். "நம் குழந்தைகள் எல்லாம் நல்ல கல்வி பெற்று உயர வேண்டும் என்பதே என் ஆசை!"

சிவாஜி ஐயாவின் விருப்பு நாட்டுக்கு அவசியமானது எல்லாக் கலைஞர்களும் தங்கள் வசதிப்படி சிவாஜி ஐயாவின் பிறந்த நாளில் நல்ல பணிகளுக்காகவும், நாட்டு நலனுக்காகவும் உதவ முன்வரவேண்டும் என்பதே எனது ஆசையும் கூட!

"நல்லதை நினையுங்கள்
நன்மையே பெருகும்!

**- வீணை மைந்தன்**

(விரைவில்... தமிழ் சினிமாவில் மகாகவி பாரதியார் பாடல்கள்)

நீங்கள் 1 ஆம் நிலை Amazon வேர்ஹவுஸ் அசோசியேட்டா?

$50 பெற வேண்டுமா?

இந்த சிறிய கருத்துக்கணிப்பை பூர்த்தி செய்யுங்கள்
www.surveypage.ca/ut21 *

உங்களது தனிப்பட்ட தகவல்கள் அல்லது உங்களது அடையாளத்தை வெளிப்படுத்தும் தகவல்கள் Amazon உடன் பகிரப்படாது.

*கருத்துக்கணிப்பை பூர்த்தி செய்து சமர்ப்பித்த 14 நாட்களில் உங்களுக்கு $50 Visa பரிசு கூப்பன் அனுப்பப்படும், அதை ஆன்லைன் அல்லது கடைகளில் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

# அன்பின் தொனி - 625

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பரிசுத்தம் என்றால் என்ன?**

பரிசுத்ததைக் குறித்து மேலே பார்த்த விடயங்களை நோக்குமிடத்து, “பரிசுத்தம்” என்றால் என்ன என்ற கேள்வி எழும்புகிறது. பரிசுத்த நிலையில் இருப்பதை பரிசுத்தம் என்கிறோம், அது ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் நிலையை வெளிப்படுத்துகிறது. அது ஒரு ஆலயத்தையோ, சபையையோ, ஒரு சமயப் பிரிவையோ சார்ந்தவர்களைக் கருதுவதல்ல. அல்லது ஒரு ஆலயமோ, சபையோ, அவற்றின் பெயர்களிலே “பரிசுத்தம்” என்ற சொல்லை வைப்பதனால் அதைச் சேர்ந்தவர்கள் பரிசுத்தமாகிவிட முடியாது. அதேவேளை சில சந்தர்ப்பங்களில் அப்படிப் பெயரையுடைய ஆலயத்தில் அல்லது சபையையில் உள்ளவர்கள் உண்மையாகவே பரிசுத்தர்களாய் இருக்கலாம். இப்படியாக பரிசுத்தம் என்றால் என்னவென்பதை தெளிவுபட அறிந்து செயற்படவேண்டும்.

அடுத்து வரக்கூடிய கேள்வி “எப்படி பரிசுத்தமில்லாத ஒரு பாவி, பரிசுத்தம் அடையலாம்”? மேலும் “அவன் பரிசுத்தம் அடைந்தபின் எப்படி பாவமான சூழ்நிலையிலும், பாவச்சோதனைகளிலும் தன் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வான்”?

இக்கேள்விகளுக்குப் பதிலாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது: முதலாவது தேவனால் ஒரு அற்புதம் நடவாமல் ஒரு பாவி பரிசுத்தமாக்கப்படவோ, தொடர்ந்து அதில் நிலைத்திருக்கவோ முடியாது. “தேவனால் சகலதும் கூடும்” மேலும் வேதத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் தேவனுடைய கட்டளைகளின்படி நடக்கவேண்டும்.

ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேற ப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. - **1 பேதுரு 1: 13-19**

**அற்புதத்தின் முதற்பகுதி**

அற்புத்தின் முதற்பகுதியாக ஒரு பாவி, தான் பாவி என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்காக மனஸ்தாபப் பட்டு, விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் இயேசுவிடம் வரவேண்டும். அப்பொழுது அவன் தேவனுடைய கிருபை வரமாக இலவசமான இரட்சிப்பையும், நித்திய ஜீவனின் நிச்சயத்தையும், ஆவியின் வழி நடத்துதலையும் கிறிஸ்து இயேசு மூல மாக பெற்றுக்கொள்கிறான்.

பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். **- ரோமர் 6: 23**

இப்படியாக ஒரு பாவி ஒரு புதுப்பிறவியாக, பழயன ஒழிந்து சகலதும் புதியனதாக, வாஞ்சையோடு தனது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உணவாக வேத வசனத்தைப் படிப்பதிலும், ஜெபிப்பதிலும், ஆவிக்குரிய வல்லமையோடு பாவச் சோத னையை எதிர்த்து நிற்கவும் முற்படுகிறான். அப்பொழுது தேவன் அவனுக்குக் கொடுத்த பரிசுத்த ஆவியினால் அவனை ஒரு புதுப்பிறவியாக்குகிறார்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது, அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். **- 2 கொரி. 5: 17-18**

**அற்புதத்தின் இரண்டாம் பகுதி**

அற்புதத்தின் இரண்டாவது பகுதியாக இரட்சிக்கப்பட்ட மனிதனுக்குள் தேவன் நற் கிரிகைகளை நடப்பிற்கிறார். ரோமர் ஆறாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாக:

ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்தி ருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம்மரித் தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்.

தொடரும்...


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு




MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.


நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

# மரண அறிவித்தல்



பிறப்பு:
14-10-1952

இறப்பு:
23-09-2021

## திரு. ஜெயக்குமார் சுந்தரலிங்கம் (ஜே)

(Toronto Citi Bank- Credit Analyst)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், ரொரண்டோவை வசிப்படமாகவும் கொண்டவரும், ஜே (Jey) என்று அழைக்கப்பட்டவருமான ஜெயக்குமார் சுந்தரலிங்கம் அவர்கள் புரட்டாசி மாதம் 23ம் திகதி (23-09-2021) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் சுவாமிநாதன்பிள்ளை, காந்தி சேகாராஜசிங்கம் ஆகியோரின் அருமைப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல், மீனாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும்,
ஜமுனாவதியின் அன்புக் கணவரும்,
காலஞ்சென்ற சிறீகாந்தன், ராஜகுமார், காலஞ்சென்ற சுந்தரகுமார், ராஜீ, லக்ஷ்மி, வித்யா ஆகியோரின் அன்பு சகோதரரும்,
அஜந், மீனா, மிதில்லா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 27-09-2021 திங்கட்கிழமை அன்று 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, ஈமைக்கிரியைகள் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: ஜமுனா - (416) 535-9199
மிதில்லா - (647) 462-2982

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE
TRANSMISSION
RUSTPROOFING
OILCHANGE
TYRES
AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1330 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 1, 2021

# கனடாவில் வாழ்ந்த கர்நாடக இசைக் கலைஞர் வர்ண இராமேஸ்வரன் காலமானார்



யாழ்ப்பாணம் அளவெட்டி சிறுவிளான் கிராயட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான "ஈழத்து இசைவாருதி" கர்நாடக இசை மற்றும் மிருதங்கக் கலைஞர் வர்ண இராமேஸ்வரன் அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தியை எமது வாசக அன்பர்களோடும் அவரை நேசித்த இசை ரசிகர்களோடும் பகிர்ந்து கொள்கின்றோம்.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

# ஸ்காபரோ மருத்துவமனைகளுக்கு ஒன்றாரியோ அரசால் 26 மில்லியன் டாலர்கள் நிதி வழங்கப்பட்டது




ஒன்ராறியோ மாநிலத்திலுள்ள நோயாளர்களுக்கு உயர்தர பராமரிப்பினை வழங்குவதற்கென ஒன்றாரியோ அரசு ஸ்காபரோ சுகாதார கட்டமைப்புக்கு 26.83 மில்லியனுக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்த்தொற்றால் உருவான நிதி நெருக்கடியிலிருந்து மருத்துவமனைகளை விடுவிப்பதற்கு உதவுமுகமாக முன்னரே அறிவிக்கப்பட்ட 1.2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் ஒரு பகுதியான இந்நிதியானது, மருத்துவமனைகளின் மீதான நிதியியல் அழுத்தத்தினைக் குறைப்பதுடன் ஒன்றாறியோ வாழ் மக்களின் மருத்துவ தேவைகளுக்கும் அவர்களுக்கான உயர்தர சேவையை தொடர்ந்து வழங்குவதற்கும் பயன்படும்.

*(தொடர்ச்சி உள்ளே 24ம் பக்கத்தில்)*

# மிசிசாகா மாநகரில் கடந்த சனிக்கிழமை SAFFRON SPICE KITCHEN என்னும் உணவகம் திறந்து வைக்கப்பெற்றது




மிசிசாகா மாநகரில் கடந்த சனிக்கிழமையன்று SAFFRON SPICE KITCHEN என்னும் பெயரில் உணவகம் ஒன்று திறந்து வைக்கப்பெற்றது.
**4646 Heritage Hills Blvd. Unit - 15, Mississauga - L5R 1Y3** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள இந்த உணவகத்தின் திறப்பு விழாவில் நண்பர்கள். உறவினர்கள். வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து சிறப்பித்தார்கள்.
கொத்து ரொட்டி மற்றும் சில உணவு வகைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பல சமையல் வல்லுனர்கள் இங்கு பணியாற்றுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது தொலைபேசி இலக்கம்- 416 457 8609

# கனடா 'ரொறன்ரோ மனித நேயக் குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பெற்றன.

கனடாவில் இயங்கிவரும் "ரொறன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் ***(TORONTO VOICE OF HUMANITY)*** ஏற்பாட்டில் கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர்களான திருவாளர்கள் பாஸ்கரன் சின்னத்துரை மற்றும் என்கேஎஸ் - கேதா நடராஜா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் வாழும் வாழ்வாதார உதவிகள் தேவைப்பட்ட 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன. *(தொடர்ச்சி உள்ளே 24ம் பக்கத்தில்)*




# 'கனடா உதயன்' பிரதியொன்றை தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன் பெற்றுக்கொண்டார்



அண்மையில் வெள்ளி விழாவைக் கொண்டாடிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதி ஒன்றை உதயன் நிறுவனத்தின் தமிழக பிரதிநிதி ஆர்.பிரகாஷ் அண்மையில் தமிழக சுற்றுலாத் துறை அமைச்சரிடம் வழங்கினார். இந்த சந்திப்பு தமிழக சட்டசபை வளாகத்தில் இடம்பெற்றது

TORONTO CHRISTIAN CHURCH
Scarborough East
ரொறன்ரோ கிறிஸ்தவ திருச்சபை
Grand Opening
You and your family are invited to the grand opening of our new location and celebration with GOD!
OCT 02 SATURDAY
11:00 a.m.
585 Middlefield Road, Unit 7 & 8
Scarborough
Pastor Sothy 647.409.8966

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker